
# வளை ஓசை

## நாதம்-4



பிரதேச கலாசார பேரவை,
பிரதேச செயலகம்,
கண்டாவளை,
கிளிநொச்சி.

# வளை ஓசை

**நாதம் - 04**

**2014**

வெளியீடு:

---

**பிரதேச கலாசார பேரவை,**
பிரதேச செயலகம்,
கண்டாவளை,
கிளிநொச்சி.

# நூல் விபரம்:

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | "வளைஓசை" (நாதம் 04) |
| நூல்வகை | : | ஆண்டிதழ் |
| முதற்பதிப்பு | : | ஐப்பசி,2014. |
| தொகுப்பு | : | மலர்க்குழு,<br>பிரதேச கலாசார பேரவை,<br>பிரதேச செயலகம்,<br>கண்டாவளை. |
| பதிப்புரிமை | : | பிரதேச கலாசார பேரவை,<br>பிரதேச செயலகம்,<br>கண்டாவளை. |
| வெளியீட்டெண் | : | 06 |
| தாள் வகை | : | 70 gsm |
| பிரதிகள் | : | 350 |
| அட்டைப்படம் | : | க.விஜயந்தன் |
| அச்சுப்பதிப்பு | : | நிசா ஆட்ஸ்,<br>புன்னைநீராவி. |

பிரதேச செயலகம்-கண்டாவளை ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය කණ්ඩාවලේ

-1989-

DIVISIONAL SECRETARIAT, KANDAWALAI

கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவை

பண்பாடு வளம்பெற கரம் இணைப்போம்

பிரதேச செயலகம் கண்டாவளை.

DIVISIONAL SECRETARIAT, KANDAWALAI

# தமிழ் மொழி வாழ்த்து



வாழ்க நிதந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் மளந்திடும்
வன்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

(வாழ்க)

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!

(வாழ்க)

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**சி.சுப்பிரமணிய பாரதி**

# பிரதேச கலாசார பேரவைக் கீதம்

### பல்லவி

வளம் கொழிக்கும் கண்டா வளை வாழ்கவே - எம்
வாழ்வினில் வற்றாத ஊற்றாகவே - என்றும்

(வளம்)

### அனுபல்லவி

உளம் களிக்கும் கூத்துக்கலை செழிக்கும் - எம்மை
உயர்த்தும் ஆலயந்தொறும் பொங்கலும் பூசையுமாய்

(வளம்)

### சரணங்கள்

நெல் வயற் பசுமை நம் கண்களை நிறைக்கும்!
நெய்தலின் மீன்வளம் செல்வங்கள் கொழிக்கும்!
கல்வியை வளர்க்கின்ற கூடங்கள் எங்கும்!
கைத்தொழில் ஓங்கிடும் அற்புதம் எங்கும்!

(வளம்)

எளிமையும் நேர்மையும் அணியெனப் பூண்பார்
இறையடி தொழுவதில் பேரின்பம் காண்பார்!
உழுதுண்ணும் வாழ்க்கையின் மகத்துவம் உணர்வார்
ஓய்வறியார் எங்கள் உயிர்களில் வாழ்வார்!

(வளம்)

**"சோ.ப."**

# மலர்க் குழு

**திரு.த.முகுந்தன்**
கலாசாரப்பேரவையின் தலைவரும்,
பிரதேசசெயலாளரும்,
கண்டாவளை.


**திரு.சி.குகதாசன்,**
கணக்காளர்,
பிரதேசசெயலகம்,
கண்டாவளை.

**திரு.த.அமலதாஸ்**
கலாசாரபேரவையின் செயலாளரும்,
கலாசார உத்தியோகத்தரும்,
கண்டாவளை.

**செல்வி.மு.நடனவதி,**
பேரவையின் உப செயலாளர்,
கலாசாரபேரவை,
கண்டாவளை.

**திரு.பூ.ராஜ்வினோத்,**
உதவி திட்டமிடல்ப்பணிப்பாளர்,
பிரதேசசெயலகம்,
கண்டாவளை.

**திரு.தி.பிரபாகரன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேசசெயலகம்,
கண்டாவளை.



# மலரின் உள்ளே.......

## ஆசிச் செய்திகள்


1. புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயகுரு. ........ xi
2. பங்குத்நதை, புனித அந்தோனியார் ஆலயம். ........ xii


## வாழ்த்துச் செய்திகள்


1. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் வாழ்த்துச் செய்தி. ........ xiii
2. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி. ........ xv
3. வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி. ........ xvi
4. கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி. ........ xvii
5. வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி. ........ xviii
6. பிரதேச செயலாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி. ........ xix
7. வெளியீட்டு உரை ........ xx


## ஆக்கங்கள்


1. “கண்டாவளை எங்கள் ஊர்” (அனுபவ கட்டுரை) ........ 1
2. கையை கட்டி நில்லாதே! ........ 6
3. வாழ்வியல் நோக்கில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் ........ 7
4. உணர்வை தகர்ப்போம்! ........ 12
5. திராவிட மொழிக்குடும்பம் ........ 13
6. வரவாகும் நேரமும் செலவாகும் பண்பாடும் ........ 15
7. சிலப்பதிகாரம் ஓர் ஆணாதிக்கச் சித்தரிப்பு ........ 18
8. மனிதநேயமே உயிர்த்தெழுந்து வா...... ........ 22
9. புனித சகாய அன்னை ஆலயம் - முரசுமோட்டை ........ 24
10. இந்த நிலை மாற்ற உழைத்திடுவோம் எல்லோரும் ........ 27
11. குழந்தை வளர்ப்பும் பெற்றோரும் ........ 28
12. அவலமே பெண்களின் வாழ்வா? ........ 31

13. முரசுமோட்டை சேற்றுக்கண்டி அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோயில் ஓர் வரலாற்று நோக்கு ........ 34
14. மௌனிக்காத உண்மைகள்....... ........ 37
15. "பிஞ்சு மழலையை அள்ளி அணைத்து" ........ 38
16. பெண்ணின் மேன்மை ........ 43
17. ஆடவரே, கேளீர்! ........ 45
18. தட்டுவன்கொட்டி கண்ணகி அம்மன் வித்தியாலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ........ 47
19. கலைஞன் ........ 51
20. "தேனீக்கள்" (சிறுகதை) ........ 53
21. விழித்தெழு..... ........ 56
22. பிறந்த ஊரும் வாழ்ந்த கதையும் (அனுபவ பகிர்வு) ........ 58
23. "நம்பிக்கை" ........ 66
24. முரசுமோட்டை இளையோர் மன்றமும் புத்தொளி கலாமன்றமும் ........ 67
25. இன்னும் ஏன் தாமதம் ? ........ 70
26. பூரணமான வாழ்க்கையை அமைத்துக்கொள்வோம். ........ 73
27. "சமாதானம்" ........ 75
28. வீட்டுத் தோட்டமும் வாழ்வின் எழுச்சியும் ........ 78
29. தட்டுவன்கொட்டி கிராமம் ........ 80
30. மக்களுக்காக நாம்....? ........ 85



# ஆசிச் செய்தி

ஈழ மணித் திருநாட்டின் கிளிநொச்சி மாவட்டத்திலே நன் நீர் வளமும் நல் விளை தரும் செந் நெல் வயல்களும் சூழ்ந்துகாணப்படும் அழகிய கிராமமாகவும் மிகவும் தொன்மையான கலை, கலாசார சம்பிரதாய பண்பாட்டு விழுமியங்களை தன்னகத்தே கொண்டு தனக்கென தனியான ஓர் இடம்பிடித்த பிரதேசமாக இக் கண்டாவளைப்பதி விளங்குகின்றது. இப் பிரதேசத்தின் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினரின் ஏற்பாட்டில் ஆண்டிதழாக வளையோசை மலர் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்வருடமும் நான்காவது ஆண்டாக இம் மலர் வளை நாதம் நாலாக வெளிவருகின்றது. இவ்வாறான கலைப் பொக்கிஷமலருக்கு புளியம் பொக்கணை ஸ்ரீ நாகதம்பிரான் திருவருள் துணை கொண்டு தொடர்ந்து இவ்வருடமும் ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெரும கிழ்வடைகின்றேன்.

வளந்து வரும் இளம் சமுதாயத்திற்கு மட்டுமல்லாது எல்லோருடைய மனதிலும் இக் கலை கலாசார விழுமியங்கள் நிறைந்து, இப்பிரதேசம் மட்டும் அல்லாது ஏனைய பிரதேசங்களும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து தமிழ் பண்பாடு தலை நிமிர இக் கலைப்பொக்கிஷம் வழிவகுக்கும். இவ் வளையோசை மலர் சென்ற ஆண்டுகளைப்போன்று இவ்வருடமும் சிறப்பாக வெளிவரவும், இக்கலாசார விழாவை முன்னின்று நடாத்திவரும் கலாசார பேரவையினருக்கும், இம்மலர் வெளிவர கலை இதழ்களை வழங்கிய கலைஞர்களுக்கும், இம் மலர் வெளியீடுக் குழுவினருக்கும், இம்மலர் வெளியீட்டு விழா சிறப்புற நடைபெறவும் நாகதம்பிரான் நல்லாசியோடு எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ் கந்தராஜக் குருக்கள்,**
**நாகதம்பிரான் கோவில்,**
**புளியம்பொக்கணை, பரந்தன்.**



# ஆசிச் செய்தி

ஒரு பிரதேசத்தை தனித்துவமாக அடையாளப்படுத்துவது அப்பிரதேசத்து வரலாற்று மரபுகளும் பண்பாடுகளும் வாழ்வியல் முறைகளுமே.

பிரதேச கட்டமைப்புக்களையும் வரலாற்று மரபுகளையும் பண்பாடுகளையும் பேணி காக்கப்பட வேண்டிய கட்டாயம் அந்தப்பிரதேசத்தில் வாழும் ஒவ்வொருவரின் உரிமையும் கடமையும் ஆகும்.


கண்டாவளைப்பிரதேச வரலாற்று மரபுகளையும் பண்பாடுகளையும் வாழ்வியல் விழுமியங்களையும் பேணி பாதுகாக்கவும் பலர் அறிந்து கொள்ள செய்யவும் தொடர் முனைப்புடன் செயல்படுகின்றது கண்டாவளை கலாசார பேரவை.

நடப்பாண்டில் வாளையோசை நாதம் நான்கு என்ற ஆண்டு மலரின் ஊடாக இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளமை குறித்து மகிழ்கின்றேன்.

மலரின் வெளியீடுகள் மதிப்பிற்குரியவை. போற்றுதற்குரியவை வாழ்த்துகின்றேன்.

இம்முயற்சியில் ஈடுபாடு கொண்டுள்ள பொறுப்பானவர்களை பாராட்டுகின்றேன். இப்பணி தொடர் பணியாக திகழ நல்லாசி கூறி நிற்கின்றேன்.

**அருட்பணி. செபஸ்ரியன்,**
**பங்குத்தந்தை,**
**புனித அந்தோனியார் ஆலயம்,**
**பரந்தன்.**



# "கண்டாவளைப் பிரதேசத்தின் அனைத்து முன்னேற்றங்களுக்காகவும் சேர்ந்துழைப்போம்"

வளமும் வனப்பும் பாரம்பரியமும் மிக்கது கண்டாவளைப் பிரதேசம். இந்தப் பிரதேசத்தின் கலை, பண்பாட்டு, வாழ்க்கைச் சிறப்புக்களை பதிவு செய்யும் விதமாவும் இந்தப் பிரதேசக் கலைஞர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையிலும் மூத்த கலைஞர்களுக்கு மதிப்பளித்தும் ஆண்டுதோறும் பிரதேச செயலகம் நடத்துகின்ற கலாசார விழா சிறப்புற வாழ்த்துகிறேன். இந்த விழாவையொட்டி வெளியிடப்படும் 'வளையோசை' மலர் நல்ல முறையில் அமையவும் வாழ்த்துக் கூறுகின்றேன்.

கண்டாவளைப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்குமாக நாம் முழுமையாக உழைத்து வருகிறோம். இந்த அடிப்படையில் இந்தப் பிரதேசம் முழுமைக்கும் மின்விநியோகம் செய்யப்பட்டுள்ளது. கண்டாவளைப் பிரதேசத்தின் மிகப் பெரிய குளமான கல்மடுக்குளம் துரித கதியில் மீளப் புனரமைக்கப்பட்டு தருமபுரம், புளியம்பொக்கணை, கண்டாவளை எனப் பல பகுதிகளுக்கும் நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. இதன்மூலம் வானம்பார்த்த பூமியாக இருந்த புளியம்பொக்கணை, தருமபுரம் பிரதேசங்கள் பசுமைப் பிரதேசங்களாக மாறியிருக்கின்றன.

கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் அத்தனையும் இன்று முழுமையான அளவில் புனரமைப்புச் செய்யப்பட்டுப் புதுக்கோலமாக எழுச்சியடைந்துள்ளன. இதில் தருமபுரம் மத்திய கல்லூரி, முருகானந்தா மத்தியகல்லூரி ஆகியனவற்றை தரமுயர்த்தியிருக்கின்றோம். இந்தப் பாடசாலைகளின் பௌதீக வளம் மிகக்குறுகிய காலத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறே இந்தப் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கான நடவடிக்கைகளிலும் நாம் உயரிய பங்களிப்பைச் செய்து வருகிறோம். போரின்போது உடைந்து சேதமாகிய நெத்தலியாற்றுப் பாலம் தொடக்கம் அனைத்துப் பாலங்களும் மிகத் தரமான முறையில் நிர்மானிக்கப்பட்டு, கண்டாவளைப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதி செம்மையுற அமைக்கப்பட்டுள்ளது. இவையெல்லாவற்றுக்கும் அப்பால் கண்டாவளைப் பிரதேசத்தில் திட்டக்காணிகளில் குடியிருக்கும் 3000க்கு மேற்பட்ட குடும்பங்களின் காணி உரிமத்தைப் பெற்றுக் கொடுத்து, அவர்களுக்கான வீட்டுத்திட்டத்தை நிர்மானிப்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறோம். இந்தப் பிரதேசத்தின் வரலாற்றுப் புகழ் மிக்க புளியம்கொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திற்கான மின்விநியோகம், வீதிஅமைப்பு ஆகியவற்றைச் செய்து பிரதேச மக்களின் விருப்பத்தை நிறைவேற்றியிருக்கின்றோம்.

கண்டாவளைப் பிரதேசத்தின் முழுமையான அபிவிருத்தியை மேற்கொண்டு வரும் அதேவேளை பிரதேசத்தின் தனித்துவ அடையாளத்தைப் பேணும் விதமாகச் செயற்படும்

கலைஞர்களையும், படைப்பாளிகளையும், அறிஞர்களையும் பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்த விரும்புகின்றேன். இதன்நிமித்தாகபிரதேசக் கலைஞர்களின் பயன்பாட்டிற்கான இசைக்கருவிகளையும் வழங்கி வைக்கிறேன்.

கண்டாவளைப் பிரதேசத்தின் வளர்ச்சிக்காகவும் தம்மை அர்ப்பணித்து உழைத்து வரும் பிரதேச செயலர் திரு.த.முகுந்தன் அவர்களையும் அவருடன் இணைந்து பணியாற்றிவரும் உத்தியோகத்தர்களையும் பாராட்டுகிறேன்.

தொடர்ந்து நாம் அனைத்து முன்னேற்றங்களுக்காகவும் பிரதேச மக்களுடன் சேர்ந்து உழைப்போம். என உறுதி பூணுவோம்.

நன்றி.

**கௌரவ முருகேசு சந்திரகுமார்,**
**பாராளுமன்ற உறுப்பினரும்,**
**பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும்.**



# 'கலைவளர் கண்டாவளை!'

கண்டாவளைப் பிரதேச கலாசார பேரவையால் வெளியிடப்படும் "வளையோசை" நாதம் நான்கிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவது வேருவகையை உண்டுபண்ணுகின்றது. கலையோடு இணைந்த எம் வாழ்வு செழிப்பதற்கு இத்தகைய நூலாக்கங்கள் மிகவும் அவசியமானது. அந்த வகையில் கண்டாவளை பிரதேச கலாசார பேரவையானது கடந்த ஆண்டுகளைப் போல் இவ்வாண்டும் வளையோசையை வெளியிட்டு வைப்பது கண்டாவளை பிரதேச மக்களின் கலைவடிவங்களுக்கு வலுச்சேர்க்கும் ஓர் காத்திரமான பங்களிப்பென நான் நம்புகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவு தனக்கே ஓர் தனியான பண்பாட்டைக் கொண்டமைந்த பிரதேசமாகும். இங்கு வாழும் மக்கள் கடின உழைப்பையும் கல்வித்திறனையும் கலை ஆர்வத்தையும் ஒருங்கே கொண்டமைந்த மக்கட் சமூகமாக மிளிர்வதை நான் கண்டு வியந்திருங்கின்றேன். அவ்வகையில் அவ் பிரதேச மக்களின் கலை வெளிப்பாட்டுத்திறனின் ஆற்றுகை களமாக கலாசார விழாவும் ஆவணபடியாக வளையோசை இதழும் விளங்குகின்றது என்பது எனது நம்பிக்கை.


எனவே இவ்வாண்டும் கண்டாவளை பிரதேச கலாசார பேரவையால் முன்னெடுக்கப்படும் கலாசார விழாவையும் அதனூடு வெளியிடப்படும் வளையோசை இதழையும் நான் வெகுவாக பாராட்டி நிற்பதோடு, கலாசார பேரவையின் இவ்விலக்கிய முயற்சி மேலும் பல்லாண்டுகள் தொடர்ந்து எம் இனம் கலைகளில் நிலை கொள்ள வாழ்த்துகின்றேன்.

**திருமதி றூபவதி கேதீஸ்வரன்,**

**அரசாங்க அதிபர்,**

**மாவட்ட செயலகம்,**

**கிளிநொச்சி .**




# வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டதிலுள்ள கண்டாவளை பிரதேச செயலகத்தால் வருடந்தோறும் வெளியிடப்படும் "வளையோசை" என்னும் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். "பண்பாடு வளம் பெற கரம் இணைப்போம்" என்ற மகுட வாசகத்திற்கு அமைய தமிழர் பண்பாடுகளையும் பாரம்பரியங்களையும் பேணிபாதுகாக்க வேண்டுமென்ற உயரிய நோக்குடன் இம்மலர் வெளியீடு அமைவதுடன் அப்பிரதேசம் சார்ந்த பல்வேறு விடயங்களை உள்ளடக்கி இளம் கலை, இலக்கிய ஆர்வலர்களது படைப்பாற்றல்களை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதற்கு இச்சஞ்சிகையானது களம் அமைத்துக் கொடுத்துள்ளது. பிரதேசத்தின் அபிவிருத்தி, பொருளாதரம்,கல்வி, கலைத்துறை முக்கிய அடைவுகளையும், சாதனைகளையும் ஆவணபடுத்தி அடுத்த சந்ததிக்கு கையளிக்கும் முக்கிய வரலாற்று பதிவாகவும் பிரதேச மலர்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மக்களின் நல்வாழ்வாவிற்காகவும் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் மேற்கொள்ளக்கூடிய சமூகம் சார் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதினூடாக பிரதேசத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியினை உறுதி செய்வதுடன் மக்களின் உயர்ச்சியிலும் மகிழ்ச்சியான வாழ்விலும் எமது பங்களிப்பினை வழங்குவதற்;கு கிடைத்துள்ள அரிய வாய்ப்பினை சரியாக பயன்படுத்த வேண்டியது முக்கியமானதாகும்.

காலத்தின் தேவையறிந்து இச்சேவையினை முன்னெடுத்துவரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி.சத்தியசீலன்,**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை**
**மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**



# வாழ்த்துச்செய்தி

கண்டாவளை பிரதேச செயலகமும், பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடாத்தும் கலாசார விழாவின் போது இப்பிரதேசத்தின் வாழ்வியல் சார்ந்த விடயங்களை உள்ளடக்கி வளை ஓசை (நாதம் 04) எனும் நூல் வெளிவருவதையிட்டு மகிழ்வும் பெருமிதமும் அடைகின்றேன்.

இலங்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பல வரலாற்று சிறப்பியல்புகளை தன்னகத்தே கொண்டுள்ள கண்டாவளைப்பிரதேசம் மிக செழிப்பான தொடர்ச்சியான பாரம்பரியத்தினை கொண்டுள்ளது. இத் தொடர்ச்சியான பாரம் பரியத்தினூடே இப்பிரதேசத்தின் வரலாறு, பண்பா, மக்களின் வாழ்வியல் அம்சங்கள் மிகச்சிறப்பாக பேணப்பட்டு வந்துள்ளது. அச்சிறப்பு இயல்புகளை வெளிக்கொண்டு வரும் வகையிலான ஆக்கங்களை தாங்கி இம் மலர் வெளிவருவது கண்டாவளை பிரதேசத்திற்கும், கிளிநொச்சி மாவட்டத்திற்கும் பெருமை தரும் விடயமாகும்.

வளையோசை எனும் இந்நூல் வருடா வருடம் தொடர்ந்து வெளிவருவதுடன் எம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. சிறந்த கட்டுரைகளை ஒன்று சேர்த்து கண்டாவளைப் பிரதேசத்தின் கலை, கலாசார , பண்பாட்டு அம்சங்களை வெளிக் கொண்டுவரும் காத்திரமான முயற்சி மேன்மேலும் மெருகு பெற எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். அம் முயற்சியினூடே வளர்ந்திடும் வளையோசை (நாதம் 04) என்றும் கம்பீரமாக மிளிரட்டும்.

**செ.ஶ்ரீநிவாஸன்,**
**மேலதிக அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி.**



# வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கண்டாவளைப் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச கலாசாரப்பேரவை இணைந்து நடாத்தும் கலாசார விழா மற்றும் வளையோசை நூல் வெளியீடு ஆகியவற்றின் நிமிர்த்தம் வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இயற்கை எழில் கொஞ்சும் கிளிநொச்சி மாவட்டத்தின் வராற்றில் கண்டாவளை பிரதேசத்திற்கு தனியான இடமுண்டு. " உழுதுண்டு வாழ்வோரே வாழ்வர்" என்ற கூற்றிற்கு இணங்க வேளாண்மையினாலே வளம் பெருக்கி பெருவாழ்வு வாழும் மக்களின் பூமி கண்டாவளை. தமிழர் வரலாறு பற்றி ஆராய்வோருக்கான தகவல் களஞ்சியமாகவும் இந்த பிரதேசம் விளங்குவதையும் அறிய முடிகின்றது. வாழ்வின் செழிப்பிற்கு உதவும் வேளாண்மையுடன், ஏனைய தொழில் முறைகளையும் பின்பற்றிய பிரதேச மக்கள், காலத்திற்கு காலம் தமது கலைத்துவ ஆற்றலை இசை நாடகம், நாட்டு க்கூத்து மற்றும் நாடகம் உள்ளிட்ட கலைகள் ஊடாகவும் வெளிப்படுத்தி வந்துள்ளனர். ஆலயத்திருவிழாக் காலங்களில் இரவிரவாக கலை நிகழ்வுகளை நடாத்தி தமது பொழுதினை மகிழ்ச்சியாக களித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், காலாதி காலமாக தமது பிரதேச மக்களினால் பேணப்பட்டு வந்த கலை , கலாசார அம்சங்களை வளர்த்து வரும் இளைய தலைமுறைக்கு எடுத்துக்காட்டும் வகையிலும், கலையே தமது வாழ்வு என செயற்பட்ட கலைஞர்களை கௌரவிக்கும் வகையிலும், கண்டாவளை பிரதேச செயலாளரும், பிரதேச கலாசாரப் பேரவையினரும் ஆண்டு தோறும் கலாசார விழாவை நடாத்துவதும் அதன் நினைவாக சஞ்சிகை ஒன்றை வெளியிட்டு வருவதும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

வளையோசை சிறப்பாக வெளிவரவும் ஓசை தொடர்ச்சியாக கேட்கவும் இறைவனை வேண்டி எனது நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி உஷா சுபலிங்கம்,**
**பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**வடமாகாணம்.**



# "கலைகளில் மூழ்கி முத்தெடுப்போம்"

பச்சைவயல், வெட்டைவெளி, உழைத்து உரமேறிய மனிதர், பால் சொரியும் பசுக்கள், தொடுவானம் வரை விரியும் கடல் என எம் சிந்தயைச் சுண்டி இழுக்கிறது கண்டாவளையின் கவினுறு பேரழகு. உழைப்பும் உணர்வோடு கூடிய வாழ்வும் உணர்வின் வெளிப்பாடாக அமைந்த கலைகளும் கண்டாவளையின் களிகொள்ளும் சங்கதிகள். எம் வாழ்வின் பக்கங்கள் எல்லாம் கலைகளால் நிறைந்து கிடப்பதை கண்டு இன்புறாமல் இருக்கமுடியாது. எமது பிரதேசத்தின் இத்தகைய கலைச்சிறப்புக்களை எல்லாம் உணர்வூட்டமாக பதிவு செய்ய வேண்டும் எனும் எண்ணத்தின் வெளிப்பாடே. கண்டாவளைப் பிரதேச கலாசார பேரவையால் வெளியிடப்படும் வளையோசை எனும் நூலாக்க முயற்சியின் மூலவேர்.

எமக்கும் எம் இனத்திற்கும் தணியாத தாகம் கலையின் மேல் உண்டு. எனவேதான் பண்டைத்தமிழ் நூல்கலெல்லாம் கலைகளைப் போற்றி ஆராதித்திருக்கின்றன. அவ்வகையில் கண்டாவளை பிரதேசத்தின் கலைவடிவங்களையும் ஆக்க இலக்கியங்களையும் நூலுருவில் பேணவேண்டும் எனும் எண்ணத்தின் வெளிப்பாடாய் நாம் இந்நூலை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். இம்மக்களின் உணர்வு தடங்களாக இந்நூலின் ஒவ்வொரு பக்கங்களும் இந்த மண்ணின் விழுதுகளால் விரவியிருக்கின்றது.

எம் இனத்தின், மொழியின், பண்பாட்டின் செழுமையை செதுக்கியிருக்கும் இந் நூல் கண்டாவளைப் பிரதேச கலாசார பேரவையின் வெளியீடு என்பதல்லாது கண்டாவளை மக்களின் கலை நடனம் என்பதே பொருத்தமானதாகும். இந்நூலுக்கு உணர்வூட்டிய உள்ளங்களுக்கு நன்றிகள்.

த.முகுந்தன்,
பிரதேச கலாசார பேரவையின் தலைவரும்,
பிரதேச செயலாளரும்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

# வெளியீட்டுரை

கண்டாவளை பிரதேச செயலக நிர்வாக எல்லைக்கு உட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுள் வாழ்கின்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள், கலை, இலக்கிய ஆர்வலர்கள் ஆகியோரை உள்ளடக்கி 2011 ஆம் ஆண்டு முதற் செயற்பட்டு வரும் எமது பிரதேச கலாசார பேவை இவ் வளை ஓசை நாதம் 04 இன் வெளியீடு ஊடாக தன்னை மேலும் வலுப்படுத்தும் இத்தருணம் பெருமிதத்தை தருகிறது. பேரவையின் ஆரம்பம் முதல் தற்போதைய 3வது செயற்குழுவின் ஆட்சிக் காலம் வரையிலான வெளியீட்டு முயற்சியில் முறையே வளை ஓசை - நாதம் 1,2,3 ஆகியவற்றை வருடம் தோறும் வெளியிட்ட பேரவை 2011 ஆம் ஆண்டில் "கலைஒளிர்" விருது பெறும் கலைஞர் விபர திரட்டு எனும் நூலையும் இவ்வாண்டின் ஐப்பசி மாதம் பிரதேச எழுத்தாளர் கா.பாலேஸ்வரனின் (காசிமணியம்) "மண்வாசனை" எனும் சிறுகதை தொகுப்பையும் வெளியிட்டதுடன் இன்று ஆறாவது வெளியீடாக வளை ஓசை (நாதம் - 4) வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

எமது கண்டாவளை பிரதேச கலாசார பேரவையால் வெளியிடப்படும் வளை ஓசை தன்னுள் தான் சார் மண்ணின் மைந்தர்கள் என குறிப்பிடத்தக்கவர்களான இப்பிரதேசத்திலேயே பிறந்தவர்கள் இங்கு வாழ்ந்து வருபவர்கள் மற்றும் இப்பிரதேசத்திலேயே சேவையாற்றி வருபவர்களின் ஆக்கங்களையே வெளியிடுவது என திடசங்கற்பம் கொண்டு செயற்பட்டு வருகிறது. மேலும் இப்பிரதேச மலர் வெளியீடுகளில் பிரதேசம் சார் கலை, இலக்கியம், ஆன்மீகம், மரபுரிமைகள், பண்பாடு, வாழ்வியல், வரலாறு சார் விடயங்களை பெரிதும் உட்கொள்வது எனும் கொள்கையுடன் செயற்படுவது தனிச் சிறப்பாகும்.

இந் நூல் வெளியீடு ஊடாக பிரதேச முழு கலைஞர்களும் படைப்பாளிகளும் வாய்ப்பினை பெறுவதுடன் புதிய படைப்பாளிகள் தமக்கான அங்கீகாரத்தை பெற வளை ஓசை களம் அமைத்துக் கொடுக்கிறது. எழுத்துலக அங்கீகாரத்தை பெறவும் துணை புரிகின்றது.

இவ்வாண்டில் எமது கலாசார விழா மற்றும் வளை ஓசை நாதம்-4 வெளியீட்டிற்கு நிதி வழங்கலில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் எமது கலை முயற்சிக்கு எப்போதும் ஒத்துழைப்பு வழங்கும் எமது பிரதேசம்சார் பொதுமக்கள், கலையார்வலர்கள், வர்த்தகர்கள் மற்றும் பிரதேசம் சார்ந்த பொது அமைப்புகளின் ஒத்துழைப்பும் எம்மால் நன்றியுடன் என்றென்றும் நினைவு கொள்ளத்தக்கதாகும்.

மலர் வெளியீட்டிற்கான ஆக்கங்களை எமக்கு வழங்கியவர்களுக்கும், இம்மலரினை அழகுற பதிப்பித்த எமது பிரதேச பதிப்பகத்தாராகிய நிசா ஆட்ஸ் நிறுவனத்தாற்கும் எம் நன்றிகள்.

- மலர்க்குழு-

# அலுவலக உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் : திருமதி.ச.சிந்துஜா (A.D.R),திருமதி.மு.நிசாந்தினி (F.A), திரு.சி.குகதாசன் (Accontant), திரு.த.முகுந்தன்(D.S), திரு.கு.சிவலிங்கம் (A.O),
(இடமிருந்து வலம்) திருமதி ச.மதியழகி (M.A), திருமதி.சி.சிவசோதி (C.M.A).

நிற்பவர்கள் : திரு.ஆ.பாலச்சந்திரன் (O.E.S), செல்வி.செ.பிரவீனா (M.A), திருமதி.மு.கவிதா (Volunteer), திருமதி.ச.உஷா (D.O),
(1ஆம் வரிசை) செல்வி.இ.தாரணி (D.O), செல்வி.K.I.P.லக்ஸாசந்தி (M.A), திருமதி.ஜெ.சாரதகலா (M.A).திருமதி.பி.விஜயராணி (M.A),
திருமதி.க.குமுதினி (M.A), திருமதி.க.சரஸ்வதி (D.O), செல்வி.க.செஞ்சுடர் (M.A), திரு.ப.விமல்ராஜ் (Volunteer).

நிற்பவர்கள் : திரு.இ.லொ.அன்சிலின்பெகின் (D.O), திரு.கு.தங்கேஸ்வரன் (Volunteer), திரு.சி.நீலமேகர் (O.E.S), திரு.இ.மதனகுமார் (D.O),
(2ஆம் வரிசை) திரு.கு.சிறீக்குமார் (O.E.S), திரு.த.கிருஸ்ணகுமார் (D.O), திரு.க.இராசகுமார் (D.O), திரு.இ.யசோதரன்(D.O),
திரு.வ.வரேந்திரன் (M.A), திரு.பொ.சுலக்சனன் (D.O), திரு.மு.சசிதரன் (Volunteer), திரு.ஐ.குமாரசூரியர் (Driver),
திரு.மா.ஜெயராஜ் (O.E.S).

சமூகமளிக்காதவர்கள் : திருமதி.வி.ஜெனிதா (M.A), திருமதி.பி.நிசாந்திகிருஷ்ணா (M.A), வே.தங்கநாதன் ( O.E.S).

# கிராமசேவகர்கள் , பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் : திரு.சி.கௌரிசங்கர் (G.N), திரு.கோ.சேகர் (G.N), திரு.கு.சிவலிங்கம் (A.O), திரு.சி.குகதாசன் (Accontant), திரு.த.முகுந்தன் (D.S),
(இடமிருந்து வலம்) திரு.பூ.ராஜ்வினோத் (A.D.P), திரு.ச.சந்திரன் (G.N), திரு.த.நந்தகுமார் (G.N), திரு.செ.அஜித்குமார் (G.N).

நிற்பவர்கள் : திருமதி.ப.குமுதினி (E.D.O), திருமதி.இ.யசிகலா (E.D.O), செல்வி.இ.கலைமதி (E.D.O), செல்வி.ச.தேனுகா (E.D.O),
(1ஆம் வரிசை) திருமதி கோ.சுமதி (E.D.O), திருமதி.பி.சுரேந்தினி (E.D.O), திருமதி.கே.விஜயநிர்மலா (G.N), திருமதி ஆ.சாந்திகிருஷ்ணா (G.N),
திருமதி.கு.துஸ்யந்னி (G.N), திருமதி.கி.குணாளினி (G.N), செல்வி.பே. யசோதா(G.N), திருமதி.த.விஜயசாந்தி (G.N),செல்வி.நீ.நீலவேணி G.N)

நிற்பவர்கள் : திரு.ச.துஸ்யந்தன் (E.D.O), திரு.மு.அருள்செல்வநாயகம் (E.D.O), திரு.இ.தர்மேந்திரா (E.D.O),
(2ஆம் வரிசை) திரு.கா.சுதாகரன் (E.D.O), திரு.த.பார்த்தீபன் (E.D.O), திரு.அ.பிரபாகரன் (E.D.O), திரு.க.சிவகரன் (E.D.O)

சமூகமளிக்காதவர்கள் : திருமதி.சு.அருள்பாலினி (E.D.O), திருமதி.பு.லதா (E.D.O), செல்வி.க.சுரேகா (E.D.O), திருமதி.வி.அஜந்தா (G.N).

# "கண்டாவளை எங்கள் ஊர் !"

**கலைஒளி கதிர்காமு.மாணிக்கராசா**

22,கிராம விஸ்தரிப்பு திட்டம்,பெரியகுளம்.

கரைச்சி என்பது ஆரம்பகால கண்டாவளை, புளியம்பொக்கணை, கலவெட்டித்திடல் போன்ற ஆனையிறவு கடல் நீரேரிக்குத் தென்புறத்தேயுள்ள கரையோர குடியிருப்புக்களே. கரையோரமுள்ள நிலங்களில் நெல் பயிரிடத்தோதான இடங்களைத் தெரிவு செய்து தென்மராட்சியிலுள்ள வரணி, கொடிகாமம், மீசாலை, சாவகச்சேரி போன்ற ஊர்களில் உள்ள மக்கள் இங்கு வந்து விடுதிகள் அமைத்து பருவகாலத்தில் விவசாயத்தை மேற்கொண்டு நெல்லைக் கொண்டு போயினர். விவசாயத்திற்கு உறுதுணையான மாடுகளைக் கொண்டுவந்து மேய்த்துக்கட்டி அவற்றின் எருவையே நெல் செய்கைக்கு உரமாக பாவித்தனர். தங்கள் ஊர்களிலிருந்து வரும் போது பொதி மாடுகளில் விதை நெல் உணவுத் தேவைக்கான பொருட்களையும் கொண்டு வந்து விடுதிகளில் தங்கி விவசாயத்தை மேற்கொண்டனர். நெல்லை அறுவடை செய்து ஓலைப்பாய்களில் போட்டு மாடுகளை (நடையன்கள்) மூலம் சூடுமிதித்து நெல்லை எடுத்தனர். எடுத்த நெல்லையும் மாடுகளையும் கொண்டு தமது ஊர்களிற்கு திரும்ப சென்று சில மாதங்கள் தங்கிவிட்டு மீண்டும் பருவ கால ஆரம்பத்தில் நெல் செய்கையை மேற்கொள்ள வந்து போய்க்கொண்டிருந்தனர்.

இதற்கு பின்னரான காலப்பகுதியில் பருவகாலங்களில் வந்து போய் வருவதை விடுத்து நிரந்தரமாக தங்கி விவசாயத்தை மேற்கொள்ள ஆரம்பித்தனர். தாம் தங்கியிருக்க காடுகளில் மரம் தடிகளை வெட்டி வந்து பாதுகாப்பான வீடுகளை அமைத்தனர். உணவுத்தேவைக்கு நெல்லை உரலில் குற்றி சோறு சமைத்தனர். மூன்று வேளையும் உணவு சோறுதான். மிளகாய், கத்தரி, பாகல் போன்ற மரக்கறி பயிர்களை தமது கறித்தேவைகளுக்கு பயிரிட்டு பெற்றனர். வேட்டை நாய்களைவளர்த்து உடும்பு, முயல் போன்ற பிராணிகளை காடுகளில் வேட்டையாடி கறி சமைத்தனர். ஆறு, குளம், குட்டைகளில் மீன்களை பிடித்தனர்.

காலம் செல்லச் செல்ல இன்னும் பலர் வந்து காடுகளை வெட்டி வயல் செய்கையை விஸ்தரித்தனர். சிலர் தமது குடும்பங்களையும் அழைத்து தம்முடன் வைத்திருந்தனர். நேரத்தை கணிக்க கடிகாரங்களோ காலத்தை கண்டறிய நாட்காட்டிகளோ இல்லாத காலம். நேரத்தை கணிக்க தமது நிழலை அடியளந்து கணிப்பதன் மூலமும் நாட்களை பறுவம், அமாவாசை தினங்களின் மூலமும் கணித்தனர். காட்டு விலங்குகளிடமிருந்து தமது வேளாண்மையையும் ஆடு, மாடுகளையும் காப்பாற்ற வெகு சிரமப்பட்டனர்.

இரண்டாம் உலக யுத்த காலப்பகுதியில் பல குடும்பங்கள் இப்பகுதிகளில் குடியமர்ந்து விவசாயத்தை மேற்கொண்டு வந்தனர். அக்காலப்பகுதியில் போக்குவரத்து கால் நடை பயணங்களாகவே இருந்தன. கொடிகாமம், சாவகச்சேரி போன்ற ஊர்களிற்கு செல்ல வேண்டியிருந்ததால் கால் நடையாக 7மைல் பரந்தனுக்கு நடந்து சென்று பரந்தனிலிருந்த 'இலகுபிள்ளை' கடை அல்லது 'மாணிக்கம்' கடையில் தங்கியிருந்து, விடி காலையில் வரும் ''சரக்கு ரெயின்'' மூலம் பயணம் செய்வர். அல்லது மடுக்கரை பன்றி மோட்டையூடாக 6 மைல் நடந்து ஆனையிறவு பாடசாலையில் இரவு தங்கி ரெயில் பயணத்தை மேற்கொண்டனர்.

அக்காலத்தில் வசதியுள்ளவர்களிடம் மட்டுமே மாட்டு வண்டிகளிருந்தன. ஒரு சிலரிடம் மட்டுமே சைக்கிள்களிருந்தன. அநேகமானவர்களுக்கு சைக்கிள் ஓட்டத்தெரியாது. பெண்கள் பிள்ளைகளின் பிரயாணத்துக்கும் தமது ஊர்களுக்கு நெல்லை ஏற்றிச்செல்லவும் திரும்பி வரும் போது தேங்காய், பனாட்டு போன்ற கொண்டுவரவே மாட்டு வண்டில்களைப் பயன்படுத்தினர். மாட்டு வண்டி பயணத்தின்போது மதிய உணவுக்காக கொண்டு செல்லும் சோற்றை ஓலை 'மூடுபெட்டிகளில்' கொண்டு சென்று கலுவில் குளம், கரந்தாய் குளம் போன்ற குளங்களின் அருகே நிறுத்தி உணவு உண்டு களைப்பாறிச்செல்வர்.

தெய்வ வழிபாட்டு முறைகள் தமது குல தெய்வங்களுக்கு கொட்டில் அமைத்து அதிலும் காவல் தெய்வங்களான வைரவர், வீரபத்திரர், அண்ணமார்போன்றவற்றை மரங்களினடியிலும் வைத்து வழிபட்டு வந்தனர். குலதெய்வங்களுக்கு மாதமொருமுறை பொங்கலிடுவர். வாழையிலை இன்மையால் பூவரசம் இலைகளிலேயே பொங்கலைப் படைப்பர். காவல் தெய்வங்களுக்கு வருடம் ஒரு முறை 'மடை' போடுவார்கள். சில தெய்வங்களுக்கு கோழி, ஆடு போன்றவற்றை வெட்டிப் பலி கொடுத்தனர்.

சேவைத்தொழில் செய்வதற்கும் ஆட்களை அழைத்து வந்து குடியமர்த்தினர். இவர்களது சேவைக்கு கூலியாக நெல்லே வழங்கப்பட்டது. இப்பிரதேசத்தில்கடைகளோ,சந்தையோ இருக்கவில்லை. ஞாயிற்றுக் கிழமை களில் கூடும் ''ஆனையிறவு சந்தைக்கு'' தலைச்சுமையாக நெல்லை கொண்டு போய் கொடுத்து 'பண்ட மாற்று' முறையில் தேங்காய், வெற்றிலை பாக்கு, பலசரக்கு சாமான்கள் போன்றவற்றை வாங்கி வருவார்கள்.

காலப்போக்கில் இங்கு சங்கக்கடையொன்று நிறுவப்பட்டது. இங்கும் கோழி முட்டை, நெல் போன்றவற்றைப் பெற்று பண்டமாற்று முறையிலே பொருட்கள்விற்கப்பட்டன. இக்கடைக்கு பளையிலிருந்த யூனியனிலேயே பொருட்கொள்வனவு செய்து கொண்டு வந்தனர். அக்காலத்தில் பணப்புழக்கம் மிக குறைவாகவே இருந்தது. அப்போதிருந்த பவுண் விலையையே பணத்தின் பெறுமதியாக மதிப்பிட்டுக்கூறுவர். ஒரு பவுண் பத்து ரூபா விற்ற காலம். பத்து ரூபாக்கு வாங்கிய பொருளை ஒரு பவுணுக்கு

வாங்கியதாகவே குறிப்பிடுவர். அப்போது ஒரு சோடி வண்டில் மாட்டின் விலை 45 பவுண். ஒரு ''இங்கிலன்ட்'' சைக்கிளின் விலை 25 பவுண் அரைச்சதம், ஒரு சதம் போன்ற சில்லறைக்காசுகள் செம்பு உலோகத்திலும் 05 சதம், 10 சதம்என்பன பித்தளையிலும் ஒரு ரூபாய் தாளாகவும் புழக்கத்திலிருந்தன. ஒரு புசல் (30 கொத்து) நெல்லின் விலை ரூபா 8.00 முதல் 10.00 வரை இருந்ததாக ஞாபகம்.

வயல்களை மாடுகளைக்கொண்டே உழுதனர். ஒவ்வொரு விவசாயியும் 15 - 25 பரப்புக் காணிகளில் வயல் செய்கைகளை மேற்கொண்டு வந்தனர். ஒருசில வசதியானவர்கள் 50 - 100 பரப்புக் காணிகளிலும் விவசாயம் மேற்கொண்டு வந்தனர். இவர்களிடம் குறைந்தது 2 சோடி உழவு மாடுகளிருந்தன. சிலகாலங்களில் இவர்களது நிலங்களை 5 -6 சோடி மாடுகளை இவர்களது உறவினர்கள், நண்பர்கள் கொண்டு வந்து ஒரே நாளில் உழுது விதைத்து கொடுப்பதுண்டு. இதனைப் ''பரத்தை உழவு'' என அழைத்தனர். இவர்களுக்கான மதிய உணவு (சோறு) உழவு நடைபெறும் இடத்தினுள் மர நிழல்களில் வைத்து சமைத்து வழங்கப்பட்டன. மாடு, ஆடுகளை வயல் நிலங்களில் ''பட்டியடைத்து'' அவற்றின் எருவும் குப்பை கூழங்களுமே உரமாக பயன்படுத்தப்பட்டன. இரசாயன உரங்களோ பூச்சி நாசினிகளோ இல்லாத காலம் பயிர்களில் நோய்த்தாக்கங்களில்லை, பயிர்களை பூச்சி, புழுக்கள் தாக்காமல் இருக்கவும் தம்மை பாம்பு பூச்சிகள் தீண்டாதிருக்கவும் நாகதம்பிரானுக்கு நேர்த்தி செய்து ஒரு பானையில் நெல்லையிட்டு வயல் நடுவே ஒரு கட்டையில் கட்டி விடுவர். இந்த நெல்லைக் குற்றி பங்குனியில் நடைபெறும் நாகதம்பிரான் ஆலய பொங்கலின் போது பொங்கலிட்டுப்படைத்து தமது நேர்த்தியை நிறைவேற்றுவர்.

வைத்தியசாலைகளோ வைத்திய வசதிகளோ இல்லாத காலம். நாட்டு வைத்தியர்கள் பருத்தித்துறை, வரணி போன்ற ஊர்களிலிருந்து வந்து சில நாட்கள் தங்கியிருந்து வைத்தியம் செய்து விட்டுச்செல்வர். விஷகடிவைத்தியர்கள் கண்டாவளை, புளியம்பொக்கணை, வட்டக்கச்சி போன்ற ஊர்களிலிருந்தனர். இவர்களிடம் விஷம் கடித்தவரை மாட்டு வண்டில்களில் கொண்டு சென்று அங்கேயே தங்கியிருந்து வைத்தியம் செய்விப்பர். கிளிநொச்சியில் ஒரு மத்திய மருந்தகம், மகப்பேற்று நிலையம் ஆகியன இருந்தன. போக்குவரத்து வசதியின்மையால் கூடுதலான மகப்பேறுகளை ஊர் மருத்துவிச்சியரே பார்த்து வந்தனர்.

இங்கு ஒரு ஆரம்ப பாடசாலை இருந்தது. இதில் ஐந்தாம் வகுப்பு வரையான வகுப்புகளேயிருந்தன. ஒரு ஆசிரியரே தலைமையாசிரியராகவும் வகுப்பாசிரியராகவும் இருந்தார். தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோர் மேல் 'கிராமக்கோட்டில்' வழக்குத் தொடுக்கப்பட்டால் ஆனையிறவிலிருந்த கிராமக்கோட்டில் அபராதம் கட்ட வேண்டும். இப் பாடசாலைகளை மேற்பார்வை செய்ய 'சோதினைகாரன்' என்றொருவனை அரசாங்கம் நியமித்திருந்தது. அவர்தான் மாணவர் வரவு போன்றவற்றை

பரிசீலினை செய்து நடவடிக்கை எடுப்பவராகவிருந்தார். மாணவர்களுக்கு மதியம் பால்கஞ்சி, கோதுமைமாப் பிட்டு ஆகியன வழங்கப்பட்டு வந்தது. ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிக்க வைக்க விரும்பும் பெற்றோர் தமது பிள்ளைகளை கொடிகாமம், வரணி, சாவகச்சேரி போன்ற ஊர்களிலுள்ள தமது நண்பர்கள் உறவினர் வீட்டில் தங்கவைத்து கல்வியைத்தொடர வைத்தனர்.

காலப்போக்கில் வீதிகள் புனரமைக்கப்பட்டு தனியார் வான்கள் போக்குவரத்தை ஓரளவு இலகுவாக்கின. அதன் பின் ''நொர்தேர்ன்ஒம்னி பஸ்'' (NOB) தனியார் கொம்பனி தினமும் யாழ்ப்பாணம் சென்று திரும்பும் ஒரு சேவையை நடாத்தி வந்தது. டீசல் எண்ணெயில் ஓடும் வாகனங்களில்லாத காலம். எல்லாமே பெற்றோல் வாகனங்களே. ஒரு கான் (45 லீற்றர்) பெற்றோலின் விலை 2ரூபா 25 சதம். கண்டாவளையிலிருந்து யாழ்ப்பாணம் போக ஒரு ரூபா நாற்பது சதம்.

நாட்டுப்புற கலைகள் வளர்க்கப்பட்டன. உள்ளூரிலுள்ள அண்ணாவிமார் கலையார்வம் கொண்டோரில் குரல்வளமுள்ளோரை தெரிவு செய்து வள்ளி திருமணம், காத்தான் கூத்து, மயானகாண்டம், பவளக்கொடி, அல்லி அருச்சுனன் போன்ற கூத்துக்களை பழக்கியதன் பின் யாழ்ப்பாணத்தில் அந்த நேரம் பிரபலமாகவிருந்த பெரியசிட்டான், சின்னச்சிட்டான் போன்ற அண்ணாவிமாரை கூத்து போடுவதற்கு 10-15 நாட்கள் முன்னரே அழைத்து வந்து உள்ளூர் அண்ணாவிமாரால் பழக்கப்பட்ட கூத்துக்கள் ஆர்மோனியம், மிருதங்கம், டோலக் போன்ற பக்க வாத்தியங்களுடன் கற்பிக்கப்பட்டு நெறியாள்கை செய்யப்பட்டதன் பின்னரே மேடையேற்றப்படும். கூத்து மேடைகள் வயல்வெளிகளிலுள்ள மேட்டுப்பகுதியை சீர் செய்து அமைக்கப்பட்டன. பார்வையாளர்கள் தமக்கென கொண்டு வரும் ஓலைப்பாய்களின் மேலமர்ந்து கூத்தைப்பார்ப்பர். கூத்துக்கள் பூரணை தினங்களில் மாலை 6.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு விடிய விடிய நடைபெறும். வெளிச்சத்துக்கு தீப்பந்தங்கள் பாவிக்கப்பட்டன பின்னர் பெற்றோமாக்ஸ், லைற்றுகள் பாவிக்கப்பட்டன. அத்துடன் உள்ளூர் அண்ணாவிமரால் சிறு பிள்ளைகளை வைத்து பழக்கப்பட்ட ''பாட்டுக்காவடிகள்'' கூத்துகளின் இடைவேளைகளிலும் கோவில் பொங்கல் விழாக்களிலும் ஆடிக்காண்பிக்கப்பட்டன.

அரச (சிவில்) நிர்வாகம் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் பின்வரும் கட்டமைப்பில் இயங்கி வந்தது. ஏஜென்த்துரை (கவர்மென்ட் ஏஜென்ட்), பிரிவுக்காரிய அதிகாரி (டீ.ஆர்.ஓ), உடையார், விதானை என்றிருந்தது. பின்னர் படிப்படியாக உடையார் முறை ஒழிக்கப்பட்டு கிராம மட்ட அதிகாரம் கிராமத்தலைவர் (விதானை) வசம் ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் பொலிஸ் அதிகாரமுள்ள பொலிஸ் (Police Vidan) விதானைமாராக இருந்தனர்.

அந்நேரம் பொலிஸ் நிலையம்

சாவகச்சேரியிலேயே இருந்தது. சண்டை, சச்சரவு ,சிறு களவுகள் விதானையார் மட்டத்தில் விசாரித்து தீர்க்கப்பட்டன. தண்டனைகளும் வழங்கப்பட்டன. தீர்வு காணப்படாத பிணக்குகள் 'டீ. ஆர்.ஓ' வினால் விசாரிக்கப்பட்டு தீர்வு காணப்பட்டது. கொலை பாரிய திருட்டுக்களை பொலிசார் வந்து விசாரித்து நடவடிக்கை எடுப்பர். பொலிசார் விதானையாரின் அனுமதியுடன்அல்லது உதவியுடனேயே விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற சட்டமிருந்தது.

முன்னர் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, கரைச்சியென்றிருந்த காரியதிகாரி பிரிவு பளையில் ஒரு காரியதிகாரி கந்தோர் அமைக்கப்பட்டு பச்சிலைப்பள்ளி, கரைச்சி பிரிவுகளுக்கு தனியாக இயங்கி வந்தது. மாதமொரு தடவை விதானைமாருக்கான பிரிவுக்கூட்டம் (Division day) நடைபெறும்.

பொருட்கள் தட்டுப்பாடாகவிருந்த காலப்பகுதி ஆகையால் உணவுக்கூப்பன்கள் வழங்கப்பட்டன. குழந்தை, பிள்ளை, சாதாரணம், வேலையாள் என்ற வகைகளில் கூப்பன்கள் வழங்கப்பட்டன. இக் கூப்பன்களில் உள்ள புள்ளிகள் சங்கக்கடைகளில் வெட்டப்பட்டு புள்ளிகளின் பெறுமதிக்கேற்ப அரிசி, மா ஆகியன வழங்கப்படும். கூப்பனுக்கு அரிசி, மா வழங்கப்பட்டு வந்தது. அவற்றை கூப்பன் அரிசி, கூப்பன்மா என்றே கூறுவார்கள். அதே பெயரில்தான் இப்போதும் சிலர் கோதுமை மாவை அழைக்கின்றனர்.

கண்டாவளைக்கென தனியான உப தபாற்கந்தோர் திறக்கப்பட்டு தபால் விநியோகம் நடைபெறத்தொடங்கியது. சில வருடங்களில் தந்திச்சேவை ஆரம்பிக்கப்பட்டது. மத்திய மருந்தகம் ஒன்று கட்டப்பட்டு திறக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன. ஒரு வைத்தியர் மட்டுமே பணியாற்றினார். அவருக்கென கட்டப்பட்டிருந்த விடுதியில் அவர் நிரந்தரமாக தங்கியிருந்து சேவையாற்றினார். திரவவடிவிலேயே மருத்துவக்கலவைகள் வழங்கப்பட்டு வந்தமையால் நோயாளர் மருந்து வாங்க 'போத்தல்கள்' கொண்டுபோகவேண்டியிருந்தது.

ஆரம்பகாலத்தில்எல்லாவழிகளிலும் மிக மிகச்சிரமமான வாழ்க்கையை வாழ்ந்த முன்னோர்கள் கிடைத்ததை வைத்து மன மகிழ்வுடன் மன நிறைவோடு வாழ்ந்தனர். இவை போன்ற பல நினைவுகளை மீட்டுப்பார்க்கும் போது ஏன் இப்போதைய சந்ததியினரிடம் மன நிறைவு காணப்படாத மகிழ்வற்ற வாழ்வு காணப்படுகிறது?

அன்றைய கரைச்சியின் வளர்ச்சியே இன்றைய ''யாழ்ப்பாணத்தின் நெற்களஞ்சியமென'' அழைக்கப்படும் கிளிநொச்சி மாவட்டமாகும். இதன் படிப்படியான வளர்ச்சியின் ஆரம்ப கர்த்தாக்களின் வாக்கு மூலங்களை வைத்தும் நான் பிறந்து வளர்ந்ததன் பின் இன்று வரையில் உய்த்துணவற்றைச் சமர்ப்பித்துள்ளேன்.

# கையைக் கட்டி நில்லாதே!

செல்வி வி.சுதர்சினி,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

கையைக் கட்டி நில்லாதே!
கண்டது எல்லாம் அஞ்சாதே!
குட்டக் குட்டக்
குனியாதே!

வாழ்க்கை என்பது
வட்டமடா!
மேலும் கீழும்
ஓட்டமடா!

இனி கவலைக்கு
இடமில்லையே - பயமில்லையே
எங்களின் கழுத்தினில்
விடமில்லையே!

காடும் மேடும் உன்னோடு
கடலும் காற்றும் வென்றோடு.
என்றும் உழைப்போம் மண்ணோடு
எதிலும் வெல்வோம் நடைபோடு!
கல்வியும் எமக்கொரு ஆயுதமே
கைகளில் நீயேடு பகையோட்டு!
வறுமை எமக்கொரு தடையில்லையே
வரும் துன்பம் போக்கி முன்னோடு!

இன்று மட்டுமே எம்கையில் - என
நேற்றைய பொழுதை மறந்து எழு !
மனங்கள் எல்லாம் உறுதி கொண்டால்
மழை வெயில் எமக்கில்லை.
மனிதரில் பதரில்லை; முன்னேறு !

உந்தன் வாழ்க்கையில்
ஜெயிக்கும் வரை - நீ
கையைக் கட்டி நில்லாதே!

கண்டது எல்லாம் அஞ்சாதே.
குட்டக் குட்ட குனியாதே.

# வாழ்வியல் நோக்கில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

**ந.கவிதா**
**பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம்,**
**கண்டாவளை.**

ஆண்கள் தான் குடும்பத்தின் தலைவர்கள் என்பது எமது மக்களால் கலாசாரம் மற்றும் மரபு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வழக்காறு. எனினும் வட மாகாணத்தை பொறுத்தவரை இத்தகைய நிலமையானது கடந்த போர்ச்சூழல், உலகமயமாதலின் தாக்கம், பொருளாதார நெருக்கீடு போன்ற காரணங்களால் மாற்றமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும். வரைவிலக்கண ரீதியாகவும் பாரம்பரிய ரீதியாகவும் புள்ளிவிபர ரீதியாகவும் பெண் தலைமைத்துவ குடும்பம் என்பது தனியே கணவனை இழந்த பெண்களுக்கு என மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் கடந்த 30 வருடகால போர்ச்சூழல் மற்றும் நவீனமயமாதல் என்பவற்றின் காரணமாக கணவனின் இறப்பிற்கு அப்பால் ஏற்கனவே கூறப்பட்ட காரணங்களினால் பல்வேறுபட்ட பின்புலங்களில் இருந்து பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உருவாகின்றன. இதனால் ஆண்களால்தான் செய்ய முடியும் என்று எதிர்பார்த்த கடமைகளை கூட பெண்கள் செய்ய திணிப்புக்கள் ஏற்பட்டது. ஆண் ஒருவர் குடும்ப தலைவராக இருத்தல் என்பது சமூக அந்தஸ்து அல்லது உரிமையாக கருதப்படும் அதே வேளை பெண்களுக்கு அது இரட்டை சுமையாக கருதப்படுகின்றது. ஏன் எனில் பெண்கள் வீட்டு வேலைகளுடன் வழமையான எமது சமூகத்தில் ஆண்கள் பார்க்க வேண்டும் என எதிர்பார்க்கும் வெளி வேலைகளையும் முக்கியமாகவருமானமீட்டல்என்பவற்றை மேற்கொள்ள வேண்டியவர்களாக எதிர்பார்க்கப்படுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளடங்குகின்ற நான்கு பிரதேசசெயலர் பிரிவுகளுக்குள் நிர்வாக அலகு ரீதியாக 16 கிராமசேவகர் பிரிவுகளையும் மக்கட் செறிவில் இரண்டாவது இடத்தையும் கொண்ட கண்டாவளை பிரதேசத்தில் பெண் தலைமைத்துவம் என்பது புதிய விடயம் அல்ல. எனினும் 1980 ற்கு பின்பு ஏற்பட்ட உள்நாட்டு பிரச்சினை காரணமாக பல ஆண்களின் இறப்பு, காணாமல் போதல், குடும்ப பிரிவு, பாதுகாப்பு காரணமாக புலம்பெயர்வு போன்ற காரணங்களால் பெண் தலமைத்துவ குடும்பங்கள் சற்று மாறுபட்டதாகவேயுள்ளது. ஏன் எனில் இள வயது பெண் தலைமைத்துவ குடும்பங்களே தற்போது அதிகமாக உள்ளனர். எனவே தான் இவர்களின்

வாழ்வியல் நோக்கங்களை ஆய்வு செய்ய வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இவர்களது வாழ்நிலை பல்வேறு மட்டங்களிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பதால் இவர்கள் பற்றிய பார்வை கூர்மையடைகின்றது.

அந்த அடிப்படையில் கண்டாவளை பிரதேசத்திற்குள் 7508 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவர்களுள் 1374 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளனர். அதில் 1115 விதவைகள், 259 கைவிடப்பட்ட, குடும்ப பிரிவு மற்றும் காணாமல் போன பெண்கள், விதவைகளில் 354 பேர் போர் விதவைகள், இவர்களை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

1. கணவனின் இறப்பு
2. கணவனின் பிரிவு
   அ. சட்டரீதியாக கணவனை பிரிதல்
   ஆ. கணவனால் கைவிடப்படுதல்
   இ. கணவன் காணாமல் போதல்
3) திருமண வயதை அடைந்தும் திருமணமாகாது தனித்து வாழும் பெண்கள்
4) கணவன் வெளிநாடு சென்ற பெண்கள் (இவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக காணப்படுவதுடன் அதன் எண்ணிக்கை பெண் தலைமைத்துவ குடும்ப எண்ணிக்கையில் இணைக்கப்படவில்லை)

அடுத்து கண்டாவளை பிரதேச பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை நோக்கலாம்.

1. பொருளாதார ரீதியான பிரச்சினைகள்
2. சமூக கலாசார பிரச்சினைகள்
3. உளவியல் ரீதியான பிரச்சினைகள்
4. சட்ட ரீதியான பிரச்சினைகள்

முதலில் பொருளாதார பிரச்சினைகளை பார்த்தால் முற்றுமுழுதாக கணவனின் வருமானத்திலேயே தங்கியிருந்த பெண்கள் கணவனின் பிரிவினை தொடர்ந்து குடும்பத்தினை கொண்டு நடாத்துவதற்கு தேவையான வருமானத்தை ஈட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுகின்றனர். கண்டாவளை பிரதேச பெண் தலைமைத்துவ குடும்பங்களில் அதிகம் ஆனவர்கள் கல்வி மற்றும் தொழில் சார் திறமைகள் அற்றவர்களாக உள்ளமையினால் முறைசாரா துறைகளில் மிகவும் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்ய வேண்டிய சூழல் ஏற்படுகின்றது. பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வீட்டில் இருந்து கொண்டே செய்யும் சுய தொழில் முயற்சிகளாக கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, தையல், சிறுகடை வியாபாரம், வீட்டுத்தோட்டம், உணவுப்பொருட்கள் பொதியிட்டு விற்றல் போன்றவற்றை செய்கின்றனர். இதனை விட நாட் கூலி வேலைக்கும் செல்கின்றனர். இதனால் கிடைக்கும் வருமானம் போதாதாக இருக்கும் காரணத்தால் மிகவும் நலிவுற்ற நிலையில் காணப்படும் இப் பெண்களுக்கு வருமானமீட்டல் என்பதுடன் மட்டுமல்லாது சிறுவர்களை வளர்த்தல் மற்றும் தமது அடிப்படை தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் போன்ற தேவைகளை கூட நிறைவேற்ற முடியாதவர்களாக காணப்படுகின்றனர். பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம்

வழங்கப்படுகின்ற போதிலும் அதனை முற்றுமுழுதாக பூரணமாக்கும் மனித வலு மற்றும் பொருளாதார வலு பெண் தலைமைத்துவ குடும்பங்களிடம் இல்லாதுள்ளது.

பெரும்பாலும் இப்பெண்கள்தனியாக ஒன்றுக்கு மேற்பட்ட பிரச்சினைகளை ஒரே தடவையில் எதிர்கொள்கின்றனர். பெரும்பாலான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அடுத்த வேளை சாப்பாட்டினை எவ்வாறு தனது பிள்ளைகளுக்கு கொடுக்கலாம் என்ற நிலையில் தமது நாளாந்த வாழ்க்கையை சிரமத்துடன் கழிக்கின்றனர். இதனை விட பெண் தலைமைத்துவ பெண்கள் வேலைவாய்ப்புகளுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் நிலை கண்டாவளை பிரதேசத்தில் அதிகமாக காணப்படுகின்றது. இது அவர்களது பொருளாதார நெருக்கீட்டின் ஒரு வெளிப்பாடு ஆகும். தமது பிள்ளைகளை உறவினர்களிடம் ஒப்படைத்து விட்டு வெளிநாடுகளிற்கு சென்று மிகவும் சிரமப்படுகின்றனர். அதே வேளை அவர்களது பிள்ளைகளும் பாடசாலை இடைவிலகல் மற்றும் உளப்பாதிப்புக்கும் உள்ளாகின்றனர்.

அடுத்து உள ரீதியான பிரச்சினைகள் என பார்த்தால் பொருளாதார பிரச்சினைக்கு மேலதிகமாக பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உளரீதியான மற்றும் உணர்வு ரீதியான பிரச்சினைகளை எதிர் கொண்டிருக்கின்றார்கள். குடும்ப தலைவரை இழந்தால் ஒன்றுக்கு மேற்பட்ட பிரச்சினைகளை ஒரே நேரத்தில் எதிர்கொள்ளும் போது மன சோர்வு, பதகளிப்பு, நெருக்கீடு, நெருக்கீட்டுக்கு பிற்பட்ட மனவடு, தற்கொலை எண்ணம், மெய்ப்பாட்டு முறைப்பாடு போன்ற பிரச்சினைகள் காணப்படும். கணவனை இழந்த பெண்கள் வீட்டு வேலைகள் மற்றும் குடும்பத்துடன் தொடர்பான வெளி வேலைகளையும் பார்க்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். அத்துடன் சமுகத்தால் ஒதுக்கப்படல், தமது பிள்ளைகளை வளர்த்தல், கல்வி கற்பித்தல், நல்லவாழ்வை அமைத்து கொடுத்தல் என்பன தொடர்பான திடீர் பொறுப்புக்களை ஏற்கவேண்டிய நிலை ஏற்படும் போது மன அழுத்தத்திற்கு உள்ளாவர். இதனால் 'ஞாபக மீளோட்டம்' எனும் ஒரு மன பிரச்சினையும் இப் பெண்களிடம் காணப்படும்.

இதனை விட யுத்தத்திற்கு பின்னான மன வடு பல பெண்களுக்கு உள்ளது. கடந்த போர்சூழல்காரணமாக பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு இளவயதிலேயே திருமணம் செய்து கொடுத்தனர். ஆனால் அதன் பின்னர் ஆண்கள் யுத்தத்தில் இறந்தமையினால் மனவடுவுக்குள்ளான பெண்களும் உள்ளனர். இதனை விட கணவன் காணாமல் போன பெண்கள் தமது கணவர் திரும்பி வருவார் எனும் நம்பிக்கையுடன் வாழும் நிலையும் இங்குள்ளது. இவர்கள் தாம் சுமங்கலியா இல்லையா என தீர்மானம் எடுக்க முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இதனை விட இப்பெண்களிடம் உணர்வு ரீதியான ஏக்கமும் காணப்படும். இந்த ஏக்கத்தினை மெய்ப்பாட்டு முறைப்பாட்டினால் (தலைச்சுமை,

நெஞ்சடைப்பு, பெருமூச்சு, இயலாமை) மூலம் வெளிப்படுத்துவர்.

இதனை விட கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் தற்கொலை செய்யும் மன நிலை உடையவராக இருப்பர். காரணம் கணவர் தனக்கு செய்த துரோகத்தினை தாங்கமுடியாதவராகவும் அல்லது கணவரது வன்முறையை தாங்க முடியாத நிலையில் தற்கொலை செய்ய முனையும் எண்ணமுள்ள பெண்களை இங்கு காணமுடிகின்றது. குறிப்பாக பெண் தலமைத்துவ குடும்ப பெண்கள் தமது கணவனின் திடீர் பிரிவு காரணமாக அதிர்ச்சி என்னும் மன வடுவை கொண்டிருப்பர். இவ் அதிர்ச்சியில் இருந்து மீள முடியாத நிலமை தற்கொலை எண்ணத்தை தூண்டி விடும். இவ்வாறான பல உளரீதியான பிரச்சினைகள் காணப்படும்.

அடுத்து சமூக கலாசார பிரச்சினைகள் நோக்கின் குறிப்பாக இப் பெண்கள் நல்ல காரியங்களுக்கு முன்னிற்க முடியாதவர்கள். கணவனின் இறப்பிற்கு காரணம் அந்தப்பெண் 'இராசி இல்லாததுதான்' என்ற சமூகத்தின் பழிச்சொல்லுக்கு ஆளாகுவர். அதனைவிட மங்கலகரமான எந்த நிகழ்விற்கும் அவள் முன் நிற்க முடியாத நிலை ஏற்படும். அத்துடன் அவளது பாதுகாப்பு என்பது தீய சிந்தனை உள்ள ஆண்களால் கேள்விக்குள்ளாக்கப்படும். குறிப்பாக பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகும் நிலை உருவாவதுடன் பல பெண்களது இளமை மற்றும் தனிமையை பயன்படுத்தி தமது விருப்பங்களை நிறைவேற்றி விட்டு அவர்களை ஏமாற்றி செல்லும் நிலமையும் இங்கு காணப்படுகின்றது. அதனை விட கணவரின் இழப்பு தொடர்பாக வழங்கப்படும் நட்டஈட்டு தொகையினை தந்திரமாக அபகரிக்கும் போக்கும் காணப்படுகின்றது.

இதனை விட கணவன் காணாமல் போன பெண்கள் தமது கணவர் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என்பது தெரியாமல் பொட்டு, தாலி என்பவற்றை போட்டால் சமூகம் அவளை விமர்சிக்கும். இதனால் மனதில் சுமங்கலியாகவும் சமூக ரீதி யில் விதவையாகவும் நடக்கும் நிலை உள்ளது. இதனைவிட கணவனை இழந்த பெண்கள் மங்களகரமற்றவர்கள் மற்றும் அவளது கணவனின் நினைவுகளுடன் வாழவேண்டும் என சமுகத்தால் எதிர்பார்க்கப்படுகின்றார்கள். சட்டரீதி யாக மறுமணம் தடுக்கப்படாத போதிலும் சமூகரீதியாக அவள் திருமணம் ஆகாது இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றாள். மறு மணம் என்பதனை பெரும்பாலான பெண்கள் சமூகவடுவான ஒரு விடயமாகவும் கலாசாரத்திற்கு முரணானது எனவும் கருதுகின்றனர். இதனாலேயே பெரும்பாலான பெண்கள் தாமாகவே மறுமணம் செய்யவிருப்பமில்லாத நிலை காணப்படுகின்றது.

சட்டரீதியான பிரச்சினைகள் என பார்த்தால் முதலில் காணாமல் போனோரின் இளம் மனைவி கணவனை இழந்தவர் என சட்டரீதி யாகவோ சமூகரீதியாகவோ ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இதனால் மறுமண மீள்கட்டுமானம் தொடர்பாக மற்றும் எதிர்காலம் தொடர்பான

முடிவுகளை எடுக்கமுடியாதவர்களாக காணப்படுகின்றார்கள். மேலும் சட்ட ரீதியாக திருமணம் செய்யாது சமயாசாரப்படி திருமணம் செய்து அவர்களுக்கு குழந்தை பிறந்து இருக்கும் நிலையில் கணவனின் இறப்பு அல்லது பிரிவு காரணமாக பிள்ளைகளுக்கு பிறப்புச்சான்றிதழ் பெறமுடியாத நிலை உள்ளது. இதனைவிட கணவனை இழந்த பெண்களை திருமணம் செய்வதாக ஏமாற்றி ஏற்கனவே திருமணமான வேறிடத்தை சேர்ந்த ஆண்கள் தமது தேவைகளைநிறைவேற்றி அவர் கர்ப்பம் தரித்ததும் தமது இருப்பிடத்தையே சொல்லாமல் சென்று விடுவார்கள். இதனால் பிறக்கின்ற குழந்தைக்கு பிறப்புப் பத்திரம் பெற முடியாமலும் தாயின் பெயரில் பெறும் நிலையும் காணப்படுகின்றது.

மேலும் வடமாகாணத்தை பொறுத்தவரை 'தேசவழமை சட்டம்' அமுலில் உள்ளது. அதன்படி திருமணமான பெண் ஒருவர் தனது சொத்துக்களை கணவரின் சம்மதத்துடனே விற்கலாம் அல்லது ஈடுவைக்கலாம். இதனால் அசையாச்சொத்துக்களை விற்றல், ஈடுவைத்தல் என்பன காணாமல் போனவரின் மனைவியருக்கு ஒரு பிரச்சினையாக உள்ளது. இதனை விட திருமண சான்றிதழ், இறப்பு சான்றிதழ் மற்றும் பிறப்பு சான்றிதழ் என்பவற்றை பெறுவது பெரும் பிரச்சினையாக உள்ளது. இவ்வாறாக பெண்தலைமைத்துவ குடும்பங்கள் பொருளாதார சமூக கலாசார உளவியல் மற்றும் சட்டம் சார் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை எமது கண்டாவளை பிரதேச பெண் தலமைத்துவ குடும்பங்கள் மட்டுமல்ல வடக்கில் வாழும் பெண்தலமைத்துவ குடும்பங்கள் அனைத்துக்கும் பொருந்துவதாக உள்ளது. இப்பிரச்சினைகள் ஒவ்வொன்றும் மற்றயதில் தாக்கம் செலுத்துகின்றன.

இலங்கை 'பெண்கள் பட்டயத்தின் பிரிவு 15வில் 'சமூக மனப்பாங்குகளில் விதவைகள், கணவனை இழந்த பெண்கள், தனித்த பெண்கள் என்பவர்களின் பாதகமான சமூக எதிர்ப்பினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கு அமைய எமது பிரதேசத்திற்குள் வாழும் பெண் தலமைத்துவ குடும்பங்களின் ஆரோக்கியமான வாழ்விற்கு வழி அமைத்துக் கொடுப்பதில் சாதாரண மக்கள் தொடக்கம் அரசாங்கம் வரை காத்திரமான பங்களிப்பை வழங்குதல் வேண்டும். பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உரிய தளங்களை உருவாக்குவதன் மூலம் அவர்கள் பொருளாதார சமூக கலாசார சட்ட ரீதியாகவும் உடல் உள ரீதியாகவும் ஆரோக்கியமான நிலையில் வாழமுடியும். இவற்றுக்கு முதற்படியாக எமது சமுகத்தில் உள்ள பெண் தலமைத்துவ குடும்பங்கள் பற்றிய மக்களின் மனப்பாங்கில் பாரிய மாற்றம் ஏற்பட வேண்டும். ஏற்படுத்த முயற்சி செய்வோம்.

''பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல
மாதர் அறிவைக்கெடுத்தார்''

மகாகவி பாரதி

# உணர்வை தகர்ப்போம்!

திருமதி சு.மாதினி
இல.45, குமரபுரம்.

இனியவளே! என்னவளே!
இதமான கவியெழுத!
முன்மொழிந்து தாராயோ....?
என் தமிழே!..என்னுயிரே
உன் அழகைத் தாராயோ!

சொல்லி அழுது சோகத்தைப் பகிர்வோம்.
துன்பமே சூழினும் சோர்வின்றி எழுவோம்.
எஞ்சிய நாட்கள் மீளவும் வேண்டும்.
அந்நாளை எமக்காய் வாழவும் வேண்டும்.
சோகங்கள் அறுத்து சுகங்களை விதைப்போம்.
காலத்து பணியென்று கடமைகள் முடிப்போம்.
நினைவிழந்து கவலை அறுப்போம்!
கலைகளில் திளைப்போம்!

இன்று இங்கு!
வெளிச்சம் வீடு நிறைந்து கிடக்கு.
வீடோ வெளிச்சோடிக் கிடக்கு.
நாம் இன்னும் தேடுகின்றோம்;
தொலைத்ததை அல்ல
தொலைக்க......?!

# திராவிட மொழிக் குடும்பம்

**இ.தர்மேந்திரா.**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை

உலகில் வழங்கும் மொழிகளில் தமிழ் தொன்மையானது. உலகில் உள்ள மொழிகள் ஒத்த இயல்பு கருதி மொழிக் குடும்பங்களாக வகுக்கப்பட்டுள்ளது.

1.திராவிட மொழிக் குடும்பம்.
2.இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பம்.
3.செமிற்றிக் மொழிக் குடும்பம்.

திராவிட மொழிக்குடும்பத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், துளு, கொடகு போன்ற மொழிகளும் இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பத்தில் ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம், பிரான்ஸ், யப்பானியம், சீனம் போன்ற மொழிகளும் செமிற்றிக் மொழிக் குடும்பத்தில் வளர்ச்சியடையாத தென்னாபிரிக்க மொழிகளும் இலத்தீன் அமெரிக்க மொழிகளும் உள்ளடக்கப்படுகின்றன.

இம் மொழிக் குடும்பங்களில் திராவிட மொழிக்குடும்பமும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பமும் பிரசித்தி பெற்றவை. இவற்றில் திராவிட மொழிக் குடும்பமும் ஒன்றாகும்.

திராவிட மொழி பற்றிய தெளிவான சிந்தனை 1856 இல் 'கால்டுவெல்' எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் காணப்படுகிறது. இவர் 12 திராவிட மொழிகள் பற்றி குறிப்பிடுகிறார். அவை, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கொடகு, துத, தோத, கோந், கூய், ஒரான், ராஜ்மகால் போன்றவனாகும்.

19 ஆம் நூற்றாண்டில் கிழக்கிந்திய வர்த்தக கம்பனியைச் சேர்ந்த 'எல்லீஸ்' என்பவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளின் ஒப்புவமை பற்றிக் கூறியுள்ளார்.

கி.பி 8 ஆம் நூற்றாண்டில் குமரிலபட்டர் என்பவர் எழுதிய தந்திர வார்த்திகா என்ற கட்டுரையில் ''ஆந்திர திராவிட'' என்ற சொல்லை பயன்படுத்துகிறார். இதில் ஆந்திரம் என்பது தெலுங்காகும். திராவிடம் என்பது தமிழ் ஆகும். ஆரம்ப காலத்தில் அறிஞர்களால் குறிப்பிடப்பட்ட திராவிட மொழி பற்றிய எண்ணக்கருக்கள் பிற்காலத்தில் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டது.

20 ம் நூற்றாண்டில் டாக்டர் மு.வரதராஜன் எழுதிய மொழி வரலாறு எனும் நூலில் காட்டுவெல் கூறிய 12 மொழிகளையும் நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கொடகு ஆகிய ஆறு மொழிகளும் திருந்திய மொழி, பண்பட்ட மொழி, செம்மையான மொழி எனக் குறிப்பிட்டுள்ளார். துத, தோத, கோந், கூய், ஒரான், ராஜ்ம

கால் ஆகிய ஆறு மொழிகளும் திருந்தார் மொழி, பண்படாத மொழி, செம்மை யற்ற மொழி எனக் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் தன்னுடைய தமிழ்மொழி இலக்கண இயல்புகள் எனும் நூலில் 20க்கு மேற்பட்ட திராவிட மொழிகள் பற்றி கூறியுள்ளார். இவற்றில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கொடகு, துத, தோத, கோந், கூய், ஒரான், ராஜ்மகால், கொலாமி, கோயா, படகா, இருளா, கதவா, வார்ஜி, ஒல் லாரி, நாய்க்கி, வெங்கோ போன்றவை குறிப்பிடத்தக்கது.

திராவிட மூல மொழி தமிழ். தமிழில் இருந்து கிளைத்தெழுந்த மொழிகளே ஏனையவை. இதனால் தான் தமிழ் ஒரு திராவிட மொழி என கூற நேர்ந்தது.

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்சிந்துவெளியில் வாழ்ந்த திராவிடரை மத்திய ஆசியாவில் இருந்து இமாலய சாரலில் உள்ள 'போலன்', 'கைபர்' கணவாய்கள் ஊடாக இந்தியாவுக்கு நுழைந்த ஆரியர் திராவிடரை தம்வழிப்படுத்தி 'தஸ்யுக்கள்' ஆக்கி ஆண்ட வேளையில் தம்மிடம் உள்ள பண்புகளை அவர்களுக்கு கொடுத்தனர். அவர்களிடம் இருந்த நல்ல பண்புகளை தாம் பெற்றனர். இதனால் ஆரிய நாகரிகமும் திராவிட நாகரிகமும் கலந்த நிலையில் புதிய நாகரிகமும் உருவானது. இதுவே இந்து நாகரிகம் ஆகும். அங்கு வாழ்ந்த திராவிடரே தமிழர். தமிழர் தாய் மொழி தமிழாயின் திராவிடர் தாய் மெ ாழி திராவிடமே.

கி.பி 8ம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கரர் சம்மந்தரை ''திராவிட சிசு'' என குறிப்பிட்டுள்ளார். கி.பி 1576 இல் 'தாரநாத்' என்பவர் எழுதிய கட்டுரையில் தமிழைக் குறிப்பதற்கு ''திரமிள'' என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார்.

வேற்று மொழியாளர்கள் தமிழைக் குறிப்பதற்கு வெவ்வேறு பதங்களைப் பயன்படுத்தியுள்ளனர். அவையாவன,

டச்சுப் பாதிரிமார் - டமுழியா
சீன யாத்திரிகள் - டகிமோலோ
கிரேக்கர் - டமிரிசி

இது போலவே தமிழ் பயிலாத ஆரியரும் தமிழை திராவிடம் எனக் கூறினார். இத் திராவிடமே கால ஓட்டத்தில் சிதைவடைந்து இன்றைய தமிழாக காட்சியளிக்கின்றது. இத் திராவிட மொழி இன்று,

தென் திராவிடம்
வட திராவிடம்
மத்திய திராவிடம்எனும் முப்பெரும் கூறுகளாக வகுத்து நோக்கப்படுவதைக் காணலாம். இவ்வாறு காணப்படும் திராவிட மொழிகளில் தமிழர்களின் தாய் மொழியாகிய தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தின் முதன்மையான மொழியாகவும் செம்மொழியாகவும் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அதி களவிலும் அமெரிக்கா, கனடா, ஐரோப்பியா, ஐக்கிய அரபி அமீரகம், தென்னாபிரிக்கா, மொரீசியஸ், பிஜி, ரீயுனியன், டிரினிடாட் போன்ற நாடுகளில் சிறியளவிலும் உலகில் எட்டு கோடி மக்கள் பேசும் மொழியாக விருத்தி அடைந்து தனித்துவமான மொழியாக காணப்படுவதனை நோக்கலாம். இவ்வாறு காணப்படும் தமிழ் மொழியை பேணி பாதுகாப்பது எமது கடமை யாகும்.

# வரமாகும் நேரமும் செலவாகும் பண்பாடும்

திருமதி செல்வநாயகி இராஜரட்ணம்
ஆசிரியர், கிளி/முருகானந்தா கல்லூரி,
இல:33, பெரியகுளம்.

நேரம் பொன்னானது என்பது நேரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பொன் மொழியாகும். காலம் கடந்து செல்வது இயற்கை. காலம் எம்மை கடக்க முதல் அதனை முழுமையாகவும் சரியான தேவைக்காகவும் பயன்படுத்த வேண்டும்.

காலத்தை வெல்லும் நோக்கில் இன்றைய உலகு மிக வேகமாக பயணிக்கின்றது. அதன் வேகத்துக்கு ஈடு கொடுத்து நாமும் அதிவேகமாக எல்லாச் செயற்பாடுகளிலும் முன்னேறிவருகின்றோம். எப்போதும் வேகம் எதிலும் வேகம் பொறுமை, நிதானம் என்ற வார்த்தைகளுக்கு இடமே இல்லை. எமது முன்னோர் கட்டிக்காத்த பண்பாடுகளும் கலை கலாசாரங்களும் கூட அருகிவருவது வேதனை தரும் விடயமாகும்.

காலையில் முழுகுவதில் இருந்தே ஆரம்பிப்போம் வாரத்தில் ஒரு முறை நல்லெண்ணெய் தேய்த்து ஆவரசு, சிகைக்காய், தேசிக்காய், வெந்தயம் அரைத்து அரப்பாக தலைக்கு வைத்து ஊறவிட்டு அதன் குளிர்மை உடல் முழுவதும் பரவும் சுகத்தை அனுபவித்த பின்னர் கண்கள் சிவக்கும் வரை முழுகுவது என்று பண்பாடாகும். இன்று நேரம் இருக்கிறதா? காலத்தை மீதமாக்க சம்பூவைத் தேய்த்து அவசர அவசரமாக முழுகிவிட்டு புறப்படுகிறோம்.

அதிவேகமாக பயணம் செய்வதையே விரும்புகின்றோம். இதனால் நிதானத்தை இழந்து விடுகிறோம். இன்று வீதி விபத்துக்கள் அதிகரித்துச் செல்வதற்கு முதற் காரணம் நேரத்தை மீதப்படுத்த நினைக்கும் வேகமாகும். மனிதர் ஒருவரை வாகனம் மோதிவிட்டாலும் நின்று கவனிக்க நேரம் இல்லாததால் வேகமாக சென்று விடுகின்றனர். எமது மனிதாபிமானம் மரணித்துப் போவது எதனால்? முல்லைக்குத் தேரும் புறாவுக்காகத் தன்னையும் வழங்கிய பாரதி, சிபி மன்னர் பரம்பரையிலும் வந்த நாம் எமது இதயத்தை கல்லாக்கி கொண்டு வருகிறோம்.

ஆலயங்களுக்குச் சென்று வழிபாடாற்றுவது எமது பண்பாடாகும். இதனால் மனம் அமைதியடையும் நம்பிக்கை பிறக்கும் கடவுள் நம்பிக்கை பயத்தை நீக்கும். இன்று ஆலயங்களுக்கு செல்ல நேரம் இல்லை இது எம்மவர்கள் பலரின் ஆதங்கம். கோயில்களிலும் அனேகமாக வயதானவர்களையே காணமுடிகின்றது. இளைஞர்களை காண முடிவதில்லை. கூடுதலான மன அமைதி தேவைப்படுவது இளைய சமுதாயத்தினருக்கே இவர்களின் பொறுமை இல்லாத வேகம் நம் பண்பாட்டை மழுங்கடிக்கின்றது.

எமது உணவுப் பழக்கவழக்கத்தை எடுத்தால் பிட்டு, களி, கஞ்சி, கூழ், அப்பம், தோசை, கறிசோறு போன்றவற்றை சமைக்க நேரம் கூட எடுக்கும் இதனால் நூடில்ஸ், பாண், பணிஸ், பிஸ்கட் போன்ற திடீர் உணவுகளைத் தெரிவு செய்வதில் பலரும் விருப்பம் காட்டுகின்றனர். நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற பல்வேறு நோய்களுற்கு ஆளாகின்றனர்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

என வாழும் நம் வாழ்க்கை முறை எங்கே? மூலிகை மருத்துவ முறையானது தமிழர் வரலாற்றில் இணைந்தது. எமது பிரதேச இடப்பெயர்கள் பலவும் மூலிகைச் செடிகளின் பெயர்களுடன் இணைந்ததாகவே காணப்படுகின்றது. கண்டாவளை, கள்ளிப்பிட்டி, ஆவரஞ்சாட்டி, வெளிக்கண்டல், கிளிநொச்சி போன்றன ஆதாரங்களாகும். ஆனால் இன்று மூலிகை மருத்துவத்திற்கு நேரம் தேவைப்படும் என்பதால் பலரும் ஆங்கில மருத்துவ முறைகளையே பெரிதும் நாடி பக்கவிளைவுகளால் துன்பப்படுகின்றனர்.

வீடுகளில் இடம்பெறும் மங்கல நிகழ்வுகளுக்கு உறவினர்களுக்கு அழைப்பு விடுப்பதற்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக இருவர் சென்று அழைப்பது எமது பண்பாடு. இதன்போது உறவினர்களுடன் அளவளாவி மகிழ்வர். இன்றோ நேரம் மீதப்படுத்த தொலைபேசியூடாகவோ, அழைப்பிதழ் ஊடாகவோ அழைப்பு விடப்படுகின்றது. இதனால் குடும்ப அன்னியோன்னியம் பாதிப்படைகின்றது. அதுமட்டுமன்றி வீடுகளில் சுபகாரியங்கள் நடைபெறுவதனால் ஒரு மாதத்திற்கு முன்பே உறவினர், அயலவர்கள் கூடி புழுங்கல் அவித்தல், மாஇடித்தல், விறகு எடுத்தல், பலகாரம் சுடுதல் என வேலைகளில் ஈடுபடுவர். இது காலவிரையம் தற்போது பல விழாக்கள் மண்டபங்களிலே கொண்டாடப்படுகின்றன.

கோயில்களிலும், பொது இடங்களிலும் பல்வேறு கூத்துக்கள் ஆடப்படும். கூத்து பழகுதல், ஆடுதல் என பொழுது களியும். கூத்துக்கள் ஆடி முடிந்தாலும் பாத்திரப் பெயர் நின்று நிலைக்கும் இதுகாலவிரையம் என்பதால் பலரும் தொலைக்காட்சி தொடர் நாடகங்களிலும், திரைப்படங்களிலும் பொழுதைக்களிக்கின்றனர்.

எமது முதுசமான கூத்து, வில் லிசை என்பன அழிந்து கொண்டு செல்கின்றன.....குடும்பத்தில் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, பிள்ளைகள் எல்லோரும் கூடி உணவருந்துவதும் கருத்துக்களை பரிமாற்றம் செய்வதும் எம் பண்பாடு. இன்று எல்லோரும் ஒரு தடவையாவது சந்திக்க முடிகிறதா? பிள்ளைகள் பாடசாலை, தனியார் கல்வி என நேரத்துக்காக திண்டாட வயோதி பர்கள் தனிமையால் திண்டாடுகிறார்கள். வீட்டில் உறவுகளுடன் செலவழிக்கவே நேரம் இல்லாது வாழ்வு நகர்கிறது.

திருமணம் என்ற பண்பாட்டு நிகழ்வு காதல் திருமணமாகவோ பெரியோர்களால் நிச்சயிக்கப்படுவதாகவோ நிகழலாம். நன்றாக விசாரித்து பெரியோரை

சாட்சியாக்கி நிகழ்த்தப்படும். சில காதல் திருமணங்கள் பத்து வருடங்கள் கூட தள்ளப்பட்டு நடைபெறும். இன்றைய காலம் நேரம் மீதி கருதி மிகக் குறுகிய காலத்தில் காதலித்து மணம் முடித்து குறுகிய காலத்துள் பிரிந்து விடும் துன்ப நிலை காணப்படுகிறது. தற்கொலைகளும் கொலைகளும் அதிகரிக்கின்றன. இதற்கு காரணம் அவசரமும் பண்பாட்டுச் சிதைவுமே யாகும்.

நேரம் திட்டமிட்டு பயன்படுத்தப் படும் போது மாலையில் விளையாட, உறவினருடன் உரையாட, மலர்ச்செடிகளும் பயன்தரும் மரங்களும் வளர்க்க, பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்க நேரம் கிடைக்கும். இயந்திரமாக வேலைகள் செய்ய வேண்டும். ஆனால் நாங்கள் இயந்திரமாகும் ஆபத்தை தடுப்போம்.

பண்பாட்டுடன் கூடிய வாழ்வு இளமை, மன அமைதி, நல்லொழுக்க விழுமியக்கல்வி என்பவற்றைப் பெற்றுத்தரும் நேரத்தை மட்டுமே கவனித்தால் எதிர்கால சந்ததிக்கு நாம் கையளிக்கப் போகும் பண்பாடுதான் என்ன? சிந்தித்துச் செயற்படுவோம்.

# சிலப்பதிகாரம் ஓர் ஆணாதிக்கச் சித்தரிப்பு

க.துஸ்யந்தன்(ஆசிரியர்)
கண்ணகிநகர், புன்னைநீராவி.

சிலப்பதிகாரம் என்ற காப்பியம் மிகச்சிறந்த கவித்துவப் பண்புகளைக் கொண்டது என்பதில் சந்தேகமில்லை. அரங்கேற்றமரபு, அக்கால மக்களின் வாழ்வியல் நடன மரபு முதலான இன்னோரென்ன பல்வேறு விடயங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளன. ''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதூஉம்'', ''உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துதலும்'', ''ஊழ்வினை உருத்து வந்தூட்டுமென்பதூஉம்.....'' இக் காப்பியத்தின் அடி நாதங்களாக உள்ளன என்பதைப் பதிகச்செய்யுளினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. பாரதி யார்கூட ''நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு'' என்று இக்காப்பியத்தைப் போற்றியுள்ளார். இக் காப்பியத்திலுள்ள ஆணாதிக்கச் செல்வாக்கைப் பற்றி இக் கட்டுரை ஆராய முனைகின்றது.

கண்ணகியைப் பெரியோர் செய்த உறுதிப்பாட்டில் கோவலன் மணம் செய்கின்றான். புகார்க்காண்டத்தில் 'மங்கல வாழ்த்துப்பாடல்' என்னும் முதலாவது கதையில் கோவலனை இளங்கோ முதலில் அறிமுகம் செய்கின்றார். ஆனால் முதலில் கண்ணகியை அறிமுகம் செய்த பின்பே கோவலனை அறிமுகம் செய்கின்றார்.

''நாக நீள்நகரொடு நாக நாடதனோடு....''

என்ற மங்கல வாழ்த்துப்பாடல் மூலம் இச்சம்பவத்தை அறியலாம். இப்பாடலில் கண்ணகி மாநாயகனின் செல்வ மகள். குலத்தின் கொம்பு பன்னிரெண்டு ஆண்டு வயதுடையாள். திருமகள் போன்ற வடிவுடையாள். அருந்ததி போன்ற கற்புடையாள். பெண்களைத் தொழுதேற்றும் பண்புடையாள். விளங்கிய பெருங்குணங்களைகாதலிப்பாள். என்று பலவாறாக கண்ணகியின் குணங்கள் எடுத்தாளப்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு வருணிப்பை இளங்கோவடிகள் மேற்கொண்டுள்ளமை பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

தொடக்கத்திலே கண்ணகியின் குண நலன் திரிபடையாதது என்பதை அவள் கற்பு நிலையாலும் காதல் நிலையாலும் அறிமுகம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஒரு வரையறையை காப்பிய ஆசிரியர் வரையறை செய்தது, கோவலனை தன்னிகரில்லாத் தலைவனாகக் காட்டுவதற்கா? என ஐயுறவும் வைக்கின்றது. அது மட்டுமல்ல கோவலன் கேவலமானவன் அல்ல என்பதை நிரூபிப்பதற்கா? என்று பலவாறான வினாக்களைத் தோற்றுவிக்கின்றது.

கோவலனை அறிமுகம் செய்யும் போது மிகவும் கவனமாக அறிமுகம் செய்கிறார்.

''பெரு நில முழுதாளும் பெரு மகன் தலை வைத்த

ஒருதனிக் குடிகளோடு உயர்ந்து ஓங்கு செல்வத்தன்.....''

என்றமங்கல வாழ்த்துப் பாடலினூடாக கோவலனின் சிறப்புக்களைக் கண்டு கொள்ள முடியும். அவற்றை நோக்குவோம் கோவலன் அறநெறி பேணும் மாசாத்துவனுடைய மகன் சோழ மன்னனுக்கு நிகரான செல்வச்செழிப்பு மிக்கவன். மண்ணிலே மிகச் சிறந்த புகழ் பெற்றவன். இவர் பெண்கள் மத்தியிலே பாராட்டி பேசப்படுவார். எல்லாப் பெண்களும் கோவலனை உரிமையாக்க விரும்பினார்கள்.

இவ்வாறு பலவாறாக கோவலனைச் சிறப்பித்த ஆசிரியர் கோவலன் சில ஆண்டுகள் கண்ணகியைப் பிரியாமல் இல் வாழ்வு நடத்தினான். அந்த வாழ்வு கண்ணகிக்கு நிறைவு தந்தது என இளங்கோ குறிப்பிடுகிறார். இது சமூக மெய்மையுடன் பொருந்தக் கூடிய ஒன்றா? சில ஆண்டுகளில் திருமண வாழ்க்கை மனைவிக்கு நிறைவைக் கொடுக்குமா? என்பது சிந்திக்கத்தக்க ஒரு விடயமாக இருக்கிறது. கோவலனைச் சிறப்பிக்கும்போது பெண்கள் மத்தியிலே பாராட்டி பேசப்படுபவன் என்று பாராட்டிய இளங்கோவடிகள் கண்ணகியை ஏன் ஆண்களால் விரும்பப்டுபவள் என்று கூறவில்லை என்பது நோக்கத்தக்க ஒரு விடயமாகும்.

கண்ணகிக்கு பேசப்பட்ட கற்பு கோவலனுக்கு ஏன் பேசப்படவில்லை. பாரதியார் சொன்ன ''கற்பு நிலையென்று சொல்ல வந்தால் இரு கட்சிக்கும் அதைப்பொதுவில் வைப்போம்'' என்ற கருத்தியல் இங்கே பேணப்படாதது ஏன்? என்ற வினா இயல்பாகவே இவ்விடத்தில் மேற்கிளம்புகின்றது. இவர்களது இல்வாழ்வில் குழந்தைச் செல்வம் கூட கிடைக்க வில்லை. இவர்களது இல்வாழ்வு எப்படி முழுமை பெற்றது.

''மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு''

என்று வள்ளுவர்ப் பெருந்தகையே எடுத்துக்காட்டியுள்ளார்.

மிதமிஞ்சிய அளவுக்கு பொருள் ஒருவனிடம் இருந்தால் எவ்வளவு தீமையை ஏற்படுத்தும் என்பதற்கு கோவலனின் வணிக மேலாதிக்க வாழ்வு சிறந்த எடுத்துக் காட்டாக அமைகின்றது. ''மாலை வாங்குனர் சால நம் கொடிக்கு'' என்று மாதவியினுடைய அம்மம்மா மாலையை விலை கூறி விற்ற போது கோவலனால் மட்டுமே அந்தப் பெறுமதி வாய்ந்த மாலையை வாங்க முடிந்தது. இந்த நிகழ்வு எதனையும் செல்வத்தால் பெற்றுக் கொள்ளலாம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இக்காலத்தில் பெண்கள் ஒரு பண்டமாகப் பார்க்கப்பட்டார்கள். எனவே தான் அவர்களது உடலின்ப விலையை நடு வீதியில் விலை கூறி விற்கும் நிலை தோன்றியிருந்தது.

இவ்விடத்திலே பெரியோர் விருப்பத்துடனும் கோவலனுக்கு

நிகரான செல்வ வளங்களையும் கொண்டு கோவலனால் இல்வாழ்வுக்கென ஏற்றுக்கொள்ளப்பட்ட கண்ணகியின் நிலை என்ன? என்பது அழகாகச் சிந்திக்க வேண்டிய ஒன்றாக இருக்கின்றது. கோவலனால் மாதவியோடு போக முடிந்தது போல கண்ணகியால் இன்னுமொரு ஆடவனுடன் போக முடியாது போனதற்கு காரணம் என்ன? போன்ற வினா இயல்பாகவே இவ்விடத்தில் எழும். அக்கால வாழ்வியல் பெண்ணை எப்படிச் சிறைப்படுத்தியது என்பதை அந்தி மாலைச் சிறப்புக் கவிதையுனூடாக அறிந்து கொள்வோம்.

"அம்செம் சீறடி அணி சிலம்பு ஒழிய
மென் துகில் அல்குல் குங்குமம் எழுதாள்
மங்கல அணியில் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்து வீழ் காதினள்
திங்கள் வாண்முகம் சிறுவயர் பிரிய
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப
பவள வாணுதல் திலகம் இழப்ப
மையிரும் கூந்தல் நெய்யணி மறப்ப
கையறு நெஞ்சத்துக் கண்ணகி...

-(அந்தி மாலை 47 - 57)

மேற்படி பாடலினூடாக கண்ணகி தன்னை அழகுபடுத்த வில்லை எனவும் மங்கல அணி அணிந்திருந்தாள் என்றும் அறிய முடிகின்றது. கையறு நெஞ்சம் என்பதி னூடாக அவளது தவிப்பு நிலையை மேலும் எடுத்துக்காட்டுகின்றார் இளங்கோவடிகள்.

கோவலன் மாதவி கலை வாழ்வும் நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை. அங்கும் கோவலனின் ஆணாதிக்கச்சிந்தனைகளே மேலோங்குகின்றது. ''விடுதலறியா விரும்பினர்'' ஆளாக இருந்த கோவலன் தனது செல்வ வளங்கள் அனைத்தையும் மாதவியிடம் இழந்து மீண்டும் கண்ணகியிடம் வருகின்றார். மணிமேகலை என்னும் குழந்தைக்குத் தந்தையாகிய பின்னர் கோவலனினால் கண்ணகியிடம் வரமுடிகிறது. இங்கும் இவரது மேலாதிக்கம் வெளித்தெரிகின்றது. கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் வந்த பின்னர் மாதவி ''நம்மை மறந்தோரை நாம் மறக்க மாட்டோமால்'' எனக் கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளாள். கண்ணகியிடம் வந்த கோவலன் கண்ணகியை உடன் கூட்டிச் சென்று வேற்று நாட்டில் இன்பமாக வாழலாமென எண்ணினான். கண்ணகியை நேரிலே கேட்கின்றான்.

"சலம்புணர் கொள்கை சடுதியோடு ஆடி
குலம் தரு வான் பொருட் குன்றம் தொலைந்த
இலம்பாடு நானுத் தரும் எனக்கு"

-(கனாத்திற 69- 71)எனக் கோவலன் தன் காம வாழ்க்கையால் பெற்ற நாண நிலையை வெளிப்படையாகக் கூறுகின்றான். ஆனால் இவரைப் பிரிந்து தவித்த கண்ணகி தனது பிரிவுத் துயரைப்பற்றி கோவலனுக்கு எடுத்துக்கூற முடியவில்லை. கோவலனும் இவ் விடயம் தொடர்பாக கண்ணகியிடம் கேட்கவும் இல்லை. பொருளை இழந்து நின்ற கோவலனுக்கு ''சிலம்புள கொண்மின்'' என்று தனது சிலம்பைக் கொடுத்து அவரோடு மதுரை போக உடன்படுகிறாள். இக்காலத்துக்கு இது சாத்தியமா? விவாகரத்து அல்லவா

நடந்திருக்கும். இது யாவற்றையும் தொகுத்து நோக்கும் போது சிலப்பதி காரம் என்ற காவியம் தோற்றம் பெற்ற காலத்தில் பரந்தமை வழக்கம் மிக மோசமாகக் காணப்பட்டது, என்பதை இளங்கோவடிகள் அறிந்து அவற்றை நீக்க முற்பட்டிருக்கின்றார். என்பதை கண்ணகியின் கற்பு நெறிப்பட்ட வாழ்க்கை மூலம் அறிய முடிகின்றது. கோவலன் மாதவி பிரிவு நிகழாததாயின் கோவலன் கண்ணகி சேர்க்கை மீண்டும் இடம்பெற்றிருக்காது. இவை யாவற்றுக்கும் கானல் வரி என்ற ஒரு பகுதியையே காப்பிய ஆசிரியர் ஒதுக்கியுள்ளார். வணிகவர்க்கம் தனது நிதி ஆதிக்கத்தால் தனது ஆணாதிக்கத்தையும் நினைத்த படி தீய ஒழுங்கைகளில் ஈடுபட்டதையும் இறுதியாக தனது சொந்த மனைவியிடம் வருவதையும் மிகவும் தத்ரூபமாக படம் பிடித்துக் காட்டியமை நல்லதொரு கவிஞன் நல்லதொரு புகைப்படக் கலைஞன் என்பதற்கு சிறந்த சான்றாக அமைகின்றது. சமூகத்தில் இன்று வரை ஆணாதிக்கச்செயற்பாடுகளால் பெண்கள் பாதிப்புக்குள்ளாகி வருவதையும் கண்டு கொள்ள முடிகிறது. ஒரு சில பெண்ணாதிக்கத்தால் ஆண்களும் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள் என்ற மறு வாசிப்புக்கும் இத்தலைப்பு உட்படுத்தலாம்.

# மனித நேயமே உயிர்த்தெழுந்து வா!

வே.சுபிதா,
புளியம்பொக்கணை.

மனட்சாட்சி இல்லாத சமூகத்தில்
மனித நேயம் எரிந்து கொண்டிருக்கிறது.
துடிதுடித்து மனிதம் இறக்க
துன்பத்தை இரசிக்கிறான் மானிடன்.

மண்ணிலுள்ள மாதர் எல்லாம்
மனிதம் இன்றிப் போகிறார்கள்.
எண்ணிலடங்காத் துன்பங்கள்
எம்மை இங்கே வாட்டுகிறது.

நவீனத்தின் விரைவு வளர்ச்சி
நன்மைகள் விரைவால் வீழ்ச்சி
அன்பும் அழிந்து போச்சே.
அட்டூழியம் உயர்ந்ததாய் ஆச்சே

உயிர் வலிக்கும் கணங்கள்
உணர்வுகள் ஊமையாய்ப் போனது.
இப்படியும் நடக்கிறதா என
இதயம் அஞ்சிச் சாகிறது.

பரந்து பட்ட உலகில்
இரக்கமின்றி எத்தனை கொலைகள்.
உயிர்கள் உன்னதமானவை! என
உயிர்களோ உணர்ந்து கொள்ளவில்லை.

மானிட சமூகமே!
மாண்டு போவது நியதிதான் -ஆனால்
இரக்கமில்லாத கொலைகளைச் செய்து
இன்பம் என்ன காண்கிறீர்கள்?

கொலைகளும் கொள்ளைகளும்
கொட்டிக் கிடக்கும் உலகில்
கற்பழிப்பு என்னும் சித்திரவதை
கண்மூடித்தனமாய் நடக்கிறது.

மனித உறவுகளே!
மனச் சாட்சியை எரிக்காது
உண்மையுள்ள உறவுகளாய்
உணர்வுகளுக்கு இடமளியுங்கள்.
தொடர் கதையாய் போன
தொடரும் அட்டூழியங்களை எல்லாம்
முடிவுக்கு கொண்டு வந்து
விடிவொன்றை கண்டிடுவோம்
மனித மனங்கள் எல்லாம்
மனித நேயத்தை வளர்த்தால்
மாண்டு போன மனித நேயம்
மீண்டு வரும் உயர்ந்தெழுந்து...

*( 2014ஆம் ஆண்டின் தேசிய கலை இலக்கிய போட்டியில் திறந்த பிரிவில் பிரதேச ரீதியில் 1ம் இடமும் மாவட்டமட்டத்தில் - 3ஆம் இடமும் பெற்ற ஆக்கம்)*

# புனித சதா சகாய அன்னை ஆலயம் முரசுமோட்டை

**அருட்பணிச்சபை உறுப்பினர்கள்,**
புனித சதா சகாய அன்னை ஆலயம்,
முரசுமோட்டை.

புனித சதா சகாய அன்னை ஆலயம் பரந்தன் பங்குத்திருச்சபைக்கு உட்பட்டு முரசுமோட்டை, ஊரியான், கோரக்கன்கட்டு ஆகிய கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் வாழுகின்ற கத்தோலிக்க, இந்து மக்களின் குறை, நிறைகளைத் தீர்த்து வைக்கும் பாதுகாவலியாக முரசுமோட்டை 3ம் கட்டைப் பகுதியில் வீதி அருகே நிலை கொண்டு மக்களுக்கு காட்சி வழங்கிக் கொண்டிருக்கிது.

புனித சகா சகாய அன்னை ஆலயம் பற்றி எழுதப்படாத, யாத்திரிகர் ஸ்தலம் என்று கூறப்பட்டாலும் கூட பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் பல பகுதிகளிலும் இருந்து திருவிழா காலங்களில் அன்னையிடம் வந்து ஆசி பெற்றுச் செல்வது வழக்கம்.

**அன்னையின் ஆரம்பம்:**

மக்கள் ஆங்காங்கே காடுகளை வெட்டி குடியேறிக்கொண்டிருந்த காலம் 1955ம் ஆண்டு கிளிநொச்சி பகுதியிலே பங்குக் குருமனை இயங்கி வந்தது. அக்காலப் பகுதியில் முரசுமோட்டையில் வாழ்ந்து வந்த கத்தோலிக்க மக்கள் தமது ஆன்மீக தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பிரதேசத்தில் அன்னையின் அரவணைப்பு தேவைப்பட்டது. இதன் காரணமாக 1955 புரட்டாதி 30ம் திகதி அருட் தந்தை, சூசைநாதன் அடிகள் அவர்களால் புனித சதாசகாய அன்னையின் திருவுருவப்படம் கொண்டுவரப்பட்டு புனித அந்தோனியார் றோ.க.பாடசாலையில் (தற்போது வித்தியாலயம்) முதல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து முரசுமோட்டை ஞானப்பிரகாசம் மேற்பார்வையாளர் (ஓவசியர்பங்களா) இல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வந்தது. பின் நாளில் அன்னைக்கான தனியான இடம் அமைப்பதற்கானதேவை ஏற்பட்டது.

**நிரந்தர அமைவிடம்**

1956ம் ஆண்டு ஆலயம் அமைப்பதற்கான காணியை பெற்றுக்கொள்வதற்காக Fr சூசைநாதன் அடிகள் அவர்கள் இடங்களைச் சென்று பார்வையிட்ட போது தற்போது முருகன் ஆலய சூழலில் காடு அடையாளப்படுத்தப்படாமல் இருந்தது. இருந்தும் அன்னைக்காக காத்திருந்த காடு தற்போதைய பிரதான வீதியின் அமைவிடம் பொருத்தமாக இருந்தது. இவ்விடம் 2 ஏக்கர் அளவு கொண்ட காட்டுப் பகுதியாக காணப்பட்டது. இதன் எல்லைகளாக கிழக்கே

ஆற்றங்கரையும், தெற்கே A,35 வீதியும், வடக்கு, மேற்கு தனிநபர் காணிகளாக அமைந்துள்ளது.

### பணிகள் ஆரம்பம்

புனித சதா சகாய அன்னையின் ஆலயத்தை அமைப்பதற்காக கிராமத்தில் வாழ்ந்து வந்த கிறிஸ்தவர்களில் திரு.பேனாட் கதிர்ராம், திரு.சூனான் சுவானி, திரு.மரியாம்பிள்ளை ஆகியோர் இணைந்து காடு துப்பரவு செய்து ஆலயம் அமைப்பதற்கு உதவியாளர்களாக இருந்தார்கள். இவ்வாறு அருட்தந்தை சூசைநாதன் அடிகள் அவர்களால் 20 x 20 அளவு கொண்ட கிடுகினால் மேயப்பட்ட கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வந்தன. தொடர்ந்து 1965ல் அருட்தந்தை பொன்னையா அடிகள் பணிகளைப் பொறுப்பேற்று திருப்பலிகளை ஒப்புக் கொடுத்து வந்தார். இவருடைய காலத்தில் ஆலயம் 40 x 20 அளவு கொண்ட கட்டிடமாக அமைக்கப்பட்டது. 1975ம் ஆண்டு அருட்தந்தை எட்மன் மைக்கல் அடிகள் பொறுப்பேற்று திருப்பலிகளை ஒப்புக் கொடுத்து வந்தார். திருமதி.தங்கம்மா என்பவரால் 1975ல் சகாய மாதா திருச் சொரூபம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இச் சொரூபம் தற்போதும் மக்களின் பாதுகாவலியாக காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறது.

மேற்படி 56-80 வரை பணியாற்றிய அருட்தந்தையர்கள் தொடர்பான கால வரையறைகள் பற்றி முழுமை யான தகவல்கள் பெற்றுக் கொள்ள முடியவில்லை. தொடர்ந்து கிளிநொச்சி பங்கில் இருந்து மிகவும் கஸ்ரமான சூழ்நிலைகளில் திருப்பலிகளை ஒப்புக் கொடுத்து வந்த அருட் தந்தையர்கள் மாற்றம் பெற்றுச் செல்ல 1980-1982 வரையான காலப்பகுதியில் அருட்தந்தை பிலேந்திரன் அடிகள் பணிகளைப் பொறுப்பேற்று நிறைவேற்றினார். தொடர்ந்து 1982-1984 வரை அருட் தந்தை ஜெராட் அடிகளும், 1984-1990 வரை ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த அருட் தந்தை ஒம்ளோ (Omlo) அடிகள் எனப்பட்ட வெள்ளை இனத்தவர். இவர் தமிழில் திருப்பலி ஒப்புக் கொடுப்பார். இவரது காலத்தில் பரந்தன் பங்குத் திருச்சபை தனியாக இறைபணியை ஆரம்பித்தது. பின்னர் ய்ஷ ஒம்லோ அடிகள் தனது நாட்டிற்குச் சென்று 1990ல் மரணமடைந்தார். அதனைத் தொடர்ந்து 1990-1993 வரை அருட் தந்தை பெனாட் அடிகளும், 1994-1996 வரை அருட் தந்தை அன்ரனிபாலா அடிகளும், 1996-1997 வரை இடப்பெயர்வு காலம். தருமபுரம் பங்குடன் இணைந்து பணியாற்றிய அருட் தந்தை றெக்னோ அடிகள் 1997-2002 வரை அருட் தந்தை செபஸ்ரியான் அடிகள் பணியாற்றினார். 1996ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது சகாய மாதா திருச்சொரூபம், மணி என்பன பாதுகாப்பாக தருமபுரம் எடுத்துச்சென்று பாதுகாக்கப்பட்டது. பின்னர் 2000ஆம் ஆண்டு மீள்குடியேறிய போது ஆலயக் கூரை முற்றாக அகற்றப் பட்டிருந்ததுடன் ஆலய கட்டிடம் சேதமாக்கப் பட்டிருந்தது. இதன் காரணமாக திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கும் வகையில் 20 x 20 அடி கிடுகினால் கூரை போடப்பட்டு திருவிழா, திருப்பலிகள் நடைபெற்று வந்தன. இக்காலப்பகுதி யில் தருமபுரம் பங்குடன் இணைந்தே

2008ம் ஆண்டு வரை செயற்பட்டு வந்தது.

**புனித சதா சகாய அன்னையின் புதிய ஆரம்பம்**

2002ம் ஆண்டு அருட் தந்தை யூட் நிக்சன் அடிகள் பொறுப்பேற்றுக் கொண்ட பின் 2004ம் ஆண்டு ஆயர் மேதகு.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் நிதியுதவியுடனும் பங்கு மக்களின் அன்பளிப்புடனும் 2005ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இருந்தும் 70 வீதமான வேலைகளே முடிவடைந்திருந்தது. அதனைத் தொடர்ந்து காலத்திற்கு காலம் கிறிஸ்தவ, இந்து மக்களின் நிதி உதவியுடன் வேலைகள் நடைபெற்று வந்தது. தொடர்ந்து 2005ம் ஆண்டு அருட்தந்தை ரவிராஜ் அவர்கள் பணியாற்றி வந்ததுடன் 2008ஆம் ஆண்டு இடப்பெயர்வுடன் மாற்றம் பெற்று சென்றார்.

**சகாய அன்னையின் புதுப்பொலிவு**

2010ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்ற மக்கள் மீள்குடியேறிய போது பரந்தன் பங்குப் பணிமனையில் இருந்து அருட்தந்தை எட்வின் நாதன் அடிகள் செயற்பட்டு வந்தார். அருட் தந்தையின் முயற்சியினால் பருத்தித்துறைப் பங்கு மக்களின் நிதி உதவியுடன் மீண்டும் சேதமாக்கப்பட்டிருந்த ஆலய கூரை தகடுகள் (சீற்) திருத்தி அமைக்கப்பட்டது. தொடர்ந்து இதே ஆண்டின் இறுதிப் பகுதியில் அருட் தந்தை சி.செபஸ்ரியன் அடிகள் பரந்தன் பங்கைப் பொறுப்பேற்று பணியாற்றி வருவதுடன் புனித சதாசகாய அன்னை ஆலய திருத்த வேலைகள் 70 வீதமாக இருந்து தற்போது பங்கு மக்களின் உதவியுடன் 90 வீதமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இருந்த போதும் அரச நிதி உதவிகள் எவையும் கிடைக்கப் பெறாமல் கிறிஸ்தவ இந்து மக்களின் நிதி உதவியுடனே திருத்தம் செய்யப்பட்டு வருவதும் மேலும் 10 வீதமான பணிகள் முடிவுறுத்தப்பட வேண்டியுள்ளது. இவை அனைத்தும் புனித சதா சகாய அன்னையின் ஆசியினால் நடைபெறும். இதற்கான மக்களின் வாழ்வாதர நிலைமைகளை அன்னை ஆசிர்வதித்து வழி நடத்துவாராக.

நன்றி

# 'இந்த நிலை மாற்ற உழைத்திடுவோம் எல்லோரும்'

**கி.கமலாதேவி (பொருளாளர்)**
**மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**கண்டாவளை.**

**கா**லை விடியலில் கையில் பத்திரிகை எடுத்தால்
பாதிப்பக்கத்தில் பாலியல் வன்கொடுமையும் பலாத்கார கொலைகளும்
பத்திரிகை செய்தியாய் நீண்டு கிடக்கின்றன.
பார்ப்பவர் மனங்கள் எல்லாம் பேதலித்து போகின்றன.
ஏன் இந்த நிலமை எங்களது மக்களுக்கு?
வாழும் வகை கூறி வையத்துள் வாழ்ந்தவர் நாம்.
இன்று வாழ்வெட்டும் வழிப்பறியும் யாழ் மக்களின்
கலாசாரமாய் மாறியது ஏன்?
உலகமே இன்று எம்மை ஆச்சரியத்தோடு பார்க்கின்றது.
முத்தமிழின் வித்தகர்கள் வாழ்ந்த மண்ணில் நித்தமும்
இக் கொடுமை நடக்கின்றது.
ஏன் இந்த நிலமை எம் மக்களுக்கு?
மாடி வீடு கட்டி மகிழ்வுடன் வாழ்ந்த நாங்கள்!
கூடிக்குலாவி கோயில் குளமென
கூட்டம் கூட்டமாய் வாழ்ந்த நாங்கள்!
வீதி விபத்துக்களால் வீணாகச்சாவதேன்?
வேதனை தரும் இந்த நிலை மாறுவது எப்போது?
இந்தக்கொடுமையெல்லாம் எப்படி நடக்குது என்று
எவரேனும் சிந்திப்பார் எங்களுக்குள் யாருமுண்டோ?
சத்தியமாய் சொல்லுகின்றேன் எம்மவரே சிந்தியுங்கள்
இப்போது நானும் சிந்திக்க தொடங்கி விட்டேன்.
வெளிநாட்டு பயணத்தினால் வீட்டுக்கொரு மோட்டார் சைக்கிள்
வீதி அனுமதியின்றி வேகமாய் ஓடுவதில் விபத்துக்கள் நடக்கின்றது.
தென்னகத்து சினிமாவின் திகிலூட்டும் காட்சிகளால்
தொடர்ந்து எம்மண்ணில் பேரவலம் நடக்கிறது.
இந்த நிலை மாற உழைத்திடுவோம் நாமெல்லாம் உண்மையில்
நாம் எல்லாம் உயர்வான தமிழரெல்லோ?

# குழந்தை வளர்ப்பும் பெற்றோரும்

தே.ஸ்ரீபன்ரஞ்சித்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், கண்டாவளை.

குழந்தைகள் பூப்போன்றவர்கள். அவர்கள் புத்தம் புதிதாய் மலர்ந்தவர்கள். நாளைய உலகை மாற்றும் வல்லமை கொண்டவர்கள். எமது சமுதாயத்தின் எதிர்காலச் சிற்பிகள். அவர்களை நல் வழிப்படுத்த வேண்டியவர்களே பெற்றோர். தமது பிள்ளைகளுக்கு வேண்டிய சகல தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கே உரித்தானது. நன்மை தீமைகளை புரிந்துணரத்தெரியாத பிஞ்சு உள்ளம் கொண்ட தம் குழந்தைகளை சரியான வழியில்இட்டுச்செல்லவேண்டியபாரிய பொறுப்பு பெற்றோருக்கு உரித்தானது. குடும்பம் என்பது பல்வேறுபட்ட திறன்களையும் பிள்ளைகள் மத்தி யில் விருத்தி செய்யக்கூடிய களமாக அமைதல் வேண்டும்.

கல்வி என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமை யாத ஒன்றாகும். ''இளமையில் கல்வி சிலையில் எழுத்து'' என்பது முதுமொழி. சிறு வயதில் கற்றுக்கொள்கின்ற விடயங்கள் யாவும் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து விடுகின்றன. எனவே குழந்தைகளை கல்வியறிவுள்ள புத்தி ஜீவிகளாக வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பை நிறைவேற்ற வேண்டியவர்கள் பெற்றோரே. கல்வி என்பது ஓர் அனுபவம் எனவே அனுபவக்கற்றலை பெற்றுக்கொள்ளும் குழந்தை எதிர்காலத்தில் சிறந்த பிரஜையாகத் தோற்றம் பெறும் என்பதில் ஐயமில்லை. பாடசாலைக் கல்வியுடன் அனுபவம் சார் விடயங்களைப் பெற்றோரே குழந்தைகளுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

குழந்தையானது தன் வாழ்வின் பெரும் பகுதியை வீட்டிலேயே கழிக்கின்றது. வீட்டிலிருப்போருக்கான நெருக்கமான உறவுகளால், குழந்தையின் அனுபவங்கள் உணர்ச்சி சாந்தவையாக அமைகின்றன. உணர்ச்சி வழி உண்டாக்கிக் கொண்ட அனுபவக்கல்வி ஆனது வீட்டிலேயே அவர்களுக்கு கிடைக்கின்றது. பெற்றோரின் பொருளாதாரச் சூழல்கள், திறமைகள், மனப்போக்குகள், குடும்ப உறுப்பினர்களிடையேயுள்ள உறவுகள் என்பன குழந்தையின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பெற்றோர் குழந்தைகளின் விருப்பத்திற்கு ஏற்பவும், தமது பொருளாதார வசதிக்கேற்பவும் புத்தகங்கள், விளையாட்டுப்பொருட்கள், வண்ணப் படங்கள் என்பவற்றைப் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுப்பதன் மூலம் அவர்கள் அவற்றை தமக்குரிய இடத்தில் பாதுகாப்பாக வைத்து விளையாடவும், வேலை செய்யவும்

பழகுவர். இசையுடன் கூடிய பாடல்களை குழந்தைகள் செவிமடுப்பதற்குரிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். குழந்தைகளை நகர்ப்புறம், கிராமப்புறம், கடற்கரை பிரதேசம் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். இதன் மூலம் குழந்தைகளின் அனுபவமும் அறிவும் விரிவடையும்.

தங்கள் குழந்தைகளுக்கு ஒழுங்கான வாழ்க்கை முறை, பாதுகாப்பு ஆகியவற்றை உருவாக்குவதற்காக பெற்றோர் தமது சொந்த விருப்பு, வெறுப்புகளை விட்டுக்கொடுக்க வேண்டும். குழந்தைகளின் நலனுக்காக எதையும் தியாகம் செய்யக் கூடிய பெற்றோரின் பிள்ளைகள் வாழ்க்கையில் முன்னேற்றமடையும் வாய்ப்புகள் அதிகமாகும். சுதந்திரமாகவும் குடும்ப உறுப்பினர்களில் ஒருவன் என்ற பொறுப்புணர்வுடனும் வளரும் குழந்தைகள் வெகு வேகமாக முழுமையான மனப்பக்குவம் பெற்றுவிடுகின்றனர்.

தாம் விரும்பிய படி தடையின்றி வளர ஊக்கம் கொடுக்கும் பெற்றோரின் பிள்ளைகள் அதிக மகிழ்ச்சியான வாழ்க்கையை பெறுகின்றனர். குழந்தைகளின் தேவையை பெற்றோர் நிறைவேற்றும்போது, குழந்தைகள் பெற்றோர் மீது பலமான நம்பிக்கை கொள்கின்றனர். பெற்றோரைப் போல தாமும் பல்வேறு செயல்களிலும் ஈடுபடுகின்றனர். விருந்தினரை வரவேற்று உபசரித்தல், பெரியவர்களுடன் உரையாடுதல், வீட்டை அலங்கரித்தல், பாடல்களை இசைத்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், இறை வணக்கத்தில் ஈடுபடுதல், தமக்குரிய ஆடைகளை தெரிவு செய்தல், பொருட்களை கண்டறிதல், அவற்றைப்பயன்படுத்துதல் போன்ற பல்வேறு நுட்பமான செயற்பாடுகளிலும் ஈடுபடுவர். இவற்றின் மூலம் அவர்களது பல்வேறு திறமைகளும் வளர்ச்சியடைகின்றன.

பெற்றோர் ஒருவரையொருவர் நேசித்து, மதித்து வாழ்ந்து குழந்தைகளை வளர்ப்பதில் ஒருமித்த மனதுடன் ஒரு பொதுவான கொள்கையுடன் செயற்படுவதன் மூலம் வீட்டினுள், குழந்தையின் மனதினுள் பாதுகாப்பையும் மனநிறைவையும் ஏற்படுத்த முடியும். குழந்தைகளிடம் அன்போடும் கருணையோடும் உறவாடும்போது அவர்கள் பெற்றோரின் சொற்களையும், கட்டளைகளையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வர்.

குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் போசாக்குள்ள உணவுகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு பெற்றோர் வழங்க வேண்டும். இனிப்பு பண்டங்களை குறைத்து சத்துள்ள ஆகாரங்களை வழங்குவதன் மூலம் குழந்தைகளை ஆரோக்கியமுள்ளவர்களாக வளர்க்க முடியும். அத்தோடு நல்ல பழக்க வழக்கங்களையும் அவர்களுக்கு சொல்லிக் கொடுத்தல் வேண்டும். அப்பழக்க வழக்கங்களை பெற்றோரும் கடைப்பிடிக்க வேண்டும்.

குழந்தைகளின் உறுதியான எதிர் கால வாழ்க்கைக்கான அடித்தளம் பெற்றோர்களாலேயே இடப்படுகின்றது. முக்கியமாக

குழந்தைகளின் வளர்ச்சியில் தாய்க்குப் பெரும் பொறுப்புள்ளது. ஓர் குழந்தை நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னையின் வளர்ப்பிலேயே தங்கியுள்ளதெனக் கூறப்படுகின்றது.

இன்றைய கால கட்டத்தை எடுத்து நோக்கின், பொருளாதார பிரச்சினைகளுக்காக தாய், தந்தை இருவருமே தொழிலுக்குச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் பெற்றோர் தம் குழந்தைகளை கவனிப்பதில் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு உட்படுகின்றனர். இதனால் பிள்ளைகளின் எதிர்காலம் சிதைவடைந்து விடும். எனவே பெற்றோர் தொழிலுக்கும் குழந்தை வளர்ப்புக்குமிடையே சமநிலையைப் பேண வேண்டும். பிள்ளை வளர்ப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகவும், நாகரிக மோகம் காரணம் ஆகவும் பிள்ளைகள் தம் சகபாடிகள் போல தாமும் வாழ எண்ணுவர். ஆனால் பெற்றோரே அவற்றின் விளைவுகளை பிள்ளைகளுக்கு எடுத்துக்கூறி அவர்களை கலாசார சீரழிவிற்கு உட்படாமல் பாதுகாக்க வேண்டும். நவீன சாதனங்களின் மூலம் கிடைக்கும் நன்மைகளையே அவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். அதே வேளை தீய விடயங்களால் ஏற்படும் விளைவுகளையும் விளங்கப்படுத்த வேண்டும். அன்னத்தைப்போன்று தீயனவற்றை விடுத்து நல்லனவற்றை எடுத்துக்கொள்ள பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டும்.

ஒரு கட்டடத்திற்கு அதன் அத்திவாரமே மிகப்பிரதானம். அது பலமாக இருந்தால் தான் கட்டடத்தினை நாம் விரும்பிய வடிவில் பிரமாண்டமாக எழுப்ப முடியும். அதுபோல பிள்ளை வளர்ப்பிலும் குழந்தைப்பருவம் மிகவும் முக்கியமானதாகும். குழந்தைப் பருவத்தில் ஊட்டப்படும் உயர்ந்த இலட்சியக் கனவுகளே அவர்களை எதிர்காலத்தில் உயர்ந்த நிலைக்கு இட்டுச்செல்கிறது. எனவே அவர்களின் ஆழ் மனதில் உயர்ந்த சிந்தனையோட்டங்களை ஊற்றெடுக்கப் பண்ண வேண்டும். இதன் மூலம் பிள்ளைகள் தமது எதிர்கால இலட்சியப் பாதையில் நடைபோட ஆரம்பிப்பர்.

குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுவதோடு, அவர்களை நல் வழிப்படுத்த வேண்டும். குழந்தைகளின் உடல் உள வளர்ச்சியில் குடும்பத்தினரின் பங்கு அளப்பெரியதாகும். பிள்ளைகளை சிறுவயதிலேயே நல் வழிப்படுத்த வேண்டும். குடும்பம் என்னும் சிறிய சமுதாயத்தில் தானும் ஓர் உறுப்பினர் என்ற தனக்குரிய சரியான இடத்தை ஏற்றுக்கொள்ள குழந்தைக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் பாடசாலை, நகரம், நாடு, உலகம் ஆகிய பெரிய சமுதாயங்களிலும் அக்குழந்தை பொறுப்பான உறுப்பினராக ஆவதில் பிரச்சினை ஏதும் தோன்றாது.

கல்வியின் தொடக்கமே வீட்டின் புனிதத்தில் தான் அமைந்துள்ளது. ஏனெனில் மனிதனின் திறமைகள் மேம்படுத்துவதற்கு இணக்கமான சூழ்நிலையையும் வழியையும் வீட்டில் தான் இயற்கை ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

## வெளிக்கள உத்தியோகத்தர்கள்



**இருப்பவர்கள் :** திருமதி வ.சுரேக்கா (N.C.P.A), திரு.கு.சிவலிங்கம் (A.O), திரு.சி.குகதாசன் (Accountant), திரு.த.முகுந்தன் (D.S)
(இடமிருந்து வலம்) திரு.பூ.ராஜ்வினோத் (A.D.P), திரு.சு.ஜெயானந்தராசா (S.S.O), திரு.பொ.சந்திரநாதன் (H.O), திருமதி வி.சுரேஸ் (P.O).

**நிற்பவர்கள்** : திருமதி.ஆ.விஜோஸ்வரி (C.R.P.A), செல்வி ந.கவிதா (W.D.O), செல்வி.ஞா.வதனரூபி (E.R.P.A),திருமதி ரா.யூட் ஜெயசீலி (D.O),
(1ஆம் வரிசை) திருமதி சோ.சுகந்தினி (D.O), திருமதி அ.பவதாரணி (C.O), செல்வி.ஐ.கஜநிதி (F.I), செல்வி.து.டார்சிகா (C.O),
திருமதி ஞா.றொசாயினி (D.O). செல்வி.த.பிறின்சிகா (D.O), செல்வி.சி.நிலாஜினி (D.O), திருமதி சி.வித்தியா (E.C.D.O),
திருமதி வி.புஸ்பரதி (Councellor).

**நிற்பவர்கள்** : திரு.வே.சிவநேசன் (S.O), திரு.த.அமலதாஸ் (C.O), திரு.சி.சிவராஜ் (D.O), திரு.சி.சுதர்சன் (D.O), திரு.சி.செல்வரூபன் (D.O),
(2ஆம் வரிசை) திரு.ம.வசந்தன்(D.O).

**சமூகமளிக்காதவர்கள்** : திரு.ப.சுரேந்திரன் (D.O). திரு.சி.பத்மசிறி (R.D.O). திரு.வை.மாதவன் (S.O), திரு.செ.விமலகாந்தன் (C.O),
திரு.சி.பிரபாகரன் (S.D.O). செல்வி.அ.ரஜிதா (D.O).

## திட்டமிடல்கிளை உத்தியோகத்தர்கள்



**இருப்பவர்கள் :** திரு.ந.சிவநாதன் (D.O), திரு.கு.சிவலிங்கம் (A.O), திரு.சி.குகதாசன் (Accontant). திரு.த.முகுந்தன் (D.S),
(இடமிருந்து வலம்) திரு.பூ.ராஜ்வினோத் (A.D.P), திரு.ஆ.ஆனந்தரூபன் (Chief.M.A), திரு.தி.பிரபாகரன் (D.O), திரு.தே.ஸ்ரீபன் ரஞ்சித் (D.O).

**நிற்பவர்கள்** : திருமதி.ஆ.அனுராதா (D.O), செல்வி.வி.சுரேதினி (D.O), செல்வி.சி.புஸ்பவதனா (D.O), திருமதி.செ.சிந்துஜா (D.O)
(1ஆம் வரிசை) திருமதி.சு.நிதர்சினி (M.A), செல்வி.கி.லட்சுமிகுமாரி (D.O), செல்வி.வி.சுதர்சினி (D.O).செல்வி.இ.துவாரகா (M.A), திருமதி.த.ஜீவிதா (D.O),
திருமதி.ச.லோகபிரியா (D.O), செல்வி.மு.பவித்திரா (D.O), திருமதி.க.சுவர்ணலதா (D.O), திருமதி.லோ.நாகநந்தினி (D.O),

**நிற்பவர்கள்** : திரு.இ.கௌதமன் (D.O), திரு.அ.மதன் (T.A), திரு.ந.சிவகுமார் (D.O), திரு.வீ.பிரதீபன் (D.O).
(2ஆம் வரிசை) திரு.வி.கஜதாஸ்(D.O).திரு.சி.பிரதீபன் (D.O).

# "அவலமே பெண்களின் வாழ்வா?"

நா.ஹேமமாலினி,

தையல் ஆசிரியர், தருமபுரம் கிழக்கு.

2009 இல் ஏற்பட்ட போரின்போது இளம் வயதிலேயே கணவரை இழந்தும், பிரிந்தும் பெரும்பாதிப்புக்குள்ளானோர் வன்னி மண்ணின் பெண்களாவர். நாம் வாழும் வாழ்வில் ''அர்த்தம்'' இருக்க வேண்டும் என்று உறுதியோடு வாழ்ந்து வரும் பெண்கள் ஒருபுறம். ''கண்டதும் காதல் கொண்டதே கோலம்'' என்று வாழும் பெண்கள் மறுபுறம். இவ்வாறான நிலையில் எமது சமுதாயம் மிகவும் சீரழிவுக்குள்ளாகப்பட்டு வருகின்றமை அனைவரும் அறிந்ததே.

இளம் வயதிலேயே கணவரை இழந்து தனது ஆசைகள், கனவுகள், உணர்வுகள் என அனைத்தையும் மூட்டைகட்டி வாழும் பெண்கள் சிலர். பதிவிற்கு ஒருத்தியும் ஆசைக்கு இன்னொருத்தியும் என சூறையாட நினைக்கும் ஆடவர்களின் ''கண்ணே மணியே, செல்லமே, தங்கமே'' எனும் ஆசை வார்த்தைகளில் தங்களை அழித்து வருபவர்கள் இன்னும் பலர்.

ஓர் விதவைப்பெண் ஓர்தடவைக்கு இரு தடவை ஓர் ஆடவனோடு கதைத்து விட்டால் அவள் மீது சமூகம் பார்க்கும் பார்வை உன்னிப்பானது. மிகவும் வேதனைக்குரியது. இதனையே கணவனோடு சேர்ந்து வாழும் பெண் தவறிழைத்தால் அது ''இலை மறை காயாகிறது''.

பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த பெண் உத்தியோகம் செய்பவவராக இருக்கலாம் அல்லது கூலி வேலை செய்பவராகவும் இருக்கலாம் அவள் தனது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து, பிள்ளைகளின் தேவைகளையும் நிறைவு செய்து, அனைவரும் போல் நாமும் வாழ வேண்டும் என்றால்...... சமுதாயம், ''என்ன நாளாந்தம் வேலைக்கு போற? எங்களுக்கே பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை ஆம்பிளையும் இல்லாமல் இவர்களால் எப்படி?''... என கேள்வி பலவாறு பல கோணங்களில் பல அர்த்தங்களில் எழுகிறது.

ஆனால் அன்றாடம் வேலை போவதே இல்லை. வார்த்தைகளில் மட்டுமே. இந்த வீட்டில் என்ன நடக்கிறது எங்கு போகிறார்கள்? யார் யாரெல்லாம் வருகிறார்கள்? என்று அவதானித்து விட்டு கடைத்தெருக்களிலும், சந்திகளிலும் கூட்டமாக சேர்ந்து மிகைப்படுத்தி கதைத்து பொழுதை போக்குவதே இவர்களின் வேலை. இப்படியானவர்கள் வீட்டில் எவ்வாறு பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியும்.

நாலு பெண்கள் ஒன்று சேர்ந்தால் ஊர்க்கதை என்பார்கள். இப்போது அது மாறி விட்டது. நாலு ஆண்கள் சேர்ந்து விட்டால் அந்த இடம்.......?

குறிப்பாக பெண்கள் குழந்தைப் பருவத்தில் இருந்து தந்தை, சகோதரன், கணவன் என்று ஆண் துணைகளோடே வாழ்ந்து வருகின்றனர். அவர்களிலேயே தங்கியுமுள்ளனர். இப்பெண்கள் இளம் வயதில் கணவரை இழந்தோ, பிரிந்தோ வாழவேண்டியதாக ஏற்படின் அவளது நிலை? அவள் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகின்றாள். இந் நிலையில் குடும்பத்தின் பெரும் பொறுப்பை தான் சுமக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறாள். அவளால் எப்படி முடியும்?

இவ்வாறான நிலையில் இருக்கும் பெண தனது பிள்ளைகளை வளர்க்க வேண்டும் நாம் வாழ வேண்டும் என்று நினைப்பவளை சமுதாயம் ஈவிரக்கமற்று பார்க்கிறது. இப் பெண்ணின் நிலை கண்டு கருணை உள்ளத்தோடு உதவி செய்ய முன்வரும் பெண்ணின் உறவு ஆண்களாக இருக்கட்டும் அல்லது அயல் ஆண்களாக இருக்கட்டும் வயதில் மூத்தவராக இருப்பினும் சரி இளையோராக இருப்பினும் சரி சமுதாயம் பார்க்கும் கோணம் மிகவும் கொடூரமானது.

இவ்வாறு ஆண்களின் துணைகளோடு வாழ்ந்து வந்த இளம் பெண்களில் உத்தியோகம், சுயதொழில் இல்லாத மடமைப்பெண் எவ்வாறு தனது பெரும் பொறுப்பை சுமப்பாள்? முழுமையாக ஆண்களிலேயே தங்கியிருந்த இவளால் என்ன செய்ய முடியும்? எங்கு என்ன குடுக்கினம், எனக்கும் எதாவது தரமாட்டினமா? என்று கொடுக்கும் இடங்களில் எல்லாம் வேண்டி தமது காலத்தை ஓட்டுபவர்களாகவே இவ்வாறான பெண்கள் இருக்கின்றனர்.

இப்படியான ஓர் மடமைப் பெண்ணிற்கு குறிப்பிட்ட ஓர் இடத்தில் ஒரு தொகைப்பணம் கொடுப்பதாக செய்தி எட்டியது. அவளிற்கோ அளவிலா மகிழ்ச்சி. தனது நான்கு பிள்ளைகளிற்கும் வயிறார உணவும், உடைகளும் வாங்கி விடலாம் என்று மனதில் ஆசைகளோடு அந்த இடத்திற்கு ஓடிச் சென்றாள். அங்கு வெளியில் இருந்தவர் உள்ளே இருந்த அதிகாரியிடம் அனுப்பினார். அவள் சென்று அவரிடம் தனது குடும்ப கஸ்ரங்கள் அனைத்தையும் மனம் நொந்து மிகக் கவலையோடு கூறினாள். பெரியவர் அவளைப்பார்த்து வயதில் சிறியவளாகவும், அழகாகவும் இருக்கின்றாய். நாலு பிள்ளைகள் இருப்பதாகவும் கூறுகின்றாய் உன்னை பார்க்க எனக்கு மிகவும் வேதனையாக இருக்கின்றது. இவ்வளவு நாளும் எங்கை பிள்ளை போனனீ? இந்த திட்டம் முடிந்து விட்டது. நான் என்ன செய்வது என்று கூறினார். சரி! எதுக்கும் வாற கிழமை வா! என்று ஒரு நாளை குறிப்பிட்டு தனது விடுதியில் வந்து சந்தி பிள்ள. நான் ஒழுங்கு செய்துதாரன். என்று இழுத்தார் பெரியவர். அவளும் நம்பிக்கையோடு அங்கிருந்து சென்றாள்.

அடுத்த வாரம் அப்பெண் பெரியவரை சந்திக்க விடுதிக்கு சென்றாள். பெரியவரும் அவள் வரவை எதிர்பார்த்தவராக வா பிள்ள! வா! எனக்கு ஒரே உன்ர நினைவுதான். என்று மிக

அருமையாக அழைத்தார். அவளும் பெரியவரை பார்த்து புன்னகைத்தாள்.

பெரியவர் வளைந்தார். நெளிந்தார். ஒழுங்கு செய்திட்டன் விரைவில் தருவன். என்று கூறி நீ எனக்கு என்ன பிள்ளை தருவாய்? என்றுமுத்தார். அந்த மடப்பெண்ணிற்கு புரியவில்லை. உங்களிற்கு தர என்னிடம் என்னையா இருக்கிறது? என்றாள். ''என்ன பிள்ளை! இப்படி சொல்லுகிறாய். நீ நினைத்தால் என்னை கொஞ்ச நேரம் சந்தோசப்படுத்தலாம் தானே'' என்றார். ஏழைப்பெண் தனது பிள்ளைகளின் பசிப்பட்டினியைப் பார்ப்பாளா? தனது கற்பை பார்ப்பாளா?

இவ்வாறு உயர் அதிகாரி முதல் சாதாரண ஆண்கள் வரை பலாத்காரத்திற்கும் வல்லுறவிற்கும் உற்படுத்தி பல கோணங்களில் பெண்கள் சூறையாடப்பட்டு சமூகம் சீரழிந்து போவது யாவரும் அறிந்ததே.

இள வயதிலேயே வாழ்க்கை துணைகளை இழந்ததனால் பல பெண்கள் கவலை, ஏக்கம், விரக்தி, பயம், அதிகளவான கோபம் என உளரீதியாக பெருமளவு பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர். இதனை சாதகமாக பயன்படுத்தி ஆசை வார்த்தைகளினாலும் போலிப் பேச்சுகளினாலும் ஏமாற்றி அவர்களின் எதிர்காலத்தை சீரழித்து முகவரி அற்ற குழந்தைகளிற்கு தாயாக்கி வருகின்றனர்கபடத்தனமான ஆடவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் மனரீதியாக பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர் பெரும்பாலான பெண்கள்.

சமூகத்தில் காணப்படும் குறைந்த மதிப்பினாலும், அடக்கு முறைகளாலும், உரிமை மறுப்புக்களாலும் இழைக்கப்படும் பாலியல் துன்பங்களாலும் பெண்கள் உடல், உளரீதியில் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். இதற்கெல்லாம் பரிகாரமாக ஆணாதிக்கம் முற்றிலும் மாறி பெண்ணின் கற்பு புனிதமாக பேணப்பட்டு ஆணின் துணையின்றி பெண்ணால் தலை நிமிர்ந்து வாழ முடியும். என்று சமூகத்தில் மாற்றம் ஏற்பட ஒவ்வொரு தனிமனிதனாலும் ஒத்தாசை வழங்கப்பட வேண்டும்.

# முரசுமோட்டை சேற்றுக்கண்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோயில் - ஒரு வரலாற்று நோக்கு

திரு.த.பார்த்தீபன்,
ஆலய பரிபாலன சபை உறுப்பினர்.

இலங்கைத் திருநாட்டின் வடபால் நீர் வளமும், நிலவளமும் சூழ்ந்த கிளிநொச்சி மாநகரின் கண்டாவளைப்பிரதேச செயலக பிரிவில் தொன்மை வாய்ந்த முரசுமோட்டை கிராமத்தில் சேற்றுக்கண்டி பகுதியில் வரலாற்று சிறப்பு மிக்க திருத்தலமான ஸ்ரீ முத்துமாரியம்பாள் திருக்கோயில் அமைவு பெற்றுள்ளது.

இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் முரசுமோட்டை சேற்றுக்கண்டி பிரதேசம் காடடர்ந்த பிரதேசமாக இருந்த காலத்தில் அங்கிருந்த பழங்குடி மக்கள் விவசாயத்தையும் மந்தை மேய்த்தலையும் தமது பிரதான ஜீவனோபாய தொழிலாக கொண்டிருந்தனர். இம் மக்கள் ஒரு முறை சேற்றுக்கண்டி காட்டுப்பகுதியில் மந்தைகளை தேடிவந்த போது வில்வ மரங்களினால் சூழப்பெற்ற வேப்ப மரம் ஒன்றின் கீழ் மந்தைகள் கூட்டமாக நிற்பதைக்கண்டு அவற்றை தம்முடன் அழைத்து செல்ல எத்தனித்த வேளை அவ்விடத்தில் மூதாட்டி ஒருவர் தோன்றி ''இவை எங்களுடைய மந்தைகள் நீங்கள் எங்கு கொண்டு செல்கின்றீர்கள்'' என வினாவி விட்டு வேம்புடன் மறைந்தார். இதனை அறிந்த முரசுமோட்டை பழையகம பழங்குடி மக்கள்அவ் வேப்பமரத்தினைசூழவுள்ள பிரதேசத்தினைதூய்மைப்படுத்தி அவ் வேம்பினை வழிபட்டு வந்தார்கள். பழையகம மக்களால் வரணியில் இருந்து மாட்டு வண்டில்களில் பண்டங்கள் கொண்டுவரப்பட்டு வேம்பின் அடியில் ஆனி மாத திங்கட் கிழமை ''வேள்வி பொங்கல்'' என்பன நடத்தப்பட்டு வந்தன.

சிறிது காலத்தின் பின் இவ் வேம்பின் அடியில் கொட்டில் கோயில்கள் அமைக்கப்பட்டு முத்துமாரியம்பாள், வீரபத்திரர் போன்ற தெய்வங்கள் வைத்து வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. பூஜை, வழிபாடுகளை சங்கரர், பெரியதம்பி, கணபதிப்பிள்ளை, பொன்னையா முதலான பல பூசகர்கள் நடத்தி வந்தனர்.

1954ம் ஆண்டு முரசுமோட்டை குடியேற்றத்திட்டம் அமைக்கப்பட்ட காலத்தில் இவ் ஆலயத்தை சூழ 300 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. இக் குடியேற்றத் திட்டத்தின் மையமாக இவ்வாலயம் அமைந்துள்ளது. 1957ம் ஆண்டு வரை வரணியில் இருந்தே 'பண்டங்கள்' எடுத்து வரப்பட்டு வேள்விப் பொங்கல்கள் நடத்தப்பட்டன. கொட்டில் கோயில் காலத்திலேயே

திருவெம்பாவை, நவராத்திரி, வெள்ளிக்கிழமை பூஜைகள், சித்திரை பௌர்ணமி போன்ற விசேட பூஜைகள் பொங்கல் என்பனவும், நடைபெற்று வந்தன.

1969ஆம் ஆண்டில் சிறிய ஆலயம் அமைக்கப்பட்டு கும்பாவிஷேகம் நடைபெற்றது. இதன் பின்னர் பிராமணர்களால் நித்திய பூஜை இவ்வாலயத்தில் நடைபெற்றன. முரசுமோட்டையினைச் சேர்ந்த படிகலிங்க சிவாச்சாரியார் பூஜை வழிபாடுகளை நிகழ்த்தி வந்தார். 1980ஆம் ஆண்டு இவ்வாலயத்தின் இன்றைய முகாமையாளரான கா.நித்தியானந்தனின் கனவில் அம்பாள் தோன்றி ''எனக்கு எல்லாம் வேண்டும். நீ ஏன் இருக்கின்றாய்?'' என கேட்ட சம்பவத்தைத் தொடர்ந்து ஊர்மக்களை ஒன்று திரட்டி பொதுக்கூட்டம் நடத்தப்பட்டு ஆலய நிர்வாகசபைத் தலைவராக பொ.கணபதிப்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார். அவரின் சேவையினைத் தொடர்ந்து சி.சிவராசா அவர்கள் நிர்வாக சபை தலைவராக தெரிவுசெய்தது முதல் இன்று வரை சலிக்காமல் அம்பாளுக்கு அவர் அரும் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

1981ஆம் ஆண்டு ஊர்மக்களின் விருப்பப்படி ஆவணி மூலத்திற்கு அம்பாளின் மூலஸ்தானத்திற்கு அடிக்கல் நடப்பட்டது. விநாயகர், நாகதம்பிரான், சிவசுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் போன்ற பரிவாரத்தெய்வங்களும் வைக்கப்பட்டு மணி கோபுரமும் அமைக்கப்பட்டு 1983ஆம் ஆண்டு ஆனி உத்தர தினத்தில் துன்னாலை இராமச்சந்திர குருக்கள் அவர்களினால் மகா கும்பாவிஷேகம் நடைபெற்றது.

1980ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் மாசிமக பொங்கல் தினத்தை முன்னிட்டு அம்பாள் ஊர்வலமாக புறப்பட்டு இரணைமடு கனகாம்பிகை அம்பாளினைத் தரிசித்து இரணைமடு குளத்தில் நீரினை எடுத்து வந்து மாசி மக தினத்தன்று சண்டிகா கோமம், பொங்கல் விழாக்கள் நடைபெற்று வருகின்றமை சிறப்பம்சமாகும். 1984ஆம் ஆண்டு ஆனி உத்தரத்தை தீர்த்தமாக கொண்டு பத்து தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற்றது. இக்காலப்பகுதியில் கட்டுத்தேர் அமைக்கப்பட்டு தேர் உற்சவம் இடம் பெற்றது விசேட அம்சமாகும். 1985ஆம் ஆண்டில் இருந்து கொடியேற்றத்துடன் மகோற்சவ திருவிழாக்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் திருவாளர் ஆ.தாமோதரம்பிள்ளையால் ஊஞ்சல் பாடல் இயற்றப்பட்டு ஆடிப்பூர, மகோற்சவ காலங்களிலும், திருவெம்பாவை காலங்களிலும் அவ் ஊஞ்சல் பாடல் இசைக்கப்படுகின்றது.

1996ஆம் ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் காரணமாக இடப்பெயர்வு ஏற்பட்டபோது இவ்வாலயத்தின் எழுந்தருளி விக்கிரகங்கள் எடுத்துச்செல்லப்பட்டு உடையார்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்தில் பூஜைகள் வழிபாடுகள் நடைபெற்றன. 2002ஆம் ஆண்டு மீண்டும் முரசுமோட்டைக்கு கொண்டு வரப்பட்டு அம்பாள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 2005ஆம் ஆண்டு ஆனி உத்தர தினத்தன்று கும்பாவிஷேகம்


நடைபெற்றது. மீண்டும் 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வை தொடர்ந்து 2010ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் ஆனி உத்தரத்தில் 10 தினங்கள் பூஜை வழிபாடுகளும் அபிசேகங்களும் நடைபெற்றன. 2011ஆம் ஆண்டு முதல் மீண்டும் மகோற்சவம் விசேட பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

2012ஆம் ஆண்டு ஆனி உத்தர தினத்தன்று சிற்பத்தேருக்கு அச்சு வைக்கப்பட்டு ஆவணி மூலத்திற்கு தேர்க்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. 2014ம் ஆண்டு ஆனி மாதம் 30ம் திகதி சிற்பத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது கண்டாவளைப் பிரதேசத்தில் இது முதலாவது சிற்பத்தேர் என்ற பெருமையை இது பெறுகின்றது.


முரசுமோட்டை சேற்றுக்கண்டி ஸ்ரீ முத்துமாரியம்பாள் திருக்கோயில் ''செந்தாமரை புஷ்கரணி'' என்னும் தீர்த்தத்தையும் வேம்பினை தலவிருட்சமாக கொண்டு அமைவு பெற்று இன்று ஓர் திருத்தலமாக எழுந்து நிற்கின்றது. அம்பாளின் அருட்கடாற்சம் அனுதினமும் அனைவரும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்து வருவது கண்கூடு.

**"வளை ஓசை" நாதம் நான்கு மலர் சிறப்புற**

**இறை அருள் கிடைக்கட்டும் !**



"வளை ஓசை ஓங்கி ஒலிக்கட்டும்!"




**சகல விதமான**

**உள்நாட்டு,வெளிநாட்டு**

**உணவு வகைகளும்,**

**விருந்தினர் தங்குமிட**

**வசதிகளும்**

**வழங்கப்படுகின்றன.**

A9 வீதி, பரந்தன்.

வாழ்த்துவோர்:
உரிமையாளரும்
மற்றும் பணியாளர்களும்.

# மௌனிக்காத உண்மைகள்....

**வேல்நயன்,**
கலவெட்டித்திடல்,
புளியம்பொக்கணை.

இழப்புக்களை நினைத்து
இதயம் கனத்துப் போனால்
கண்ணீரும் கவலையும் - எம்மை
மண்ணோடு மண்ணாக்கி விடும் - மனிதா !
வீழ்வதும் எழுவதும்
வாழ்வில் சகஜமடா !
துன்பம் உன்னை முற்றுகையிட்டாலும்
தன் நம்பிக்கையைத் தளர விடாதே.
உண்மைக்கும் நீதிக்குமாய்
உன் உயிர் போனாலும் - மனிதா !
சத்தியத்தில் நின்று
சற்றேனும் விலகிவிடாதே!
இயற்கையின் உன்னத படைப்பில்
செயற்கையோடு சேர்ந்து போயினோம் - மனிதா!
மரணங்கள் சகஜம் -ஆனால்
மரணித்து விடக்கூடாது உணர்வுகள்.
மௌனமாய் உண்மைகள் உறங்க
மௌனித்துப் போனது மனிதங்கள்.
உண்மையாய் உழைத்துப்பார் - மனிதா !
உண்மையே உன்னை உயர்த்தும்.

# "பிஞ்சு மழலையினை அள்ளியணைத்து"

**செல்வி ச.ரங்கநாயகி,**

**இல:24, குமரபுரம்,**

**பரந்தன்.**

குழந்தைகள் தாயின் கருவில் இருக்கும் போதே கற்கிறன. ஒவ்வொருதாயும் தன் குழந்தையை கருவில் சுமக்கும் போது பல கற்பனைகள் செய்வாள். ஒரு வைத்தியனாக, பொறியியலாளனாக, நாட்டுக்கு நல்ல சேவை செய்யக்கூடிய மனிதனாக வளரவேண்டும் என்று நினைப்பாள். தாயானவள் தன் உள்ளத்தில் நல்ல சிந்தனைகளோடு அறிவுதரக்கூடிய நூல்களை வாசிக்கவேண்டும். சங்கீத ரசனையுடனும் மகிழ்ச்சியாகவும் இருத்தல் வேண்டும். அத்தோடு ஆரோக்கியமான குழுந்தை ஒன்றை பெற்றெடுப்பதற்கு போசாக்கான உணவுகளை உட்கொள்ளவேண்டும். தனிநபர் சுகதாரம் பேணுதல் அவசியம். மருத்துவ உதவிகளைப் பெற்று தகுந்த சிகிச்சையை பெறவேண்டும்.

சிலர் கர்ப்பம் தரித்த காலத்தில் யாருக்கும் தெரியப்படுத்துவதில்லை. ''வேண்டாப்பிள்ளையாகக்'' கருதி எவ்வித கவனிப்பும் செய்வதில்லை. தாய் சேய் நிலையம் செல்ல மாட்டார்கள், போசாக்கான உணவு உட்கொள்ள மாட்டார்கள். இதனால் ஆரோக்கியமற்ற வளர்ச்சி குன்றிய பிள்ளைகளை பெற்றெடுக்கின்றார்கள். அப்படிப்பட்ட பிள்ளைகள் சமுதாயத்தில் வளர்ந்துவரும் போது ஆரோக்கியம், சுறுசுறுப்பு, முன்வரும் தன்மை, சிந்தனைத்திறன் அற்றவர்களாக காணப்படுவார்கள். ஆகவே தாயானவள் தன் கருவில் சுமக்கும் குழந்தையை சரியாக பராமரித்தால்தான் அவளுக்கு பிறக்கும் குழந்தையும் ஆரோக்கியமாக வளரும்.

குழந்தை பிறந்ததும் குழந்தைக்குரிய நோய்த்தடுப்பு ஊசிகள், சரியான பராமரிப்பு பாதுகாப்பு என்பன முக்கியம். குழந்தை படிப்படியான வளரும் போது உரிய வயதில் தடுப்பு மருந்து வகைகளை கொடுத்தல் அவசியம். பிள்ளைகளின் வயதுக்குரிய நிறையும் உயரமும் இருக்கின்றதா என்பதையும் மருத்துவ மாதுக்கள் மூலம் அறிந்து கொள்ளுங்கள். அவர்களின் வயதிற்குரிய செயற்பாடுகளைச் செய்கின்றார்களா? நீங்கள் பெயர் சொல்லி அழைக்கும் போது உங்களை பார்க்கின்றாரா. (இதனூடாக பார்வை சரியாக உள்ளதா கேட்டல் திறன் உள்ளதா? என்பதை அவதானிக்க வேண்டும்.) ஒவ்வொரு தாயும் பிள்ளையைச் சரியான வழியில் பராமரித்தீர்கள் என்றால் ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கலாம்.

தாயின் அரவணைப்பில் பிள்ளை வளர்கிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் தாயின் மடிதான் முதற்பாடசாலையாகிறது. தாயின் மடியிலிருந்து செல்ல மொழி பேசுகிறது.

அம்மா சொல்லிக் கொடுப்பவற்றை கேட்கிறது, திரும்ப சொல்கிறது. மடியில் இருந்தே அனைத்து விடயங்களையும் கற்றுக் கொள்கிறது. பிள்ளை செய்யும் நல்ல செயல்களையும் பாராட்டுங்கள். அப்போதுதான் பிள்ளை மேலும் மேலும் நல்ல செயல்களை செய்யத்தூண்டும். தன் மூளைக்கேற்ப நல்ல செயல்களை செய்யும் பொழுது பெற்றோர்கள் கைதட்டி பாராட்டுங்கள். பிள்ளை வளர்ப்பில் அம்மா மட்டும் பங்குகொள்கின்றார். அப்பா பிள்ளை விடயத்தில் கவனம் கொள்வதில்லை. ஏனோதானோ என்று விட்டு விடுகிறார்கள். பிள்ளை விடயத்தில் அப்பாவும் பங்குகொள்ள வேண்டும்.

பிள்ளை அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்துவிடும். பிள்ளைகள் நித்திரை விட்டு எழும்பும் போது பிள்ளைக்கு அருகில் இருங்கள். பிள்ளையுடன் அப்பா சிறிது நேரமாவது கதைக்க வேண்டும். பிள்ளைகளின் செல்ல மொழியை பொறுமையுடன் கேட்கவேண்டும். அப்பாவும் பிள்ளைகளும் சகபாடிகள் போன்று உரையாட வேண்டும்.

பிள்ளைகளின் விடயத்தில் அப்பா பங்குகொள்ளவில்லை என்றால் பிள்ளைக்கு அப்பாவை பிடிக்காது போய்விடும். அதிகாலையில் எழுந்து பிள்ளையுடன் கதையுங்கள். பிள்ளை செய்கின்ற நல்ல செயல்களை பாராட்டுங்கள். அன்பாக பழகுங்கள். பிள்ளை கூறுகின்ற கருத்துக்களை செவிமடுங்கள். அவர்கள் உங்களிடம் கேள்விகள் கேட்பார்கள். சரியாக பதிலைச் சொல்லுங்கள். நீங்கள் சரியான பதில் சொல்லவில்லை என்றால் பிள்ளை உங்களிடம் கேள்விகள் கேட்காமல் மனதிற்குள் அடக்கிவிடும். பிள்ளைகளை வெளிச் சூழலுக்கு அழைத்துச் செல்லுங்கள். (உறவினர் வீடுகள், கோயில், மிருகக்காட்சி சாலை, சந்தை) அங்கு பார்த்து அவை பற்றிய கேள்விகள் கேட்பார்கள். இதனூடாக பிள்ளைகளின் சிந்தனைத் திறனை வளர்த்துக்கொள்ளலாம்.

பிள்ளைகள் விரும்பிக் கேட்கும் விளையாட்டுப் பொருட்களை கொடுங்கள். அந்த விளையாட்டுப் பொருட்களை அழகு பொருட்களாக பொத்தி பாதுகாக்காதீர்கள். பிள்ளைகளிடம் நன்றாக விளையாடக் கொடுங்கள். அவர்கள் அதனை பாகம் பாகமாக உடைத்து விட்டார்கள் என்று பேசாதீர்கள். நீங்களும் அருகில் இருந்து கவனித்தீர்கள் என்றால் தெரியும். ஏன் உடைத்தார்கள் என்று! அப்பொருள் இயங்குவது, உருளுவதற்கு காரணம், எப்படிச் இதனைச் செய்தார்கள் என்று ஆராயும். அவர்களின் ஆராயும் ஊக்கத்தை தடுக்காதீர்கள். புதிது புதிதான நவீன விளையாட்டுப் பொருட்களையும் கொடுங்கள். உங்களுக்கு இயக்கும் முறை தெரியாமல் இருக்கலாம். ஆனால் பிள்ளைகள் இலகுவில் இயக்கிக் கொள்வார்கள்.

பிள்ளைகளின் துரிதமான மூளை வளர்ச்சி பிறப்பில் இருந்து மூன்று வயதிற்குள், பின் ஐந்து வயது மட்டும் குறைவாகக் காணப்படும். பெற்றோர்களே! பிள்ளைகளின் சிந்தனைத் திறனைத் தூண்ட நீங்கள்தான் வழிசெய்ய வேண்டும். தேடவும் தேடி

அறிந்து கொள்ளவும் பூரண சுதந்திரம் கொடுங்கள். ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் பாகுபாடு காட்டாதீர்கள். ஆண் பிள்ளைகளுக்கு வாகனம், துப்பாக்கி, ஓகன், பந்து என்று வாங்கி கொடுத்து பெண் பிள்ளைகள் என்றால் பொம்மைகள் மட்டும் வாங்கி கொடுக்கிறார்கள். அப்படிச் செய்யாதீர்கள்.

அடுத்த கட்டமாக பிள்ளை முன் பள்ளிக்கு அடியெடுத்து வைக்கிறது. அங்கே புதிதான சூழலுக்கு முகம் கொடுக்கிறது. கூடுதலான பிள்ளைகள், ஆசிரியர் இவற்றைக் காண பிள்ளையின் மனதில் பய உணர்வு ஏற்படுகிறது. ஆசிரியரே வணக்கம் கூறி பிள்ளையை வரவேற்க வேண்டும். பலதரப்பட்ட வீட்டுச் சூழலில் இருந்து பிள்ளைகள் முன் பள்ளிக்கு வருகிறார்கள். சில பிள்ளைகள் வரும்போது பயப்பட மாட்டார்கள். உடனடியாக ஏனைய மாணவர்களுடனும் ஆசிரியருடனும் சேர்ந்து நன்றாக கதைப்பார்கள். சில மாணவர்கள் முன் பள்ளிக்கு வரும்போது அழுதுகொண்டே வருவார்கள். ஆசிரியரைக் காணப்பயம், ஏனைய மாணவர்களைக் காணப்பயம், எந்த விளையாட்டுப் பொருட்களையும் தொட்டு விளையாட பயம். எதற்கும் பயந்தசுபாவத்துடன்காணப்படுவார்கள். இதனால் ஆசிரியருக்கு கற்றல் செயற்பாட்டை செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் தை மாதம் முன் பள்ளியில் பிள்ளைகள் இணைக்கப்படும்போது அவ் வயதுக்குரிய பிள்ளைகளை அந்த மாதத்திற்குள்ளே இணைத்துக் கொள்ள வேண்டும். அப்போ அழுகின்ற பிள்ளைகள் எல்லாம் அழுகையை நிறுத்தி விடுவார்கள் . அதன் பின்பு கற்றல் செயற்பாட்டையோ, விளையாட்டுக்களையோ இலகுவாக செய்ய முடியும். வீட்டுச் சூழலில் அம்மாவின் மடியில் கல்வி கற்ற பிள்ளைகள் முன் பள்ளிக்கு வரும் போது பல எதிர்பார்ப்புடன் வருவார்கள். ஆகவே முன் பள்ளியை எப்போதும் மகிழ்ச்சிக் கூடாரமாக அமைக்க வேண்டும்.

பிள்ளைகளின் விருப்புக்கு ஏற்ப விளையாடவும் தேடி அறிந்து கொள்ளவும் கற்றல் வட்டங்கள் (கற்றல் மூளைகள்) இருத்தல் அவசியம். விளையாட்டு முற்றத்தில் சுதந்திரமாக விளையாட விடுங்கள். விளையாடும்போது ஆசிரியர்கள் அருகில் இருக்க வேண்டும். கற்றல் செயற்பாட்டில் பிள்ளை எதை நன்றாகச் செய்கின்றதோ அதைப் பாராட்டுங்கள். பிள்ளைகள் பாராட்டையே விரும்புவார்கள். அது பிள்ளையின் செயற்பாட்டில் மேன் மேலும் தூண்டுதலை ஏற்படுத்தும். ஆடல், பாடல், கதைகூறல், வெட்டுதல், ஒட்டுதல், களிமண் பிசைந்து உருவங்கள் செய்தல், கீறுதல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக கற்பிப்பது மிகவும் இலகுவாக இருக்கும்.எந்தப் பிள்ளைகளும் ஒதுங்கி இருக்க மாட்டார்கள். மகிழ்வான கற்றல் காணப்படும்.

ஒதுங்கி இருக்கும் பிள்ளைகளை இனங்கண்டு காரணத்தை

கேட்டறியுங்கள்.பிள்ளை சாப்பிடாமல் வந்திருப்பார். வீட்டில் பெற்றோர்கள் சண்டை பிடித்ததால் பயத்தில் இருப்பார்கள்; அல்லது பிள்ளை வீட்டில் இருந்து வெளிக்கிடும் போது யாரும் தண்டித்தால் பிள்ளை ஒதுங்கி இருக்கும். தொடர்ச்சியாக ஒதுங்கி இருந்தார்கள் என்றால் பெற்றோர்கள் மூலம் கேட்டு அறிந்து கொள்ளலாம். தொடர்ந்து பிள்ளைகள் முன் பள்ளிக்கு வரவில்லை என்றால் வீட்டுக்குச் சென்று காரணத்தை கண்டறியுங்கள். அடிக்கடி எல்லாப் பிள்ளைகளின் வீட்டிற்கும் செல்லுங்கள்.பிள்ளைகளின் வீட்டில் நல்லது, கெட்டது நிகழ்வுகள் நடைபெறும்போது நீங்களும் அவர்களின் உறவுகள் போன்று கலந்து கொள்ளுங்கள். அதைத்தான் பிள்ளைகள் விரும்புவார்கள். பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுங்கள்.

எழுத்துக்களை எழுதத் தொடங்குமுன் அந்த எழுத்துக்களை முதலில் அறிமுகம் செய்யுங்கள். பின் அதனைத்திரும்பத் திரும்பச் சொல்லி கொடுங்கள். அதன் பின் பிள்ளைக்கு கோடுகள், வட்டங்கள், வளைகோடுகள் பழக்கிய பின் உயிர் எழுத்துக்களை கற்றுக்கொடுங்கள். பிள்ளைகளின் வயதிற்கு ஏற்ப இண்டு மூன்று எழுத்துச் சொற்களைப் படங்கள் மூலம் அல்லது உண்மைப் பொருட்களைக் காட்டிக் கற்றுக் கொடுங்கள். நீங்களாகவே நாலுவரிப் பாடல்களை இயற்றிச் சொல்லிக்கொடுங்கள். முன் பள்ளியை எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். பிள்ளைகளையும் சுத்தமாக வர வேண்டும் என்று அறிவுறுத்துங்கள். முன் பள்ளிகளில் விளையாட்டு விழா, கலை விழா, ஒளி விழா போன்ற நிகழ்வுகள் செய்யும் போது எல்லாப் பிள்ளைகளையும் பங்குகொள்ளச் செய்யுங்கள். பிள்ளைகள் செய்யமாட்டார்கள் என்று புறம் தள்ளாதீர்கள். முன் பள்ளியில் ஒதுங்குகின்ற பிள்ளை பெரிய பாடசாலைக்குச் சென்றாலும் ஒதுங்கியே இருக்கின்றது. பிள்ளையின் மனம் பாதிக்காத வகையில் செயற்படுங்கள்.

எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தைதான். அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினில் மட்டும் அல்ல; ஆசிரியர்களின் வளர்ப்பினிலும் தங்கியிருக்கிறது. பிள்ளைகளை எல்லோர் மத்தியிலும் வைத்துத் தண்டிக்காதீர்கள். பிள்ளைகள் செய்கின்ற செயல்களை ஏனைய மாணவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். முன் பள்ளிகளில் பெற்றோர்களுக்கான கூட்டம் நடாத்தும் போது கூடுதலாக அம்மாக்கள் மட்டும் கலந்து கொள்வார்கள். அப்பாக்கள் கலந்து கொள்வதில்லை. சில பெற்றோர் கூட்டம் நடாத்தினாலோ அல்லது எந்த நிகழ்வுகள் செய்தாலும் அதில் பங்கு கொள்வதில்லை. இதனால் பாதிப்பது உங்கள் குழந்தைக்குத்தான் அம்மாவும் அப்பாவும் சேர்ந்து பங்குகொள்ளும் போது பிள்ளைகளுக்கும் சந்தோசமாக இருக்கும். அத்தோடு ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களை அறிந்து கொள்ளக்கூடியதாக அமையும்.

பெரிய பாடசாலைகளில் பிள்ளைகளை இணைக்கும் போது

பிள்ளையுடன் அப்பாவும் அம்மாவும் சேர்ந்து செல்லுங்கள். பிள்ளைகள் கூடிய காலம் அங்கு கல்வியைத் தொடரப்போகிறார்கள். பாடசாலைக்கு சேர்ந்த முதல்நாள் அனுபவத்தை பிள்ளைகள் மறக்கமாட்டார்கள். உங்களையும் அழைத்துச் சென்றதை நினைவில் வைத்துக் கொள்ளும். முன்பள்ளிகளில் கல்வி கற்ற பிள்ளைகள் எந்தப்பயமும் இல்லாமல் துணிச்சலுடன் செயற்படும். எல்லா முன்பள்ளிச் சூழலில் இருந்து பிள்ளைகள் வரும்போது பிள்ளைகளின் துரிதமான கற்றல், தேடி அறியும் திறமை, எதற்கும் முன்வரும் தன்மை என்பன ஆசிரியர்களால் இனங்காணப்படும். ஆகவே அனைத்துப் பிள்ளைகளையும் தி றமையாகச் செயற்பட உதவுங்கள்.

''இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள்'' ஒவ்வொருவரும் பிள்ளைகளின் விடயத்தில் கவனம் செலுத்துங்கள். பிள்ளைகளுக்கு எதிராக பல துஷபிரயோகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுகின்றன, வேண்டாப் பிள்ளைகளைக் கொலை செய்கின்றார்கள். கொலை செய்ய முற்படும் போதும் சிலரின் கண்காணிப்பு காரணமாக அப்பிள்ளைகள் பாதுகாக்கப்பட்டு சிறுவர் இல்லங்களில் வளர்க்க ஒழுங்கு செய்யப்படுகின்றார்கள். எனவே ஒவ்வொரு பிள்ளையையும் பாதுகாக்கும் பொறுப்பு பெற்றோருக்கு உண்டு என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

# பெண்ணின் மேன்மை

**செல்வி தஷாஜினி நாகேந்திரம்**
**கலவெட்டித்திடல்,**
**புளியம்பொக்கணை.**

இறைவன் படைப்பினில் ஆண், பெண் எனும் இருபாலாரும் சமவுரிமை படைத்தவர்களே. உடல் அமைப்பு ரீதியில் வேறுபட்டு இருப்பபினும் உரிமைகள், தேவைகள் என்ற அடிப்படையில் ஒத்த இயல் புடையவராகவே காணப்படுகின்றனர்.

''மங்கையராகப் பிறந்ததற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா''

என்று பெண்ணின் பிறப்பையே பெரும் பேறாகக் கருதிப் பாடினார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை. சமுதாயம் முன்னேற ஆடவரைக் காட்டிலும் பெண்களின் பண்பு மகத்தானது. சமுதாயத்தில் பெண்களுக்கு என்றுமே சிறப்பிடம் உண்டு.

''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்குமாம்''

என முழக்கினார் பாரதி.

முற்காலத்தில் தமிழ் மக்கள் தம் வாழ்வில் மகளிருக்கு தனியிடமளித்துள்ளனர் என்பதனைச் சங்க நூல்கள் பறை சாற்றுகின்றன. ஔவையார், காக்கைப்பாடினியார், மங்கையர்க்கரசியார், காரைக்கலம்மை யார், போன்ற பெண்பாற் புலவர்கள் சிறப்புற வாழ்ந்த வரலாறுகளுமுண்டு. இறையடிப்படையில் ஆண்களும் பெண்களும் சமவுரிமை கொண்டவர்களே. ஆண்கள் உயர்ந்தவர்கள் என்றும் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்றும் பேசுதல் அறியாமையாகும். குறிப்பாக பெண்கள் அறத்தின் வடிவே, கற்பின் உயர்வே பெண்மை, உயர்வின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெண்ணே மூலமாவாள். இதனாற்தான் பெண்ணை தியாகத்தின் சின்னமாகவும் கடமையின் காப்பாகவும் பொறுமையின் இருப்பிடமாகவும் போற்றினார்.

பெண்ணை சக்தியின் வடிவமாக போற்றின சமயங்கள். வாழ்க்கைத் துணையாகவும் வாழவைக்கும் தாயாகவும் வழிநடத்திச் செல்பவள் பெண்ணே. அவளுக்கு ஈடாக எதைனையுமே எடுத்துரைத்தல் இயலாது. இதற்குச்சான்றாக நான்மணி கடிகை பாடலில் வரும் பின்வரும் பாடல் அடியை நோக்கலாம்.

''ஈன்றாளோ டெண்ணக் கடவுளு மில்''

எனும் அடி மூலம் பெற்றவளுக்கு சமமாக மதிக்கத்தக்க வேறெந்த தெய்வமும் இல்லையென பெண்ணைப் போற்றப்படுகின்றது. தமிழ் மறை தந்த திருவள்ளுவர் வாழ்க்கைக்குத் துணை நலம் பற்றிக் கூறும்போது இல்லற

வாழ்வில் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் துணைவர் எனக்கொண்டு ஒற்றுமையோடு செயற்பட்டால் வாழ்க்கை சிறப்புறும், பண்பட்ட சமுதாயம் உருவாகும் என்கிறார். ஒவ்வோர் ஆணின் முன்னேற்றமும் ஒரு பெண்ணாலே என்பர்.

''தொட்டிலை ஆட்டும் கையே உலகை ஆளும்'' என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். ஜனாதிபதி முதல் உயர் நீதி மன்றம் வரை, பல்கலைக்கழகங்கள் தொட்டுப் பாடசாலை வரை, பாராளுமன்றம் தொட்டு உள்ளூராட்சி சபைகள் வரை பெண்கள் உயர்ந்த நிலையில் இருப்பதைக் காண முடிகின்றது. இன்று பெண்கள்தம் அறிவாலும், ஆற்றலாலும், உழைப்பாலும் முன்னேற்றம் கண்டு வருகின்றனர். ஆடவர்க்கு நிகராகவும் சமுதாயத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

''பட்டங்கள் ஆழ்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே
பெண் இணைப் பில்லைக் காண்''

என்ற பாரதியின் கனவு மெய்ப்பட்டுள்ளது.

# ஆடவரே கேளீர்.....

பார்த்தீபன் ஜயீலா
தர்மபுரம்.

என் கணவன்
என் தோழன்
என எண்ணும்
பேதையிடம்
என் மனைவி
எனக்கடிமை
எனக் கூறும்
ஆணினமே

பூப்போட்டு பெண்ணவளை
பூஜிக்க வேண்டாம்
தங்கத் தட்டில் வைத்து
தாங்கிடவும் வேண்டாம்

மனம் ஒன்றைக் கொண்ட
மங்கையாய் எண்ணுங்கள்
உணர்வுகள் அவளுக்கும்
உண்டென்று எண்ணுங்கள்

கோடொன்றைக் கிழித்தவளைக்
கோதாக்கி நசுக்கிடாமல்
சின்னதாய் மனக்கதவை
அவளுக்காய் திறந்திடுங்கள்

சீதைகள் வாழ்விலே
சிறப்புகள் தோன்றிடும்
நாளை அவள் கையில்
எவறெஸ்ரும் அடங்கிடும்

# கிளி/தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

க.கருனானந்தன்
அதிபர்.

இலங்கைத்தீவின் வடக்கே இயற்கை வளம் நிறைந்திருக்கின்ற கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப்பிரதேச செயலக பிரிவில் பழமை வாய்ந்த பாரம்பரிய கலை,கலாசார, இலக்கிய மரபுகளை தன்னகத்தே கொண்ட தட்டுவன்கொட்டி கிராமத்தில் பழைய கண்டி வீதியின் அருகே அமைந்து இங்குள்ள மக்களினதும் மாணவர்களினதும் கல்வி வளர்ச்சியில் ஒளி வீசுகின்ற பாடசாலையாக கிளி/ கண்ணகை அம்மன் வித்தியாலயம் திகழ்ந்து வருகின்றது.

இவ் வித்தியாலயத்தினுடைய தோற்றம் பற்றி நாம் நோக்குகின்ற போது இக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆனையிறவு அ.த.க பாடசாலைக்குச் சென்று கல்வி கற்று வந்தனர். அந்த காலப்பகுதியில் கல்வியின் தேவையினையும் மாணவர்களின் கஸ்ர நிலையினையும் நன்கறிந்த இங்கு வசித்த மூத்த குடிமக்கள் இங்கே வசித்து வந்த மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து கலந்துரையாடியபோது எமது கிராமத்துக்கு பாடசாலை ஒன்று கட்டாயம் அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்தனர். எனவே இதற்கான காணியில்லை. இதனை எப்படி பெற்றுக்கொள்வது என எல்லோருடமும் வினாவியபோது இந்தக் கிராமத்தின் மூத்த குடிமகன்களில் ஒருவரான கந்தர் முருகர் என்பவர் தனது சொந்தக் காணியில் ஒரு ஏக்கர் காணியினை அன்பளிப்பாக வழங்குவதாக உறுதியளித்து இதற்கான சட்டபூர்வமான ஆவணங்களையும் வழங்கினார். அத்துடன் இப்பாடசாலைக்கு பெயரொன்றினை வைக்கவேண்டும் என தீர்மானித்தனர். இதற்கமைய இந்தக் கிராமத்தைச் சேர்ந்த அனைவரும் கண்ணகை அம்மனை தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வருவதனால் இப்பாடசாலைக்கு ''கண்ணகை அம்மன் வித்தியாலயம்'' என பெயர் சூட்டினர். பின்னர் காடுகளுக்கு சென்று தடிகளை வெட்டி கிடுகினால் ஆன கொட்டகை அமைத்துக் கொண்டனர்.

1938ல் இப்பாடசாலையினை வேலணையைச்சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபரான சரவணமுத்து என்பவர் ஆரம்பித்து வைத்ததுடன் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி, மாணிக்கவாசகர் ஆகிய ஆசிரியர்களையும் கற்பித்தலுக்காக நியமித்து விட்டுச் சென்றார். அன்றிலிருந்து இவ் ஆசிரியர்களுக்கான வேதனம், உணவு, தங்குமிடம் ஆகியவற்றை இக்கிராம மக்களே

வழங்கி வந்தனர். இந்தக் காலப்பகுதியில் மாணிக்கவாசகர் என்பவரே வித்தியாலயத்தின் முதல்வராக கடமையாற்றினார்.

மாணிக்கவாசகர் அவர்கள் 1943ஆம் ஆண்டு விலகிச் செல்ல பசுபதிப்பிள்ளை அவர்கள் பொறுப்பேற்றுக் கடமையாற்றி வந்தார். 1945ஆம் ஆண்டு இவர் விலகிச் செல்ல திரு.சிங்கராசா அவர்கள் முதல்வராக பொறுப்பேற்று கடமையாற்றி வந்தார்.1948ஆம் ஆண்டு இவர் விலகிச் செல்ல திரு.கார்த்திகேசு என்பவர் பொறுபேற்று கடமையாற்றி வந்தார். 1950ம் ஆண்டு இவர் விலகிச் செல்ல திரு இரத்தினசிங்கம் என்பவர் இப் பாடசாலையின் முதல்வராக பொறுப்பேற்று மிகவும் சிறப்பான முறையில் கடமையாற்றி வந்ததுடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் அயராதுழைத்தார்.

1952ஆம் ஆண்டு அன்றிருந்த அரசாங்கம் இப் பாடசாலையினை அரசபாடசாலையாகப் பதிவு செய்தது. அதனைத் தொடர்ந்து 1953ஆம் ஆண்டு இப்பாடசாலைக்கென இரண்டு நிரந்தரக் கட்டடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் கடமையாற்றிய அதிபரான திரு. இரத்தினசிங்கம் அவர்கள் 1953ல் விலகிச்செல்ல

1954 தொடக்கம் 1957 வரை

திரு. சிவசுந்தரம் அவர்களும்

1958 தொடக்கம் 1976 வரை திரு.வீ.தெய்வேந்திரம்பிள்ளை அவர்களும்

1977 தொடக்கம் 1979 வரை

திரு.ஆ. கந்தப்பு அவர்களும்

1980 தொடக்கம் 1985 வரை

திரு.ஆர். தியாகராசா அவர்களும் கடமையாற்றியுள்ளனர்.

1986 இல் இருந்து தட்டுவன்கொட்டியைச் சேர்ந்த திருமதி தங்கமலர் சண்முகநாதன் அவர்கள் பதில் கடமையேற்று அதிபராக சேவையாற்றி வருகின்ற காலப்பகுதியில் 1990.07.19ஆம் திகதியன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு பிரதேசத்தின் ஒரு பகுதியாகவும் பழைய கண்டி வீதி ஊடறுத்துச் செல்கின்ற பழமை வாய்ந்த கிராமமாக திகழும் தட்டுவன்கொட்டியை விட்டு இடம் பெயர வேண்டிய வரலாற்றில் மறக்க முடியாத சம்பவம் இடம்பெற்றது.

இடம்பெயர்ந்து சென்று முதலில் உப்பாறுப் பகுதியில் இருந்த வேளையில் கிராம மக்களினதும் அன்று அதிபராக இருந்த திருமதி தங்கமலர் சண்முகநாதன் அவர்களின் முயற்சியினாலும் அங்கே தற்காலிக கொட்டகை அமைத்து பாடசாலையை இயக்கி வந்தனர். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இடப் பெயர்வினால் கிளி/முருகானந்தா மகா வித்தியாலயத்துடனும் கிளி/புனித அந்தோனியார் வித்தியாலயத்துடனும் தற்காலிகமாக இணைக்கப்பட்டு இயங்கி வந்தது.

1991 காலப்பகுதியில் எமது மக்களுக்கான முகாம் ஒன்றினை 10ம் கட்டை, விசுவமடு என்னும் இடத்தில் அமைத்துக்கொடுக்கப்பட்டது. அத்துடன் அரசினால் பாடசாலைக்கென தற்காலிகமாக கொட்டகை அமை

த்துக்கொடுக்கப்பட்டு பாடசாலை இயங்கி வருகின்ற வேளையில் பிரமந்தனாறு குளத்திற்கு மேற்குப் பக்கமாக புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்திலிருந்த அரசகாணியினை கண்ணகிநகர் எனப்பெயரிட்டு ஒரு ஏக்கர் விகிதம் மக்களுக்கு வழங்கப்பட்டு மக்கள் குடியேற ஆரம்பித்தவுடன் இப்பாடசாலையினையும் அங்கே கொண்டுசெல்லவேண்டி ஏற்பட்டதுடன் இப்பாடசாலைக்காக சுமார் நான்கு ஏக்கர் காணியும் வழங்கப்பட்டது. இக் காணியில் சீற்றினாலான இரு கொட்டகைகளையும் ஒரு கிடுகிலான கொட்டகையும் அமைக்கப்பட்டு 1995ஆம் ஆண்டிலிருந்து கண்ணகிநகர் என்னும் புதிய கிராமத்தில் இப் பாடசாலையானது சிறப்பாக இயங்க ஆரம்பித்தவுடன் தரம் - 05 வரை இயங்கி வந்த பாடசாலை தரம் -11 வரை இடைநிலைக் கல்வியினை கற்பிக்கக்கூடிய அனுமதியுடன் உயர்சி பெற்றது.

அதாவது 2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்க அதிபராக இருந்த திரு.தி.இராசநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலுடனும் GTZ நிறுவன நிதியுதவியுடன் எமது மக்களுக்கான நிரந்தர வீடுகளும் இரண்டு பாடசாலை கட்டிடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டு 2005ஆம் ஆண்டு தட்டுவன்கொட்டிக்கு மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டனர். அன்றிலிருந்து திரு இ.மனுவல் அவர்கள் பாடசாலையின் முதல்வராக பொறுப்பேற்று சிறப்பாக இயங்கி வந்தார்.

2006ஆம் ஆண்டு இறுதியில் மீண்டும் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து கண்ணகிநகருக்குச் சென்ற வேளையில் இப் பாடசாலையினை கிளி/ புன்னைநீராவி அ.த.க பாடசாலையுடன் இணைத்து திரு.த.ம.தெய்வேந்திரம் அவர்கள் புதிய அதிபராகப் பொறுப்பேற்று நிர்வகித்து வருகின்ற வேளையில் தொடர்ச்சியாக ஏற்பட்ட இடப்பெயர்வினால் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் முற்றாக இழந்ததுடன் மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து செட்டிக்குள பகுதியில் அமைக்கப்பட்ட முகாம்களில் வாழ்ந்து வந்தனர்.

2010ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றம் மூலம் 2010.10.27ம் திகதி தட்டுவன்கொட்டியில் மக்கள் மீள்குடியேறி வசித்து வருகின்ற வேளையில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரதும் முயற்சியின் காரணமாக 2011.01.03 அன்று கட்டட இடிபாடுகளுக்கு மத்தியிலும் எந்தவிதமான தளபாடங்களின்றியும் பதிலதிபராகப் பொறுப்பேற்ற திரு.வி.வேலானந்தம் அவர்களுடன் 06 ஆசிரியர்களும் 52 மாணவர்களுடனும் பாடசாலை மீள ஆரம்பித்தது.

2011.04.01 அன்று முதல் பாடசாலையின் முதல்வராக நான் பொறுப்பேற்று கொண்டேன். தற்போது 14 ஆசிரியர்களுடனும் 92 மாணவர்களுடனும் மிகவும் சிறப்பான முறையில் இயங்கி வருகின்ற நிலையில் 2011ஆம் ஆண்டு சுவிஸ்

அபிவிருத்தி நிறுவனத்தால் (SDC) அனைவருக்கும்நிரந்தரவீடுகள்அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன் எமது பாடசாலைக்காக 20.3மில்லியன் ரூபா செலவில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வகுப்பறை கட்டடத்தினையும் ஆசிரியர் விடுதியினையும் மலசலகூடத்தினையும் சுமார் 240.000 லீற்றர் கொள்ளளவு கொண்ட மழை நீர் சேகரிப்புத் தாங்கியினையும் அமைத்து வழங்கப்பட்டு அனைத்து வசதிகளையும் கொண்ட அழகிய பாடசாலையாக புதுப்பொலிவுடன் திகழ்வதை அவதானிக்க முடிகின்றது.

## வாழ்வின் எழுச்சி திணைக்கள உத்தியோகத்தர்கள் (சமுர்த்தி)



இருப்பவர்கள் : திருமதி ந.கௌரிதேவி (M.D). திருமதி.கு.மதிவதனி (P.M), திரு.கு.சிவலிங்கம் (A.O), திரு.சி.குகதாசன் (Accountant),
(இடமிருந்து வலம்) திரு.த.முகுந்தன் (D.S), திரு.பூ.ராஜ்வினோத் (A.D.P), திரு.த.அஜந்தன் (H.Q). திரு.இ.அபராஜிதன் (B.M), திரு.பொ.மணிமாறன்.

நிற்பவர்கள் : திரு.யோ.கோபிநாத், செல்வி.அ.மேரிஅனிற்றா, திருமதி.லி.ஜெனிகா, திருமதி ரா.சுகிதா, திருமதி ஜெ.கமலினி,
(1ம் வரிசை) செல்வி.தி.சிந்துஜா, செல்வி.சி.கஸ்தூரி, செல்வி.த.புனிதவதி, திருமதி.ர.செல்வமதி, திருமதி,சு.பிரதீபா, திருமதி கா.சபிதா,
திருமதி.டி.தங்கமணி, திரு.சி.சயந்திரன்.

நிற்பவர்கள் : திரு.ச.சத்தியசீலன், திரு.சி.யாதவன். திரு.லூ.பிறைசல், திரு.பா.சசிதரன், திரு.ஸ்ரீ.ரூபாகரன், திரு.க.பார்த்தீபன்,
(2ம் வரிசை) திரு.யோ.சிவகுமார், திரு.கு.அருமைராசா, திரு.ச.ஸ்ரீதரன், திரு.கி.பிரதீபன்.

சமூகமளிக்காதவர்கள் : செல்வி.சி.குமுதினி, செல்வி.செ.தாரணி, திருமதி.சு.மாதினி.

## பிரதேச கலாசாரப்பேரவை உறுப்பினர்கள்



இருப்பவர்கள் : செல்வி.மு.நடனவதி (உப செயலாளர்), திரு.ஆ.பாலசுப்பிரமணியம், திரு.ந.யூட்நிக்சன் (பொருளாளர்),
(இடமிருந்து வலம்) திரு.த.முகுந்தன் (தலைவர்).திரு.த.அமலதாஸ் (செயலாளர்), திரு.சி.கனகராசா, திருமதி.செ.இராஜரட்ணம்

நிற்பவர்கள் : திரு.ஆ.செல்வராஜ், திரு.பெ.புண்ணியராஜ், திரு.க.விஜயந்தன், செல்வி.இ.துவாரகா, திரு.தி.பிரபாகரன், திரு.வே.சிவநேசன்.

சமூகமளிக்காதவர்கள் : திரு.பூ.ராஜ்வினோத் (உப தலைவர்).திரு.சி.சிவராஜ்.திருமதி.கோ.தேவபிரியா.

# கலைஞன்

பொ.பாலேஸ்வரன்

வைரவர்கோவிலடி ,பரந்தன்

கலைஞனைப் போற்றிடுவோம் - நாமே
கலைஞனைப் போற்றிடுவோம்
போற்றிடுவோம் நாம் போற்றிடுவோம் - நாம்
கலைஞனைப் போற்றிடுவோம் -கலை

வாழ்ந்திடும் போதே வாழ்ந்திடும் கலைஞனை
வாழ்த்தித் துதி செய்வோம்
வானுயர் எண்ணங்கள் வைத்திடும்
கலைஞனின் வாழ்வுக்கு வழிசமைப்போம்

எண்ணங்கள் எல்லாம் நல்லதாய் வேண்டும்
புதுயுகம் படைத்திடுவோம்
வண்ணமாய் எங்கள் கலைஞர்கள் கூட்டம்
தினம் வரச் செய்திடுவோம் -கலை

சித்திரம் சிற்பம் நாடகம் நடனம்
முறையாய் கற்றிடவே
இசையுடன் சேர்ந்திட்ட வாத்தியமெல்லாம்
முழங்கட்டும் மண்மேலே

இலட்சியம் ஒன்று உனக்கிருந்தாலே
உயர்ந்திடும் உன் வாழ்வு - உன்
இலட்சியம் வென்றிடும் ஓர் நாள்
அதைவென்றிடு துணிவோடு -கலை

*தமிழே நீ வாழ்க கலையே நீவாழ்க*
*தரணியில் நீ வாழ்க*

நீ படைத்திடும் கலைகள் ஒரு நாள்
உன் வாழ்வுக்கு உரமூட்டும் - கண்
பார்த்திட வாழ்ந்திடும் நெஞ்சம்
தினமொரு கவிதை சொல்லும்.

*தமிழே நீ வாழ்க! கலையே நீ வாழ்க!!*
*தரணியில் நீ வாழ்க!!!*

*- கலை*

# "தேனீக்கள்"

**திருமதி ப.வைரமுத்து,**

**கலவெட்டித்திடல், புளியம்பொக்கணை.**

"பாட்டி பாட்டி'' பக்கத்து வீட்டுச் சுதாகர் கூப்பிட்டுக் கொண்டு படலையடியில் நின்றான். ''என்னடா சுதாகர் இப்ப என்ன வேணும் உனக்கு?'' செல்லப்பாட்டி என்று அழைக்கப்படுகிற செல்வராணிப் பாட்டிக்கு அவன் வந்திருக்கிற நோக்கம் தெரியும்.சுதாகருக்கு பாட்டி வீட்டு முற்றத்தில் உள்ள தென்னைமரத்தில் கொஞ்ச நாளாக ஒரு கண். வருகிற போகிற நேரம் எல்லாம் அந்த இளம் தென்னையையே உற்றுப் பார்ப்பான். அந்த தென்னைக்கு ஒரு கதை உள்ளது. பாட்டியின் கடைக்குட்டி ஆசையோடு முற்றத்தில் நட்ட தென்னம் பிள்ளை அது. அதற்கு அவன் காலையிலும் மாலையிலும் நீரூற்றுவான். ஒரு நாளைக்கு ஒரு முறை தண்ணி விட்டால் போதும் என்று சொன்னாலும் கேட்க மாட்டான். அப்படி வளர்ந்த தென்னை அது. நாட்டு நடப்புக் காரணமாக அவனும் வெளிநாடு போக வேண்டியதாயிற்று. பதினெட்டு வயதானால் சோதனையான காலம் தான் அதற்கு அவன் விதிவிலக்கல்ல அவன் வைத்து விட்டுப்போன தென்னம்பிள்ளையைத் தன் பிள்ளை போல் பார்ப்பதில் செல்லப்பாட்டிக்கு ஒரு திருப்தி.

பாட்டியின் மூத்த பையனும் அரசியல் கெடுபிடி காரணமாக சில வருடங்களின் முன் வெளிநாடு போயிருந்தான். இளையவனையாவது தன்னோடு வைத்திருக்க வேண்டும் என்று பாட்டி விரும்பினாள். இப்போது பாட்டியும் கணவர் வைத்தியும் தான். வீட்டில் ஓய்வாக இருக்கும் போது தான் இளம் வயது காலத்தில் வயலில் உழைத்ததை மீட்டிப் பார்ப்பாள் பாட்டி. பாட்டியும் அவளது கணவர் வைத்தியும் மாட்டை ஏரில் பூட்டி வயல் உழுது விவசாயம் செய்த தங்களது இளம் நாள் உழைப்புகளால் சிறுகச் சிறுக சேர்த்த காணி நலங்களையும் தென்னந் தோட்டங்களையும் ஆண்டு அனுபவிக்க ஒரு பிள்ளையாவது தங்களோடு இல்லையே என்று பாட்டி வருந்துவாள். கணவர் வைத்தி அவ்வளவு அலட்டிக் கொள்வதில்லை ''இஞ்ச இருக்கிற நாட்டு நடப்புக்கு அவங்கள் இஞ்ச வந்து என்ன செய்யிறது வெளிநாட்டில் கூலி வேலை செய்தாவது அவங்கள் இருக்கிறாங்கள் என்ற செய்தி கேட்டால் போதும்'' என்பார்.

இளைய மகன் போய் சில வருடங்களின் பின் பாட்டியும் கணவரும் இடம்பெயர்ந்து ஓட வேண்டியதாயிற்று. பிரமந்தனாறு, உடையார்கட்டு, சுதந்திரபுரம், புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால், என்று ஓடி வவுனியாவில் போய் நின்றனர்.

கைகாலுக்கு பிழையில்லாமல் வவுனியா வந்து சேர்ந்த

பெற்றோரைத் தம்மோடு அழைத்து வைத்திருக்க பிள்ளைகள் இருவரும் முனைந்தனர். முதலில் பிரான்சில் உள்ள இளையவனிடம் போக விசா கிடைத்தபடியால் அங்கே போன செல்லப்பாட்டியும் வைத்தியும் மகனையும், மருமகளையும், பேரப்பிள்ளைகளையும் பார்த்து மகிழ்ந்து கூடிக்குலாவி ஈபிள் கோபுரம், கொலன்ட், ஜேர்மனி என்று சுற்றிப்பார்த்து எதிலும் மனம் ஒட்டாமல் தாய்நாட்டை எப்போதும் அடைவோம் என்று வந்து தாய் நாட்டில் கால் பதித்த போது மூத்தவனின் முயற்சியால் கனடாவிற்கும் விசா கிடைத்தது. அங்கும் போய் மகன், மருமகள், பேரப்பிள்ளைகள் என்ற உறவுகளுடன் குதூகலித்த போதும் ரொறன்ரோ மண்ணும் இவர்களோடு ஒட்டமறுத்தது. வவுனியா வந்து சேர்ந்தனர்.

பாட்டிக்கு எப்போதும் தங்களது வீட்டின் ஞாபகம் தான். நாங்கள் இடம்பெயர்ந்து ஓடி வரும்போது அறுவடைக்கு காத்திருந்த அவர்களது வயல் நிலங்களின் காட்சியும், பாட்டியும் வைத்தியும் சேர்த்து வைத்திருந்த வயல்கள், காணிகள், தென்னந் தோட்டங்கள் இவற்றைப் பற்றிய ஏக்கங்கள் பாட்டியை வருத்தின. எப்போது தங்கள் சொந்த மண்ணில் கால் பதிப்பாள் என ஏங்குவாள்.

மீள்குடியேற்றத்தின் போது அவளது வீட்டிற்கு போன போது வீடு உடைந்திருந்தது. முற்றத்தில் இளையவன் வைத்து விட்டுப்போன தென்னம் பிள்ளை வளர்ந்து பாளை விட்டுச்சிறு குரும்பைகளோடு நின்றது. அவ்வளவு செல் வீச்சுகளிலும் அந்தத் தென்னம்பிள்ளை நின்றது அதிசயம்தான். ஆனால் வட்டுக்கு கீழே மூன்றடி தள்ளி இரண்டு பொந்துகள் இருந்தன. செல் வீச்சுகளினால் உண்டான பொந்துகளாக இருக்கும் என வைத்தி கூறினார். ஒரு சில நாட்களின் பின்னர் சில தேனீக்கள் அந்த பொந்துகளைச் சுற்றி வட்டமிட்டுச் செல்வதைப் பாட்டி கண்டாள். அதைப்பாட்டி பொருட்படுத்துவதில்லை மீள் குடியேறி மூன்று வருடங்களும் ஆகிவிட்டன. அந்தத் தேனீக்களின் அட்டகாசம் கூடிக் கொண்டே இருந்தது.

அயல் வீட்டில் இருக்கும் சுதாகரன் ஏதும் அலுவலாகப் பாட்டியின் வீட்டுக்கு வந்து போகிறவன். அவன் அந்த தேனீக்களின் போக்கை கண்டு விட்டான். நேரே தென்னை மரத்திற்கு கிட்ட போய் அந்த தென்னங் கோறையை எட்டிப் பார்த்தான்.

''பாட்டி பாட்டி இந்தத் தென்னைக்குள்ளே தேன் இருக்குப் பாட்டி எப்படியும் நாலுப் போத்தல் தேனாவது எடுக்கலாம் போத்தலை ஆயத்தப்படுத்துங்கோ எடுத்துத் தாறேனணை'' என்றான்.

''எனக்கு தேன் வேண்டமாடா சுதா அந்தத் தென்னைக்கு நீ ஏதும் பழுது வைக்கதை. நீ உதிலை நிக்காதையடா போ'' என்று பாட்டி உரப்பினாள். பாட்டியின் உரப்பல் எடுபட இல்லை ''பாட்டி தென்னைக்கு பழுதில்லாமல் தேன் எடுக்கலாம் பாட்டி நாளைக்கு வாரன்'' என்றாள்.

''அதுதான் அவன் இப்ப படலையடியில் வந்து நிக்கிற நோக்கம்.

அவன்ற நச்சரிப்புத் தாங்க முடியாமல் பாட்டி ஒரு பிளாஸ்ரிக் வாளியும் ஒரு எவர்சில்வர் சட்டியும் கொண்டு வந்து வைத்தாள். சுதாகர் ஒரு முக்காலியை வைத்து அதன்மேல் ஏறி நின்று தென்னம் பொந்தை குடைந்து கைகளால் துளாவி வதை வதையாக தேன் வதைகளை எடுத்து வாழியை நிரப்பினான். தேனீக்கள் பறந்து வந்து இயலும ட்டும் அவனைக் கொட்டின. அவன் எதற்கும் மசிந்துகொடுத்தானில்லை. தேனீக்கள் பறந்து பேரிரைச்சலுடன் அங்கலாய்த்தன. கொஞ்ச தேனீக்கள் பொந்தைச் சுற்றி படுத்துக் கிடந்தன. தேனீக்கள் பல தாம் தேடி வைத்த சொத்துக்களோடு செத்துக் கிடந்தன. மிகுதித் தேனீக்கள் பறந்து போய்விட்டன.

சுதாகர் தேன் வதைகளைப் பிளிந்து எடுத்து எடுத்த கையோடு தனது பங்கையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான். செல்லப்பாட்டிக்கு அதன் பிறகு ஒரு மனக்குழப்பம் அந்த தேன் பொந்தைப் பார்த்தாள் தேனீக்கள் சில திரும்ப வந்து பொந்தை மொய்த்தன. இந்த தேனைச் சேகரிக்க வருடங்கள் சென்றிருக்கும். எத்தனை ஆயிரம் தேனீக்களின் உழைப்பு இந்த சின்னஞ்சிறு பிராணிகளின்.......... இவ்வாறெல்லாம் சிறு பிள்ளைத்தனமாக யோசிப்பாள்.

''இப்படித்தான் நாங்களும் உழைத்து வீடொன்றும், பொருள் பண்டம், நிலபுலம், தென்னந்தோட்டங்கள் என்றெல்லாம் தேடினோமா? முழுவதையும் அழிக்கவிட்டுத் திரும்பி மீள் குடியேறி இந்தத் தள்ளாத வயதி லும் ஏதோ ஒரு நம்பிக்கையுடன் உழைக்கிறோமே எதற்காக? எங்கள் பிள்ளைகள் நாடு திரும்பி தங்கள் தாய் மண்ணில் நிலை ஊன்றித் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்பதற்காகவல்லோ?''

பாட்டி தலை நிமிர்ந்து பார்க்கிறாள் அந்தப் பொந்துக்குள் சில தேனீக்கள் போவதும் வருவதுமாக இருக்கின்றன. ''ஓ, திரும்பவும் தேனீக்கள் மீள் குடியேறிவிட்டனவா? எங்களைப்போல் மீண்டும் தொடங்கும் மிடுக்காக உழைக்கின்றனவா? பாவம் தேனீக்கள், ''இனிமேல் ஒருவரையும் தேன் எடுக்க அனுமதிக்கக் கூடாது'' என்று முடிவெடுக்கின்றாள் செல்லப்பாட்டி. மனம் அமைதியடைந்தது போன்ற உணர்வு. அடுத்த நாள் காலை எழுந்தவுடன் பாட்டி தென்னை மரத்தை அண்ணார்ந்து பார்த்தாள் ''அந்தோ பரிதாபம்'' சில கருங்குளவிகள் அந்த பொந்துக்குள் நுழைகின்றன. தேனீக்கள் யாவும் தப்பினோம் பிழைத்தோம் என்று இரைச்சலுடன் பறந்து விடுகின்றன. இன்று வரை தேனீக்கள் தம் தாய் வீட்டிற்கு வரவேயில்லை.

# "விழித்தெழு...."

யோ.கோபிநாத்
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தருமபுரம் மேற்கு.

காலை எழுந்து விட்டால்
கண்ணில் படுவதெல்லாம்
சோலை மலர்களுமாய்
சுருள் இலையில் பூச்சிகளுமாய்
சாடிக்கு சாடி
ஜாடையாக பூமரங்கள்.
ஓடி ஓடி நீரிட்டு - ஓய்ந்தால்
ஒன்றுமில்லை கையினிலே.

பானையிலே சோறிருந்தும்
பகிர்ந்து உண்ண கறியில்லை.
வீடு வெறும் வீடு - வெளியிலோ
பூந்தோட்டம்.
பயிற்றை பாகல் வேண்ட
பக்கத்து வீட்டில்
பையுடனே படையெடுத்து
சனம் நிறைய நிற்குது பார்.

வேலியிலே வெள்ளரிக்காய் - ஓட்டை
வாளியிலே கத்தரிக்காய்.
பானையிலே வல்லாரை - பனை
ஓலையிலே பூசனிக்காய்.
சாடியிலே கறிமிளகாய் - வாளி
மூடியிலே காய் மிளகாய்.
சாரை சாரையாக - சேற்றில்
ஆறு வகை மூலிகைகள்!

கோடியிலே கோழிக்கூடு - அதன்
கூரையிலே கொடி அவரை.
வீடும் நிறைஞ்சிருக்கு.
வெளிச்சமும் நிறைஞ்சிருக்கு.
நாடு செழிப்பதற்கே!
நல்ல வேலை இதுவென்று
நாடித் திரும்புகையில் - அங்கு
நாணித் தலை குனிந்து
சாடியிலே பூ மரங்கள்.



# பிறந்த ஊரும் வாழ்ந்த கதையும்

**செல்வநாயகம் சிவஞானம்,**
**(ஆசிரியர், கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்)**
**உமையாள்புரம்.**

இப்பொழுது எப்படி இருக்கின்றோம் என்பதை விட முன்பு எப்படி இருந்தோம் .....வாழ்ந்தோம் என்பதை வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நினைத்துப் பார்க்க வேண்டியது அவசியம் ஆகும் அப்பொழுதுதான் எமது முயற்சிகளையும் உயர்ச்சிகளையும் ''மதிப்பீடு'' செய்ய முடியும், என்பதை லேனா தமிழ்வாணனுடைய கட்டுரை ஒன்றில் நான் படித்திருக்கின்றேன். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைப் பயணத்திலும் இந்த அனுபவம் கட்டாயம் இருக்கும்.

எமக்கு உயிர் தந்த தாயும் உண்டு உறங்கிய ஊரும் மதிக்கப்பட வேண்டியவை. மனித நாகரிகம் இன்று ''உலகமயமாதல்'' என்ற கற்பனைக் கோட்டில் கால் பதித்திருக்கின்றது. நகர வாழ்விற்கு எல்லோரும் ஆட்பட்டுக்கிடக்கின்றோம். கிராமத்துக் கட்டுமானங்கள், இரசாயனம் கலக்கப்பட்ட உணவு முறைகள், சமைத்துச் சாப்பிட முடியாத வேலைச்சுமை என்று காலம் கழிந்து கொண்டிருக்கின்றது. தாரம் இழந்தாலும் தன்மானம் இழக்காத தமிழ் சமூகம் கலாசார விழுமியங்களை அடியோடு இழந்து வருகின்றது.

''ஒரு இனத்தின் கலாசாரம் என்பது அவர்கள் வாழ்கின்ற வாழ்க்கை மூலம்தான் அடையாளம் காணப்படுகின்றது.'' சமூக வாழ்வை அடையாளப்படுத்துவதில் கிராமங்கள் முக்கிய பங்களிப்பு செய்கின்றன. கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு வந்து கல்வி கற்பது, தொழில் செய்வது தவறில்லை. நகர்ப்புற கலாசாரத்திற்கு மாறி எமது பூர்வீக விழுமியங்களை தொலைத்து விடுவதுதான் ஆபத்து. ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவாகிலும் நனிசிறந்தனவே'' என்பதை உணர்ந்தால் போதும்.

எண்பதுகளில் எனக்குப் பதின்மூன்று வயது. எனக்கு விபரம் தெரிந்த காலத்தில் இருந்து எனது கிராமம் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் இருந்தது. ஜீபனோபாயத்திற்காக மட்டுமே வாழ்ந்து கொண்டிருந்தோம். எங்களுடைய குடும்பத்துடன் 35-40 வரையிலான குடும்பங்களை கொண்ட சிறிய கிராமமாக ''உமையாள்புரம்'' அமைந்திருந்தது. ஒரு ஏக்கர் மேட்டுக்காணியும் நான்கு ஏக்கர் வயல்க்காணியும் எல்லோருக்கும் இருந்தது. நெல்லும் ஒரு போகம் விதைக்கலாம். மாடுகள் வளர்ப்பதும் சிறு தானியங்கள் விதைப்பதும் முக்கிய தொழில். எல்லோரும் மாட்டுப்பட்டி வைத்திருந்தார்கள். எங்கட பள்ளிக்கூடத்திற்கு வருகிற அதிபர், ஆசிரியர்கள் இலகுவில்

மாற்றம் கேட்டுப் போக மாட்டார்கள். அந்த அளவிற்கு அவர்கள் பாலுக்கும் தயிருக்கும் நெய்யிற்கும் மோருக்கும் வசப்பட்டுப்போனார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் புற நகர்ப்பகுதியான உமையாள்புரம் கிராமம் யாழ்ப்பாணம்-கண்டி பிரதான நெடுஞ்சாலையில் ஆனையிறவு உப்பளத்திற்கும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் 1954ம் ஆண்டு குடியேற்றம் செய்யப்பட்ட ஒரு குடியேற்ற கிராமமாகும். குமரபுரம், குஞ்சிப்பரந்தன், நாவற்கொட்டியான், தட்டுவன்கொட்டி, விளாவோடை, கோரக்கன்கட்டு முதலிய அயற் கிராமங்களும் பெரும்பாலும் இக்காலகட்டத்தில் தான் குடியேற்றம் கண்டன.

அக் காலகட்டத்தில் 'கிளிநொச்சி' மாவட்டமாக இருக்கவில்லை. யாழ்ப்பாணத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. கரைச்சியும் பச்சிலைப்பள்ளியும் இணைந்த பிரதேசங்களாக இருந்தன. இப் பிரதேசங்களுக்கு திரு.முருகேசப்பிள்ளை அவர்கள் காரியதரசியாக விளங்கினார். திரு.மார்க்கண்டு அவர்கள் கிராம அலுவலராக செயற்பட்டார். நான் நினைக்கின்றேன் இவர்களுடைய முயற்சியின் காரணமாகத்தான் ''உமையாள்புரம்'' ஒரு குடியேற்றக்கிராமமாக உருவாகியது.

உமையாள்புர கிராமம் உருவாகுவதற்கு ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை என்பன முக்கிய காரணமாக அமைந்திருந்தன. ஆனையிறவு இலங்கையிலுள்ள பெரிய உப்பளங்களில் முதலிடத்தில் இருந்தது. ஆனையிறவு உப்பு உற்பத்தி இலங்கையில் நல்ல மதிப்பிலிருந்தது.

நாங்கள் எங்கட ஊரில இருந்த காலத்தில் உப்பு விலைக்கு வேண்டுவதில்லை. எனது அப்பா, அண்ணாக்கள், மாமா, சித்தப்பா எல்லோரும் உப்பளத்தில் வேலை செய்தவர்கள். கூடையடித்தல், கீப் வெட்டுதல், உப்புமால் வேய்தல்...என்று மாதச்சம்பளத்திற்கு மேலாக கனக்க சம்பளங்களும் வரும். விழாக்காலங்களில் விசேட படிகள். அது இன்னொரு வகை.

காலபோகத்தில் நெல் சிறப்பாக விளைந்ததனால் விவசாய நோக்கிலும் ஆனையிறவு கடல் நீரேரியாதலால் கடற்றொழில் வாய்ப்பும், சந்தை வசதியும் இருந்தமையால் கடற்றொழில் நோக்கிலும் இக்கிராமத்தில் மக்கள் குடியேறினர். விளாவோடைப் பகுதியில் தானியங்கள், மரக்கறிகள் நன்றாக விளைந்தன. தட்டுவன்கொட்டி மக்கள் அப்பகுதிகளில் மிளகாய் பயிர்செய்தனர். 'துரவு' வெட்டி நீர்ப்பட்டையால் தண்ணி இறைப்பார்கள். மிளகாய் பழங்களை கிளிகள் கொத்தாமல் பழைய மீன்பிடி வலைகளால் வேலியும் கூரையும் போட்டிருப்பார்கள். கத்திரித் தோட்டத்தில் ''வெருளிகள்'' விளங்கும்.

ஒரு ஊருக்குப் பெயர் வந்தமை தொடர்பாக பல ஐதீகங்கள் (MITH) இருக்கும். உமையாள்புரம் என்ற பெயர் வந்தமை தொடர்பாக அங்குள்ள பெரியவர்கள் இப்படிக் கூறுகின்றனர். அதாவது உமையாள்புரப் பாடசாலையின் மேற்குப் பக்கமுள்ள

சிற்றாறு எக்காலத்திலும் எவ்வளவு நீரைக்கொண்டு பாய்த்து வந்தாலும் A9 வீதிக்கு கிழக்கால உள்ள மதகில் அது எதுவித சத்தமும் இல்லாது பாய்வதால் ஊமையாறு என்றனர். அதனருகில் கிராம மக்கள் உமையம்மையையும் வைத்து வழிபட்டு வந்தனர். ஊமை யாறு பாய்கின்ற இடத்தினை உமை யாள் எழுந்தருளி அருள் செய்ததனால் ''உமையாள்புரம்'' என்றாயிற்று.

ஆரம்பத்தில் உமையாள்புரக் கிராமம் வடக்கே நாவற்கொட்டியானையும், கிழக்கே விளாவோடையும், தெற்கே கோரக்கன்கட்டு வீதியையும், மேற்கே புகையிரத வீதியையும் கொண்டு சிறு கிராமமாக விளங்கியது. தற்பொழுது சற்று விரிவடைந்து வடக்கில் நாவற்கொட்டியானையும், கிழக்கில் விளாவோடை ஆற்றையும், தெற்கில் பரந்தனையும், மேற்கில் குஞ்சுப் பரந்தனையும் எல்லையாகக் கொண்டுள்ளது. முன்பு ''எல்லைப்பாலை'' என்ற இடம் தற்போது ''புளியடி'' என்றுகுறிப்பிடப்படுகின்றது. ஒரு கிராமத்தில் கட்டாயம் இருக்க வேண்டிய

ஆலயம்

பாடசாலை

வாசிகசாலை

கிராம அபிவிருத்திச் சங்கம்

பலநோக்கு கூட்டுறவு கடை

என்ற அமைப்புக்கள் அன்றும் இருந்தன இன்றும் இருக்கின்றன.

ஆன்மீகத்தைப் பொறுத்த வரையில் நாட்டுப்புற வழிபாட்டுத் தலங்கள் பல இங்குண்டு. ஊமையாறு பாய்கின்ற இடத்தில் உமையம்மன் ஆலயமும் குறிஞ்சாத்தீவில் இருந்து கொண்டு வரப்பட்டு உமையம்மனுக்கு அருகில் கண்ணகை அம்மன் ஆலயமும் அமைந்திருக்கின்றன. இவ்வாலயங்களுக்கு மேற்கே புகையிரத வீதியைத் தாண்டி வைரவருக்கும் அருகில் வீரபத்திரர், விறுமர் போன்ற தெய்வங்களுக்கும் முன்பு கோயில்கள் இருந்தன. 1990ஆம் ஆண்டு இடப்பெயர்வுடன் அவை இல்லாது போய்விட்டன.

இவ்வாலயங்களில் உமையம்மன் ஆலயத்தினை பொன்னையா - கந்தையா மரபினரும் ஏனைய கோயில்களை காடைக்கந்தையரும் அவருடைய பிள்ளைகளும், மருமக்கள் என்போரும் இன்றுவரை பரிபாலித்து வருகின்றனர். இவற்றைவிட எங்கட ஊரில தமது குல தெய்வங்களாக வீட்டின் வளவில் வைத்து வழிபடும் சிறு தெய்வங்களும் அதிகம். இவற்றில் காளி, விறுமர், அன்னமார் முக்கியம் பெற்றனர். இந்து ஆலயங்களில் வருடப்பொங்கல் முக்கியம் பெற்றது. உமையம்மன் ஆலயத்தில் ஆவணிப்பொங்கல் சிறப்பு. காவடி, பாற்செம்பு, கற்பூரச்சட்டி என்று பக்தி பூர்வமான வழிபாடுகள் நடைபெறும். சந்தையடிக் கோவிலில் 'செடில்' குத்தி A9 வீதியில் காவடிகள் பவனி வரும். உண்மையில் ஒரு உணர்வு பூர்வமான வழிபாடாக அவையிருக்கும். இப்ப எல்லாமே மாறிப்போச்சு....'சவம்' கொண்டுபோறதுக்கும் 'சாமியை' கொண்டுபோறதுக்கும் 'வாகனம்' வேணும்.

எனக்கு காவடி ஆடின அனுபவம்

இல்லை. ஆனால் ஆடுபவர்களைப் பார்ப்பதில் நல்ல ஆர்வம் இருந்தது. என்னுடைய மூத்த அண்ணர் நன்றாக காவடி ஆடுவார். அவருடைய ஆட்டத்திற்கு திருச்செல்வம் அண்ணராலதான் ''செடில்'' பிடிக்க முடியும். அப்படியொரு வேகம். எனது வயதினை ஒட்டிய கூத்தாடிகள் எல்லோரும் வீட்டில் காவடி கட்டி ஆடுறனாங்கள். அதனைப் பார்க்கவும் ஒரு கூட்டம் இருந்தது. கால்சட்டைக்கு மேல சேட்டை மடிச்சுக்கட்டிப்போட்டு ஆடுவம்.

அம்மன் கோயில் திருவிழா என்றால் இரவு ஒரு விசேடம் இருக்கும். பத்து மணிக்குப் பூசைகள் எல்லாம் முடியும் அதற்குப் பிறகு கூத்து, நாடகம், பாட்டுக்கச்சேரி என்று ஏதேனும் ஒரு நிகழ்ச்சி கட்டாயம் நடக்கும். 90ஆம் ஆண்டு நாங்கள் இடம் பெயர்ந்து செல்லும் மட்டும் வருடாவருடம் நடந்தது. என்னுடைய வாழ்க்கையில் உந்தக்கலைகள் எல்லாவற்றையும் நான் கண்டு களிச்சது ஊரில இருக்கேக்கதான்.

பவளக்கொடி,
காத்தான்கூத்து,
சத்தியவான் சாவித்திரி,
வெளிக்கிடடி விசுவமடு,
அரிச்சந்திர மயானகாண்டம்,

இவைகள் எல்லாவற்றையும் மூன்று நான்கு தடவை பார்த்திருப்பன். காத்தான்கூத்து 'தட்டுவன்கொட்டி ஆட்கள்' சிறப்பாக ஆடுவார்கள். மற்ற நாடகங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்துதான் பிடிப்பார்கள். எங்கட ஊரிலும் திருச்செல்வம் என்று ஒரு அண்ணாவி இருந்தவர். பெரிதாக இல்லாவிட்டாலும் ஓரளவு நாடகங்கள் பழக்குவார். அவருடைய நெறியாள்கையில் ''சீதாகலியாணம்'' என்ற ஒரு நாடகத்தில் நானும் நடிச்சனான்.

அயலூரில செவ்வந்தி மகாலிங்கம் என்று ஒரு கவிஞர் இருந்தவர். அவரும் நல்ல கலைஞர். அவருடைய தலமையில் ''நேற்று இன்று நாளை'' என்ற ஒரு நாடகத்தில் நான் நடிச்சனான். அதில நடிச்ச பதினாறு பேரும் எங்கட உறவுகள். உலக தொழிலாளர் தினத்தில மேடையேறினாங்கள். கோயில்ப் பாட்டுக்கச்சேரி எண்டால் இன்னும் கொண்டாட்டம். தட்டுவன் கொட்டி கண்ணகியம்மன், குறிஞ்சாத்தீவு கண்ணகியம்மன் ஆலயங்களில கச்சேரி நடந்தால் நாங்கள் வண்டில் கட்டிப் போறனாங்கள்.

அந்த நாளில அருணா கோஸ்ட்டி, கண்ணன் கோஸ்ட்டி. ராஜன் கோஸ்ட்டி என்று நிறைய கச்சேரி செய்ற ஆட்கள் இருந்தவை. ''அருணாகோஸ்ட்டி'' எங்களுக்கு நல்லாய்ப்பிடிக்கும். அதில சுகுமாரும், நவநீதனும் பாடினால் வாயப்பிழந்தபடி முன்னுக்கு இருப்பம். காத்தான் கூத்து விடிய விடிய நடக்கும். நித்திரை வராது. நாடகத்தில ஏ.ஏ வைரமுத்துவின் அரிச்சந்திர மயானகாண்டம் மிகவும் சிறப்பு. அப்படி நடிப்பு அவையள போல குரல் வளத்தோட பாடி நடிக்ககூடிய ஆட்கள் இப்ப இல்லை. அரிச்சந்திரனுக்கு அவர்தான் நடிப்பார். மனுசன் மேடையில

பாடினால் ஏழெட்டு ஊருக்கு கேட்கும். நாடகத்துறையில தனக்கென்று ஒரு முத்திரை பதித்த கலைஞர் அவர்.

திருவிழா விடியும் வரை நடக்கும். ஆறு மணிக்கு முதல் எல்லா சனங்களும் போய் விடும். அதுக்குப் பிறகுதான் எங்கடை வேட்டை ஆரம்பமாகும். ....என்ன தெரியுமோ? இரவு சனங்கள் இருந்த கிடந்த இடங்களிலெல்லாம் எங்கட 'மண்ணாய்வுப்பணி' இடம் பெறும். அதாவது குந்தி இருந்து மிக அவதானமாக மண்ணை கிண்டி இரவு சனங்கள் தவறவிட்ட சில்லறை காசு, கச்சான்கொட்டை, சோளப்பொரி என்பவற்றை எடுக்கிறது. மதியம் வரை சில வேளை பணி தொடரும், என்னோட அன்ரன், உதயன், வசந்தன், மோகன், குட்டியன், ஜோசப் எண்டு கன ஆட்கள். சில வேளைகளில் சங்கிலி, காப்பு, கால்ச்சங்கிலி, மோதிரம், மணிக்கூடு கூட அகப்படும்.

எங்கட வீட்டில பிரதான தொழில் கமமும் மாடும்தான். ஆரம்பத்தில சின்னத்தம்பி மெக்கானியருக்கு மாடு மேய்ச்சனாங்கள். நான், ஐயா, அண்ணா மூன்று பேரும் வேலை செய்வம். 77ஆம் ஆண்டு 150 ரூபாதான் மாதச்சம்பளம். ஒன்பது பேர் சகோதரர்கள். எல்லாமாக பதினொரு பேர். சாப்பாட்டிற்கு கூட சரியான கஸ்ரம். கோமாதா தான் குல தெய்வம். பால், நெய், மோர், எரு என்று சிறுவருமானம் கிடைக்கும்.இடைக்கிடை கட்டாக்காலி மாடுகளை தடம், பொறி என்று வைத்து பிடித்து விப்பதும் உண்டு. படிக்கிற காலங்கள் எல்லாம் வீணாய்ப்போனதற்கு மாடுகளும் ஒரு காரணம்தான்.

எண்பதுகளில எங்களிட்ட நூறு மாடுகள் இருந்தன. சின்னண்ணாவும் நானும்தான் மாடு மேய்க்க வேணும். நான் இடைக்கிட பள்ளிக்கூடம் போறதால மாலை ''டியூட்டி'' எனக்கு. ஐயா 11.30 மணிக்கு பள்ளிக்கூட வாசல்ல வந்து நிற்பார். பிள்ளைக்கு மதிய உணவு கொண்டு வந்தவர் என்று நினைத்துப் போட வேண்டாம். மதியம் 12.30 மணிக்கு நான் டியூட்டி மாறவேணும். அதிபரின் அனுமதியுடன் கண்கள் கலங்க புத்தகங்களையும் தூக்கிக் கொண்டு போய்விடுவன்.

சின்னன்ல படிக்க எனக்கு நல்ல ஆசை. ஆனால் வசதியில்லை. ஊரில படிக்கேக்க மூன்றாம் வகுப்பிலும் ஐந்தாம் வகுப்பிலும் இரண்டு முறை படித்திருக்கின்றேன். கடைசியாக ஐந்தாம் வகுப்பு படிக்கேக்க அஞ்சலா, ரதா, ஜானகி, உதயகுமார், இரவிச்சந்திரன், சண்முகராசா என்று நண்பர்கள் ஏழு பேரும்தான். எங்கட வகுப்பில மலர் ரீச்சர் வகுப்பாசிரியர். அதிபர் திருவாளர் வே.முருகுப்பிள்ளை. வகுப்பில அஞ்சலா எனக்கு நல்ல நண்பி. நான் பாடசாலையை விட்டு இடையில போனாலும் எனக்காக ''நோட்ஸ்'' எல்லாம் எழுதுவாள்.

இனி எங்கட பள்ளிக்கூடம் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். 1954ஆம் ஆண்டு எமது கிராமம் உருவாக்கப்பட்ட பொழுது மிக்ககுறைவான மக்களே வாழ்ந்தார்கள். எனினும் அங்குள்ள வறிய மாணவர்களுக்கு கல்வி வழங்க வேண்டிய பொறுப்பு கிராமத்து பெரியார்களுக்குரியது. பாடசாலையை அமைப்பதில் பலர் பாடுபட்டனர்.

அவர்களில் ''யப்பான் வேலுப்பிள்ளை'' என்று செல்லமாக அழைக்கப்படும் செல்லையா வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில் 1959ஆம் ஆண்டு இப்பிரதேசத்தில் ஒரு பாடசாலை உதயமாகியது. முதல் ஆசிரியர்களாக திரு.செ.பொன்னம்பலம் அவர்களும் வேலுப்பிள்ளையரின் மகள் யோகம்மாவும் நியமிக்கப்பட்டனர்.

இந்த காலப்பகுதியில் பாடசாலைகள் வட்டார முறையில் அமைந்திருந்தன. பின்னர்தான் கொத்தணிமுறையும் இப்ப உள்ள கோட்ட முறையும் வந்தது. உமையாள்புரம் GTMS பரந்தன் வட்டாரப் பாடசாலைகளில் இணைக்கப்பட்டது. ஏற்கனவே கிராம மக்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்பட்டபொழுது பாடசாலைக்கு எனவும் ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. கீற்றுக்கொட்டகையில் இருந்த பாடசாலை திருவாளர் பொன்னம்பலம், வேலுப்பிள்ளை போன்றவர்களின் முயற்சியால 1962 இல் அரசாங்கத்தால் பொறுப்பேற்க்கப்பட்டது.

அரசாங்கம் பாடசாலையை பொறுப்பேற்றதும் 60X 20அடி கட்டடம் ஒன்று கிடைத்தது. அதனை அதிபர் பொன்னம்பலம் அவர்கள் முன்னின்று கட்டிமுடித்தார். ஆரம்பத்தில் 15 - 25 வரையான மாணவர்கள் மட்டும் இருந்தனர். எங்கட வீட்டில எல்லோரும் அங்கதான் படிச்சனாங்கள். தரம் ஐந்து மட்டும்தான்வகுப்புஇருந்தது. அங்குள்ள பெரும்பாலான மாணவர்களின் கல்வி ஐந்தாம் வகுப்புடன் முடிந்தது. அதுதான் அவையின்ர உயர்கல்வி. ஓரளவு வசதியான பிள்ளைகள் பளை, பரந்தன், கிளிநொச்சி நகரங்களில் சென்று படித்தார்கள். அதுவும் ஆகக் குறைந்தது ஒன்பதாம் வகுப்புடன் முற்றுப்பெற்றது.ஊரைவிட்டு வெளியில் சென்று பளை, மீசாலை, சாவகச்சேரியில் படித்த ஒரு சிலர் O/L மட்டும் போய் இன்றும் சிலர்A/L வரை சென்று அதற்கு மேலும் படித்தார்கள். அவர்களில் நானும் ஒருவன் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன்.

என்னை கிராமத்திலிருந்து வெளியே இழுத்து பளை மத்திய மகா வித்தியாலயத்திலே இணைத்து என்னுடைய வாழ்க்கைக்கு ஒளியூட்டிய 'கடவுள் மனிதர்' அதிபர் திருவாளர் து.தர்மலிங்கம் என்பதை இப்பொழுதும் நன்றியுடன் நினைவுகூர்கின்றேன். படிப்பிலும் ஆர்வம். விளையாட்டுகளிலும் திறமையிருந்ததால் அந்தப் பாடசாலையில் நான் அறிமுகமாகிவிட்டேன். நிறைய வசதிகளும் செய்தார்கள். அப்பொழுது அங்கு அ.பொ. செல்லையா அவர்கள் அதிபராக இருந்தார். ஆனாலும் எனக்கு ஒரு பெரிய குறை. அப்பொழுது நான் ஆறாம் வகுப்பில் சேர்ந்தபொழுது 16 வயது. பெரிய அவமானமாக இருந்தது. பதினொராம் வகுப்பு மாணவர்களுடன் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டதை சகிக்கமுடியாமல் இருந்தது.

அதனால் பாடசாலையின் விதிமுறைகளுக்கு அமைய நான் 7ம் வகுப்பிலும் 9ம் வகுப்பிலும் படிக்க முடியவில்லை. அந்த கவலையும் ஆதங்கமும்தான். நான் O/L, A/L பரீட்சைகளில் ஒரே தடவையில்

சித்திபெற்று இன்று ஒரு பட்டதாரி ஆசிரியராக இருக்க முடிந்தது என்று நினைக்கின்றேன். எங்கட சூழல்தான் எங்களுக்கு ஊரில படிக்கிற விருப்பத்தை இல்லாமல் செய்து விட்டது என பளையில் படித்த காலத்தில் நான் உணர்ந்திருக்கின்றேன்.

சின்ன வயதில பாடசாலைக்கு போறதெண்டால் கொலை களத்திற்கு இழுத்துச்செல்வதாகத்தான் எல்லோரும் கருதினோம். ஐந்தாம் வகுப்பிற்கு பிறகு மேற்படிப்புக்கு வேறு பாடசாலைக்கு கூட்டிச் செல்லவோ படிப்பிக்கவோ அங்குள்ள பெற்றோருக்கும் விருப்பமில்லை. ஏனென்றால் குடும்பச் சுமைகளில் பாதியை நாங்கள்தான் பகிர்ந்து கொண்டோம். எனக்கு ஒன்றுவிட்ட வழியில் சகோதரர்கள் பலர் இருந்தனர். அவர்களுக்கு பள்ளிக்கூடம் போறதெண்டால் 'தூக்கு மேடை' என்றுதான் நினைப்பார்கள். பாடசாலைக்கு அனுப்புறதெண்டால் மிகப்பெரிய போராட்டம். பரந்தன் பாடசாலைக்கு அனுப்புவதற்காக எல்லோரும் கட்டாயப்படுத்தி 'தட்டிவானில்' ஏற்றி விடுவார்கள். பஸ் நிலையத்திலிருந்து 200 மீற்றரில் ஒரு பாலம் இருந்தது. அதில் ஒரு பள்ளமும் அப்பொழுது இருந்தது. அதில் வான்சற்று மெதுவாகப் பயணிக்கும். அப்பொழுது பின் பக்கமாக பாலத்துக்குள் குதித்து காடுகளுக்கு ஓடிவிடுவார்கள். பாய்ந்து ஓட முடியாத சிலர் பரந்தன் சந்தியில இறங்கி வலது பக்கமாக உள்ள புகையிரத வீதியால நடந்து பாடசாலை விடுகிற நேரம் வீடு வருவார்கள்.

எங்கட பாடசாலையை 1962ஆம் ஆண்டு பொன்னம்பலம் உபாத்தியார் பொறுப்பேற்றதன் பின்னர் யோகம்மா ரீச்சரின் முயற்சியாலும் அடிப்படைக்கல்வியாவது கிராமப் பிள்ளைகளுக்கு கிடைத்தது. எங்கட பாடசாலை பிரதான வீதிக்கு அருகில் இருந்ததால வெளியிடத்து அதிபர், ஆசிரியர்கள் மனம் கோணாமல் வந்து படிப்பித்தார்கள். இணைபாடவிதான செயற்பாடு ஒழுங்காக நடந்தது. பொன்னம்பலம் அவர்களுக்குப் பின்னர்

திரு.வ.சுப்பிரமணியம்

திரு.சி.அருளம்பலம்

திரு.து.தர்மலிங்கம்

திரு.வே.முருகுப்பிள்ளை

திரு.வே.திருக்கேதீஸ்வரன்

திரு.செ.சின்னராசா

திரு.ம.றோமியல்

திரு.செ.படிகலிங்கம்

திரு.சு.இராஜசிங்கம்

திருமதி.த.சண்முகநாதன்

முதலியோர் நிரந்தரமாகவும் பதில் அதிபர்களாகவும் கடமையாற்றி வந்தனர். தற்பொழுது திருவாளர் செ.அருளானந்தசிவம் என்றுமில்லாதவாறு முழு நேரமும் மிகத்துடிப்புடன் பாடசாலையை நிர்வாகம் செய்து வருகின்றார். 41 மாணவர்களும் 06 ஆசிரியர்களும் உள்ளனர். முருகுப்பிள்ளை அதிபரிடமும் மலர் ரீச்சரிடமும் நான் அதிகம் படித்திருக்கின்றேன். மலர் ரீச்சர் நிரந்தர நியமனம் இல்லாமல்தான் படிப்பித்தவர். ஆனால் மிகத்திறமையான கணித ரீச்சர்.

முருகுப்பிள்ளை அதிபராக இருக்கிற காலத்தில்தான் நாங்கள் இடம்பெயர்ந்து சென்றனாங்கள். 19.07.1990 .எங்கட கிராமத்தில நினைக்கவே பயங்கரமான நிகழ்வு அது. இடப்பெயர்வின் வலி என்ன என்று நாங்கள் அறிந்து கொண்ட முதல் அனுபவம். ஆனையிறவு முகாமில இருந்து கிளிநொச்சி இராணுவத்தினரை மீட்பதற்கு இராணுவம் படையெடுத்து வந்தது. கண்ணில பட்டதை பையில எடுத்துக்கொண்டு உயிர கையில பிடித்துக்கொண்டு ஓடித்தப்பினம். சிறுகச்சிறுக நாங்கள் தேடிவைத்திருந்த சொத்துக்கள், சுகங்கள் எல்லாவற்றையும் நாங்கள் முதன் முதலில் இழந்தது அந்த நாளில்தான். அந்த வருடம்தான் எனக்கு பல்கலைக்கழக அனுமதியும் கிடைத்தது.

ஊரைவிட்டு 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து போகேக்க விளாவோடையிலும், முரசுமோட்டையிலும் எங்கட ஊர்ச்சனங்கள் சிலதுகள் இறந்து போச்சுதுகள். கணபதி கிழவிக்கு புட்டுத்தீத்தின பொழுது மனுசி மூச்சுத்திணறி இறந்து போனதும் எனக்கு ஞாபகம் இருக்கு. உமையாள்புரத்தால இடம்பெயர்ந்து விளாவோடை சென்று அங்கிருந்து ஊரியானுக்குப் போய் அதால மூன்றாம் வாய்க்கால்ல கொஞ்ச நாள் இருந்து அதுக்குப் பிறகு திருவையாற்றில நானும் எனது குடும்பமும் நிலை பெற்று விட்டோம். அதற்குப்பிறகு 2008 வரை ஏராளம் இடப்பெயர்வுகள். அது எழுதி முடிக்கேலாத கதை. இப்பவும் எங்கட ஊருக்குப் போனால் பழசுகள் ஞாபகம் வரும்.

"சொர்க்கமே என்றாலும்...


நம்ம ஊரு போல வருமா.....'?' என்ற இசைஞானியின் சினிமா பாடல் வரிகளில் எத்தனை உண்மையிருக்கிறது



# நம்பிக்கை

**பாலசிங்கம் சசிகரன்**
**வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம்,**
**கண்டாவளை.**

*பாலை வனத்தில் ஒரு*
*நெடுந்தூர பயணம்.*
*இளைப்பாற*
*நிழல் தேடவும் முடியாது.*
*சாத்தானால் உனது பாதணிகள்*
*பறிக்கப்பட்டு*
*மென்மையான பாதங்கள்*
*சுடுமணலில் பட்டு*
*வெந்து கொப்பளிக்கவும்*
*உனது பயணம் தொடரட்டும்.*
*அந்த ஆண்டவனின்*
*திருவடிகளிலுள்ள*
*பாதரட்சைகளை வேண்டி............*



Regd. No.: PA.56 of 12-09-1972

# மு/விசுவமடு விவசாயிகள் ப.நோ.கூ. சங்கம் வ/து
# සී/ස.මු/විසුවමඩු ගොවිකරු විවිධ සේවා සමූපකාර සමිතිය
# Mu/Visuvamadu Farmers' M.P.C.S Ltd.

**முல்லை வீதி, விசுவமடு.**
**Mullai Road, Visuvamadu.**



**Nestlé**

தயாரிப்புக்களின்
கிளி-முல்லைத்தீவு மாவட்ட
ஏக விநியோகஸ்தர்கள்



# முரசுமோட்டை இளையோர் மன்றமும் புத்தொளி கலை இலக்கிய மன்றமும்

இலக்கியமன்ற வெளியீட்டுக்குழு

உலகம் நவீனத்துவத்தை நோக்கிய பார்வையுடன் நகர்ந்து செல்ல எத்தனிக்கின்றது. அது எமது சமூகம், கலை கலாச்சார, விழுமியங்களை சற்று உரசிப் பார்க்கிறது. ஆனால் புரையோடிப்போனவரலாறுகளிலிருந்து மீண்டுவிட முடியவில்லை இருந்தும் சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவைகளைமக்கள்பலர்உணர்ந்தார்கள். இதன்காரணமாக முரசுமோட்டை, ஊரியான், கோரக்கன்கட்டு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி வாழுகின்ற இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொண்டு சமூகப் பணியை ஆரம்பிக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு ''முரசுமோட்டை இளையோர் மன்றம்'' எனும் பெயருடன் 1.இலை, மறை காயாகவுள்ள கலைஞர்களை இனம் கண்டு நற்பிரைஜைகளாக உருவாக்குதல், 2.கலாசார சமூகத்தை உருவாக்குதல், 3.சமூகப் பணிகளில் ஈடுபடுதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மன்றம் திரு.ந.நிக்சன் அவர்களால் 20.03.2006ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர்களாக 16 ஆண்களும் 06 பெண்களுமாக 22 பேர் உறுப்புரிமை பெற்றிருந்தனர். இவர்கள் அனைவரும் புடம் போடப்பட்ட கலைஞர்களாக விளங்கியமை சிறப்பானது. அதன் பின்னர் 2008ம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வுகளும், இடைவெளிகளும் கலைஞர்களைப் பிரித்துவிடப்

என்கின்ற நம்பிக்கையுடன் 2010ம் ஆண்டு மீள்குடி அமர்த்தப்பட்டபின் கலைஞர்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும் என திரு.பாலசிங்கம், திரு.த.அமலதாஸ் (C.O) கண்டாவளை. ஆகியோரின் வேண்டுதலுக்கிணங்க 2012.07.03 ம் திகதி ''புத்தொளி கலை இலக்கிய மன்றம்'' என்கின்ற பெயர் மாற்றத்துடன், முன்னைய 15 உறுப்பினர்களும், தற்போததைய இளநிலை உறுப்பினர்களாக 30 பேருமாக மொத்தம் 45 அங்கத்தவர்களைக் கொண்டு தனது கலைப்பயணத்தை ஆற்றிவருகின்றது. தற்போதய தலைவராக திரு.ந.நிக்சன் அவர்களும், செயலாளராக திரு.ஆ.செல்வராஜ் அவர்களும். பொருளாளராக திரு.வ.சசிக்குமார் அவர்களும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கலைப்பயணத்தில்...........

முரசுமோட்டை இளையோர் மன்றம்

2006.03.20 தொடக்கம் தனது கலைப்பயணத்திற்கான ஒத்திகைகளை ஆரம்பித்து சமூக விழிப்புணர்வை

ஏற்படுத்தும் நோக்குடன் 05மாவட்டங்களில் இயங்கி வருகின்ற கலை மன்றங்களுக்கிடையிலான சமூக நாடகப் போட்டியில் 20.04.2006ல் முரசுமோட்டை இளையோர் மன்ற இயக்குனர் திரு.ந.நிக்சன் அவர்களின் நெறியாள்கையில் உருவான ''திருந்தாத உள்ளங்கள்'' என்ற சமூக நாடகம் முதன்மை பெற்று, சிறந்த நடிகர் சிறந்த பின்னனி இசை, சிறந்த இயக்குனர் என்ற விருதுகளையும் பெற்றது. தொடர்ந்து ''திருந்தாத உள்ளங்கள்'' என்ற சமூக நாடகம் கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிராமங்களில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டதுடன் பலரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டது.

புத்தொளி கலை இலக்கிய மன்றம்

03.07.2012ல் புதுப்பிக்கப்பட்டு இதே ஆண்டு கண்டாவளைப்பிரதேசகலாச்சார விழாவில் ''மனமாற்றம்'' என்ற சமூகநாடகம் மேடையேற்றப்பட்டது. 10ஆம் மாதம் பிரதேச செயலக ஒளி விழாவில் ''கிறிஸ்து பிறப்பு'' என்ற வரலாற்று சிறுவர் நாடகம் நிகழ்த்தப்பட்டது. 12ம் மாதம் பரந்தன் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒளிவிழாவின்போது ''கிறிஸ்து பிறப்பு'' சிறுவரங் நாடகம் மேடையேற்றப்பட்டது.01.01.2013ல் ''புத்தாண்டு வரவேற்பு விழா'' கோரக்கன்கட்டு பொதுநோக்கு மண்டபத்தில் நடத்தப்பட்டது. இதே மாதம் 20ல் (மண்மேடு) சமூகப் பணி நடைபெற்றது.

10ஆம் மாதம் விழிப்புணர்வு வீதி நாடகம்

UNHCR நிதியதவியுடன் பிரதேச கலாச்சார, மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் இணைந்து 14.10.2013 சம்புக்குளம், 15/10 கோரக்கன்கட்டு, 17/10 தருமபுரம், 18/10 பரந்தன், 21/10 நாவல்நகர், 24/10 கல்லாறு ஆகிய கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டது. 11.11.2013 கண்டாவளை பிரதேச கலாசார விழாவில் சமூக நாடகம் மேடையேற்றி சிறப்பிக்கப்பட்டது.

27.11.2013 கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையால் நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் மற்றும் கலைத்திறன் வெளிப்பாட்டுப் போட்டியில் சமூக நாடகம், பட்டிமன்றம், கவியரங்கம், வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகளில் பங்குபற்றி தகுதி பெற்றது. நவஜீவனம் இல்லத்தில் ''கிறிஸ்து பிறப்பு'' சிறுவர் நாடகம் மேடையேற்றப்பட்டது.

23.11.2013இல் பிரதேச செயலக, ஒளிவிழாவில் ''கிறிஸ்து பிறப்பின் அவதாரம்'' சிறுவர் நாடகம் நிகழ்த்தப்பட்டு சிறப்பிக்கப்பட்டது. 19/06 மன்றம் பதிவு செய்யப்பட்டது. 05/07இல் பாரம்பரிய கலைகளான கூத்து நாடகம் கரகம் சார் பயிற்சிப்பட்டறை வடமாகாண நிதியுதவியுடன் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் நடைபெற்ற இரு நாள் பயிற்சி பட்டறையில் எமது மன்றக் கலைஞர்கள் பயிற்சி பெற்றிருந்தனர்.

17/07 ஆடிப்பிறப்பு விழாவை முன்னிட்டு பாரம்பரிய

விளையாட்டுக்களான கிளித்தட்டு, கபடி, தலையணைச்சமர், சாக்கோட்டம் ஆகிய போட்டிகள் நடாத்தப்பட்டு விழா 18ஆம் திகதி ஆடியில் சிறப்பாக கொண்டாடப்பட்டதுடன் மன்றப் பெயர்ப்பலகையும் காட்சிப்படுத்தப்பட்டது. இவை அச்சுப்பதிவுக்கு செல்லும் வரையான காலப்பகுதியின் பதிவுகள். தொடர்ந்தும் புத்தொளி கலை இலக்கிய மன்றம் தனது கலைப்பணியை மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வருகிறது இங்கு குறிப்பிடத்தக்கது.

நிறைவு.




# 'இன்னும் ஏன் தாமதம்'

ஆ.செல்வராஜ்,
கோரக்கன்கட்டு.பரந்தன்.

பட்ட துன்பம் போதும் என்று
நட்டாங்காய் படுத்திருந்தேன்
ஊர்ச்சோலி வேண்டாம்.....

உறவுகளை இழந்ததனால்
ஓர் படி மேலே சென்று
எதையாவது பேச வேண்டும்
என்றுதான் நினைத்தாலும்
பேசத்தான் முடியவில்லை.....



ஆனாலும் ஊர் ஊராய்
மக்களின் காணி பறிப்பு
ஆங்காங்கே ஆர்ப்பாட்டம்
தெருக்களிலே கற்பழிப்பு
சந்தியிலே வாள்வெட்டு..........

கண்ட கண்ட இடமெல்லாம்
காடையரின் கொள்ளை அடிப்பு
பக்கத்து வீட்டினிலும்
கள்ளச் சாராயச் சண்டை
காண்பார் யாரும் இல்லை........

இத்தனையும் நடக்கையிலே
தலைக்கறுப்புக் காட்டாமல்

சாப்பாடு போட்டுவிட்டு
நன்றாய்த்தான் உறங்கி விட்டேன்
ஒய்யாரமாய் மெத்தையிலே.........

மீண்டும் சொல்கிறேன்
வேண்டாத சம்பவங்கள்
ஊரெங்கும் நடக்கிறது
நடப்பது நடக்கட்டும்
நான் ஏன் தலை காட்ட.........

ஆகா........வந்துவிட்டான்......வந்துவிட்டான்
என் வீட்டுப் படலையிலே
ஆ..........என்றேன் ஓ...........என்றேன்
அத்தனையும் நடந்த பின்னே
விழித்தெழுந்து ஓலமிட்டேன்........

சுற்றம் முற்றம் சுழன்று பார்த்தேன்
ஓடி வர எவருமே இல்லை
ஓடினேன் கதவண்டையில்
நீ யார் ?என்றான்
அக்கனமே மௌனித்தேன்
ஏன் இந்த நிலமை என்று
எனக்குள்ளே தாழ்வு கொண்டேன்
ஓர் நிமிடம் தலை குனிந்து
மனம் வெதும்பி
நிமிர்ந்து பார்த்தேன்..............

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து
மனிதனைக் கடிக்கு முன்பே
ஆட்டுக்கடியுடனே கதை

இந் நிலை என் வீட்டுப் படலையிலும்
வந்திருக்க வாய்ப்பில்லை...........

அமைதியாய் இருந்நததனால்
என் தவறை உணர்ந்தேன்
விழித்துக் கொண்டேன்
மானமுள்ள மனிதனாய் வாழ
இன்னுமேன் தாமதம்.........

# "பூரணமான வாழ்க்கையை அமைத்துக்கொள்வோம்"

ந.நிக்சன்
2 ஆம் கட்டை, கோரக்கன்கட்டு.

ஒருவர் பூமியில் பிறந்து படிமுறை வளர்ச்சியை அடைகின்றார். அவருடைய வளர்ச்சி காலங்களில் கல்வி, கலை, விளையாட்டு, பேச்சு, எழுத்து, பாடல் இன்னும் அவரிடம் உள்ள தனித்துவமான ஆற்றல்களை உணர்ந்து கொண்டு செயல்படுவதே முழுமையான வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு அத்தியாவாசியமானது என்ற கருத்தை பல அறிஞர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். தனது சொந்த இலக்கை கண்டறிவதற்காக உள்முகமான பயணத்தை மேற்கொள்வதும் தேவையான நிபுணத்துவத்தையும், திறன்களையும் விருத்தி செய்து கொள்ளுதல் மூலமே இந்த நிறைவை உணர்ந்து கொள்ள முடியும். ஒரு கலைஞன் அல்லது கல்வித்துறையில் ஈடுபாடுடைய ஒருவன் வர்த்தக துறையோடு தொடர்பு படும்போது அதன் நிறைவை பூரணப்படுத்த முடியாமல் போவதற்கான நிகழ்தகவு காணப்படுகிறது.

இங்கு "ஆபிரகாம் மாஸ்லோ" எனும் உளவியலாளர் மக்களுடைய மிக உயர்ந்த மட்டத்திலான தேவை சுய திறனில் நிறைவை அடைவதே என கூறுகிறார். தனது எதிர்கால வாழ்க்கையில் ஈடுபாடு அக்கறை கொள்வதன் மூலம் சுயதிருப்தி, சுயகௌரவம், சுயநிறைவு என்பவற்றிற்கான தேடலை சாத்தியமாக்கக் கூடிய செயற்பாடுகளை ஒருவர் விளங்கிக் கொள்கிறார். இது ஒரு மனிதன் தன்னைப் பற்றிய சுய எண்ணக்கருவை, தன்னம்பிக்கையை விருத்தி செய்து கொள்வதற்கு உதவுகிறது. இவ்வகையான ஒரு தேடல் வெற்றிகரமான ஒரு வாழ்க்கைக்கு இட்டுச் செல்கிறது. நாம் பலரைப் பார்க்கிறோம் அவர்கள் வாழ்க்கையை ஒரு சவாலாக எடுத்துக் கொள்ளாது தமது எதிர் மறையான சிந்தனைக்குள்ளேயே தமது கடந்த கால வாழ்க்கையின் துயரம், அச்சம், கோபம் என்பவற்றுக்குள் அழிந்து திருப்தியற்ற ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஒருவர் வெவ்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளை அவருடைய அனுபவமாகக் கொள்ளும் போது அவ்வனுபவங்கள் அவரில் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ தாக்கங்களை ஏற்படுத்துகிறது. அதுவே மறு புறமாக அவர்களது ஆளுமையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இந்த அனுபவங்களின் அடிப்படையிலேயே மக்கள் தங்கள் ஆளுமையை, சுய எண்ணக்கருவை, சுய விழிப்புணர்வை விருத்தி செய்து கொள்கின்றனர். தான் எதுவாக இருக்க

வேண்டும் என்பதற்கும், எதுவாக இருக்கிறார்என்பதற்கும்இடையேஉள்ள முரண்பாடு அதிகரிக்கும் போது ஒரு தனி ஆள் மன அழுத்தத்துக்கு உள்ளாகிறார். தன்னைப்பற்றிய சாதகமான அல்லது நேரான மனப்பாங்கை கொண்டிருக்கும் ஒருவர் தன்னைப் பற்றியும் பிறரைப் பற்றியும்சாதகமான விதத்தில் நோக்குவதுடன் சாதகமான நடத்தையையும் வெளிக்காட்டுவார். பிரதிபலனாக இதுவே வெற்றிகரமான வாழ்க்கையை முன்னெடுக்கச் செய்யும். மறுதலையாக எதிர்மறையான மனப்பாங்குகளைக் கொண்டிருப்போர் தம்மையும் பிறரையும் பற்றி எதிர்ம றையாகவே நோக்குவர் என்பதுடன் இது எதிர்மறையான நடத்தைகளையும் விருத்தி செய்து தோல்விகளையும் ஏற்படுத்தும்.

ஒருவருடைய ஆளுமை என்று கூறும்போது உடல், உள, அறிவு, ஆன்மீக அம்சங்களை உள்ளடக்குவதுடன் ஒருவரது தகுதிகள் அனுபவங்களையும் உள்ளடக்குகிறது. ஒவ்வொரு தனியாளும் தனித்துவமான ஆளுமையை கொண்டிருப்பர். சுய பண்புகள், பரம்பரைசூழல் காரணிகள் ஆகியவை ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும். விரைவாகவோ, தாமதமாகவோ ஒவ்வொருவரும் ''தான் யார்'' என்பதைக் கண்டறியவும் வாழ்க்கையின் உண்மை யான அர்த்தத்தை கண்டறியவும் முற்படுகின்றனர்.

''கார்ஸ் யுங்'' என்பவர் ஒவ்வொருவரும் வாழ்க்கையின் அர்த்தத்தை விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும், சுய சாதனை என்பது ஒருவரது தகுதிகளை நிறைவு செய்தலே எனவும் கூறுகிறார். தனித் திறமைகளை விருத்தி செய்தல் ஒருவரது ஆளுமையின் வெளிப்படையான, மறைந்துள்ள பிரதானமாக பிரக்ஞைபூர்வமான, பிரக்ஞையற்ற கூறுகளை ஒத்திசைவாக ஒருங்கிணைத்தல் ஆகும் எனவும் இது அவரது வாழ்க்கையின் முக்கியமான செயலொழுக்கம் எனவும் கூறுகிறார். இது தன்னை அறிதலுக்கான பயணத்தின் ஒரு பகுதியாகும்.

ஒருவர் வாழ்க்கையை சுய கண்டறிதலுக்கான பயணமாக ஏற்றுக்கொள்ளும் போது அது வாழ்வின் இருண்ட பக்கங்களுக்கு சவால் விடுப்பதாகவும் சுய திருப்திக்கு வழி வகுப்பதாகவும் இவற்றின் விளைவாக சுய கௌரவத்தையும், சுயநிறைவையும் ஏற்படுத்துவதாகவும் அமையும். எனவே ஒவ்வொருவரிடமும் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணர்ந்து பிறர் நலன்களுக்காகவும், சமூக வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகவும் ''கலை ஊடாக மனித மாண்பை வளர்த்து சமூகத்தையும் பேணிப்பாதுகாப்போம்'' இதுவே முக்கியமாக சுய நிறைவும் வெற்றிகரமான வாழ்க்கையை முன்னெடுப்பதாகவும் அமையும்.

# சமாதானம்

ஜ.ஜெனார்த்தனி.
கிளி/முருகானந்தா கல்லூரி.

ஆசிய நாட்டின் அழகிய தீவில்
முப்பது ஆண்டுகள் மூண்ட போரில்
கண்டது என்ன? கிடைத்தது என்ன?
பால் மணம் மாறாப்பச்சிளம் பிஞ்சுகள்
பசியால் மடிந்ததும் பாரினிற் சிதைந்ததும்

அவயங்களை இழந்து அங்கவீனமானதும்
வீதி வீதியாய் வீழ்ந்து மடிந்ததும்
பெற்றோரை இழந்த பிள்ளைகளும்
பிள்ளையை இழந்த பெற்றோரும்

கணவனை இழந்த மனைவியும்
மனைவியை இழந்த கணவனும்
பரம்பரை பரம்பரையாய் தேடிய சொத்தும்
கும்பிட்ட கோயிலும் குடியிருந்த வீடும்
அள்ளித் தின்று ஆடி விளையாடிய பூமியும்

பண்புடன் வளர்த்து பட்டங்கள் தந்த
பாடசாலை வளாகங்களையும் இழந்தோம்! இழந்தோம்!
அந்தோ!பரிதாபம், அகதிகளாய் அலைந்தோம் அலைந்தோம்
சாந்தி சமாதானம் சத்திய வாழ்க்கையினை பேணாமையினால்
நம்மவர் கண்ட அவலங்கள் கோடி கோடி கோடானகோடி

போதும் போதும் போரில் வலிகளை சுமந்தது போதும்
போக்கிரித் தனங்கள் யாவும் களைந்து
போவோம் புது யுகம் காண
ஒன்றே குலம் ஒருவனே தேவன்
ஒன்றே அரசு
ஒரு குடை வாழ்வு.

இதுவே எங்கள் தாரக மந்திரம்
மொழியும் மதமும் முரண்பாடல்ல.
முட்கம்பி வேலிகள் தேவையுமல்ல.
மதிப்போம் மனித மாண்பை
விரிப்போம் அன்புக் கரத்தை

நாட்டின் சமாதானத்தை பேண
சாந்தி சமாதானம் சத்திய வாழ்வாகும்.
பாகப்பிரிவினைகள் கருத்து முரண்பாடுகள்
கனவிலும் தோற்றாமல் காத்திட வேண்டும்
அடிப்படை உரிமைகள் அனைவர்க்கும் வேண்டும்

கல்வி கலாசாரம் காத்திட வேண்டும்.
பெற்றோரை என்றும் மதித்திட வேண்டும்
கற்றதை கற்றாங்கு ஒழுகுதல் வேண்டும்
உண்மையை என்றும் உரைத்திட வேண்டும்.
வன்முறையை எங்கும் ஒழித்திட வேண்டும்.

நாட்டில் பொருளாதாரம் மிளிர்ந்திட வேண்டும்.
அன்பால் அனைவரையும் அணைத்திடல் வேண்டும்.

ஒப்பிலா உயிர்களை ஓம்பிடல் வேண்டும்.

சத்தியம் எவர்க்கினி சமாதானம் வேண்டும்.

நித்தமும் இங்கினி நின்மதியே வேண்டும்.

மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்.

மறந்தும் பொய்மை உரைக்கவே வேண்டாம்.

சாந்தி சமாதானம் சத்தியம் என்றிங்கு

சஞ்சலம் இன்றி அனைவரும் வாழ - எமக்கு

சமாதானம்! சமாதானம்! சமாதானமே வேண்டும்!

(2014 ஆம் ஆண்டின் தேசிய கலை இலக்கிய போட்டியில்
பிரதேச மட்டத்தில் முதலிடம் பெற்றது)



# வீட்டுத் தோட்டமும் வாழ்வின் எழுச்சியும்

**திரு.கா.சுதாகரன்,**

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்,

பரந்தன்.

உலகளாவிய ரீதியில் எழுந்துள்ள முக்கிய பிரச்சினை, வளர்ந்து வரும் சனத்தொகைக்கேற்ப உணவை உற்பத்தி செய்து கொள்ள முடியாதிருப்பதாகும். எமக்கான உணவினை நாமே உற்பத்தி செய்ய வேண்டிய காலம் நம் முன்பே வந்துகொண்டிருக்கின்றது. அது போன்று விவசாய நிலங்கள் குறைவடைந்து வருவதும், விவசாயிகள் வேறு தொழில் நாடிச்செல்வதும் உணவு உற்பத்தியை கேள்விக்குறியாக்கி வருகின்றது.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
- மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்''

எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய உழுதுண்ண வேண்டிய காலத்தின் பிடிக்குள் நாம் உள்ளோம். இதற்கு ஒரு வழி அதுவும் தனி வழி ''வீட்டுத் தோட்டம்'' மட்டுமேயாகும். இதனை முன்னிறுத்தியே இலங்கை அரசாங்கம் ''வாழ்வின் எழுச்சி'' (திவிநெகும) திட்டத்தினை நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப் படுத்தி வருவதுடன் வாழ்வின் எழுச்சி திணைக்களத்தினையும் உருவாக்கியுள்ளது.

வீட்டுத் தோட்டம் என்பது வளவில் எமக்கு கிடைக்கக் கூடிய நிலப்பரப்பு இடைவெளியை சிறந்த திட்டமிடலோடு குடும்பம் ஒன்றுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்வதும் மீதமிருந்தால் உற்றார், உறவினர், அயலவருக்கு கொடுப்பதுமாகும். இவ்வாறு ஒருவர் தனக்கும் தனது குடும்பம் சார்ந்தும் வீட்டுத் தோட்டத்தினை செய்ய முயற்சி எடுத்தால் விலை மதிக்கவே முடியாத உயிர்களைக் கொல்லும் பட்டினிச் சாவை விரட்டியடிக்கலாம். கூட்டாகச் சேர்ந்து ஒற்றுமையை விதைத்தால் தேச அபிவிருத்தியினை நாம் அடைந்து விட முடியும்.

தனியொரு மனிதனாக ஒவ்வொருவரும் உணவு உற்பத்தியில் ஈடுபட்டு தான் உண்டது போக மீதியை ஏனையோருக்கும் பகிர்ந்தளிக்கும் போது வையகத்தில் பட்டினி, பஞ்சம் என்பன பஞ்சாய் பறந்து போகும். என்பது மட்டுமன்றி,

''தனியொரு மனிதனுக்கு
உணவில்லையெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்''

என்று முழங்கிய கவிஞன் பாரதியை அழைத்து வந்து செயற்பாட்டிலும் காட்டிவிட முடியும்.

இன்று அதிகளவில் செய்கை பண்ணப்படும் தோட்டங்களில் பூச்சி, பீடைகள் மற்றும் நோய்கள் பரவுவதற்கு வாய்ப்பாகவுள்ளது. அதனை கட்டுப்படுத்த கிருமி நாசினிகளை

அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இதனால் மண்ணும் நீரும் சூழலும் மாசுபடுகின்றது. ஆனால் வீட்டுத்தோட்டம் மாசடைந்த சூழலில் இருந்து எம்மை பாதுகாக்க கூடியது. எமக்குத் தேவையான மரக்கறி வகைகளையும், பழ வகைகளையும், சுத்தமான நஞ்சற்றதாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.

சிறிய இடத்திலேயே எமது உணவில் அன்றாடம் சேர்த்துக்கொள்ள வேண்டிய கீரைவகைகளான வல்லாரை, முருங்கை, பொன்னாங்கானி, பசளி, முளைக்கீரை, கங்குன், அகத்தி போன்றவற்றையும் மரக்கறி வகைகளான பூசனி, பாகற்காய், புடலங்காய், மரவள்ளி, இராசவள்ளி, கத்தரி, மிளகாய், தக்காளி, வெண்டி, என்பவற்றையும் பழ வகைகளான வாழை, பப்பாசி, கொய்யா, மாதுளை, மா, விளாம்பழம் என்பவற்றையும் திட்டமிட்டு செய்கை பண்ணுவோமாக இருந்தால் பசி ,பிணி ஏற்படாது எல்லோரும் சுகதேகிகளாக வாழலாம்.

நஞ்சில்லாத உணவினை உற்பத்தி செய்யும் களமாக வீட்டுத் தோட்டம் அமைவது மட்டுமன்றி நாள்முழுவதும் வேலை செய்து களைப்படைந்து வீட்டுக்கு வந்து மனதை மீள்கட்டியமைக்கவும், புத்துணர்ச்சியளிக்கவும்வீட்டுத்தோட்டம் உதவுகின்றது. மன உளைவு, உளைச்சல் என்பவற்றிலிருந்து விடுபடும் இடமாகவும் வீட்டுத்தோட்டம் அமைகின்றது. மனதிற்குபுத்துணர்ச்சியை பெறுவதற்கு தாவரவியல் பூங்காவை நாடுவதனை விடுத்து வீட்டுத் தோட்டத்தினை தாவரவியல் பூங்காவாக மாற்றினால் நிறைவான உணவினை பெற்றுக்கொள்வதுடன் உல்லாசமாக குடும்பமே மகிழ்ச்சியில் திளைக்க வீட்டுத்தோட்டம் நிலைகளனாகின்றது.

''நோயற்ற வாழ்வே

குறைவற்ற செல்வம்''

என்பதற்கிணங்க நோய்கள் இல்லாத மனிதனாக நாம் வாழ வேண்டுமெனின் எமக்கான உணவினை நாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். நாம் வாழுகின்ற சூழலின் அபிவிருத்தியும், பாதுகாப்பும் எமது கையிலேயே உள்ளது. வீட்டுத்தோட்டம் எனும் சிறு துளி, வீடுகளனைத்தையும் இணைக்கும் உறவுப்பாலமாகும்.

இந்த வகையில் அரசு நடைமுறைப்படுத்தும் வாழ்வின் எழுச்சித்திட்டம்மூலம்மனையலகுகளில் வீட்டுத்தோட்டத்தினை செய்து கொள்ள நாம் திடசங்கற்பம் கொள்ள வேண்டும். ''வாழ்வின் எழுச்சி'' நோக்குடன் அனைவரும் வீறு நடைகொள்வோம். அதுவே தேசஅபிவிருத்திக்கான அசைக்க முடியாத அத்திவாரமாகும்.

''மாறுபாடு இல்லாத உண்டி - மறுத்துண்ணின்

ஊறுபாடு இல்லை உயிர்க்கு''

# தட்டுவன்கொட்டி கிராமம்

திரு.ஐ பத்மநாதன்,
தட்டுவன் கொட்டி

இலங்கையின் வடபகுதியில் கிளிநொச்சி மாவட்டத்திலே ஏ 9 வீதியிலிருந்து கிழக்குத்திசையில் 2 கி.மீற்றர் தூரத்தில் தெரியும் சிறிய வீடுகளைக் கொண்ட தட்டுவன் கொட்டிக்கிராமம் மிகப்பழமை பொருந்தியதாய் ஒல்லாந்தர் காலத்தில் காணப்பட்ட அதே மாவிலங்கு மரத்தடியில் கண்ணகை அம்மன் கோயில் கொண்டதாக விளங்குகின்றது.

இக் கிராமம் தனக்கென ஒரு கட்டமைப்பையும் தங்களது மரபு விழுமிய பண்பாட்டு பாரம்பரிய கோலங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனிப்பெரும் பெருமை வாய்ந்த ஒரு பழமைக்கிராமம், கலப்பற்ற சிந்து புரத்திலிருந்து வந்து குடியேறி நீண்ட கால மரபுகளை கைவிடாது தங்கள் பரம்பரைக்கு தமக்கே உரித்தானபண்பாட்டு, பாரம்பரிய கோலங்களை தையளித்து வாழ்ந்து வருகின்றனர்.

சமயம் சைவசமயம். காணும் மக்களது நெற்றியில் விபூதிக்குறிகளும், விபூதிப்பட்டையும் திகழும். மொழி கலப்பற்ற துய தமிழ் புராண இதிகாசக்கதைகளை கேள்வி வழியாக முறைமை சாரக்கல்விக்கு உட்பட்ட மூத்தவர்கள் பாடியும், ஆடியும், கதைசொல்லியும், கூத்தாடியும் வாழ்கின்றனர். அவர்கள் கூடுதலாக ஆடும் கூத்து காத்தவராயன்கூத்து, கோவலன் கண்ணகி இவற்றை தற்பொழுதும் விடிய, விடிய ஆடி மகிழ்வர்.

இவர்களது தொழில் வருடம் முழுவதும் தோட்டமும், வயல் விதைப்பும், உப்பளத்தில் உப்பளக் கூலித் தொழிலும், மேற்பார்வைத் தொழிலும், இறால் அகப்படும் காலத்தில் 2மாத காலத்திற்கு இறால் பிடித்துமே தமது வாழ்வாதாரத்தை நடாத்தி வருகின்றனர்.

மழைகாலத்திலும், அதனை அண்டிய காலங்களில் துரவு வெட்டி அதன் உள்ளே நிறைந்து இருக்கும் தண்ணீரை சிறு பட்டை மூலம் மிளகாய், கத்தரி, புடோல், பாகல், நீற்றுப்பூசனி, சக்கரைப்பூசனி, மரவள்ளிக்கழங்கு, வற்றாளைக்கிழங்கு ஆகிய தோட்டப்பயிர்களை விளைவிப்பதில் வல்லவர்கள். மானாவாரி நெற்செய்கையும் அதன் விளைவும் தான் கூடுதலான நிலப்பரப்பில் விளைவிக்கப்படுகின்றது. மழை பொய்க்கும் காலங்களில் இவர்கள் வாழ்க்கையும் பொய்த்து விடும். நெல் விளைந்தால் அவற்றைக் களஞ்சியப்படுத்த இடவசதியின்றி குடியிருக்கும் வீடு முழுவதும் நெல் மூடைகள் அடுக்கப்பட்டிருக்கும்.

**தட்டுவன்கொட்டியும் பழமையும்:**

1938ஆம் ஆண்டிற்கும் அதற்கு முன்பும் வெள்ளைக்காரர் இக்கிராமத்தை விட்டுவைக்கவில்லை. அவர்கள் ஏ9 வீதியில் இருந்து நேரான பாதையை தட்டுவன்கொட்டிக்கு அமைத்து சென்று பழைய கண்டி வீதி எனக் கூறி முரசுமோட்டை ஊடாக முல்லைத்தீவுக்கு சென்றும் வந்தனர். அவர்களது பார்வையில் நிறைய பிள்ளைகள் விடுப்புப் பார்த்தனர். அப்பிள்ளைகளை கண்ட இடத்தை வர்கள் 'பிள்ளை மடம்' எனவும் பெயர் வைத்திருந்தனர். இதனை கண்ணகை அம்மன் கோவில் உறுதியில் 'பிள்ளை மடம் கண்ணகை அம்மன்' எனக் குறிப்பிடப்பட்டிருப்பது உறுதி செய்யும்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்ட தற்போதுமுள்ள மாவிலங்கு மரத்தடி வழியாகவே மக்கள் புளியம்பொக்கணை, கண்டாவளை, மடுக்கரைக்கு சென்று வந்தனர். பிள்ளைமடம் றோட்டில் வைத்து அன்னதானம் கொடுத்தனர். அவர்கள்

**கண்ணகை அம்மன் தோன்றிய வரலாறு**

தட்டுவன் கொட்டி வழியே சென்ற மக்கள் மாவிலங்கு மரத்தடியில் களைத்துப் போய்; உறங்கிய பொழுது அம்மரத்தடியின் மூலையில் இரத்தம் வழிந்தது. அதனைத் துடைத்து விட்டு மக்கள் படுத்தனர். படுத்திருக்கும் பொழுது அம்மன் கனவில் தோன்றி அந்த இடத்தில் வைத்து தன்னை கோவில் கட்டி ஆதரிக்கும் படி கூறினாள். அக்காலத்தில் வைத்த முத்துமாரி அம்மன் சிலை இன்றும் காணப்படுகின்றது. அதனை ஒட்டியே மக்கள் குடியேறியும் வாழ்ந்தனர். சிறிது காலத்தில் குடியிருப்புக்களில் தீ பிடிக்கவே மக்கள் அவ்விடத்தை விட்டு அகன்று தற்போதுள்ள இடத்தில் மகக்கள் நிரந்தரமாக குடியேறினர்.

அதே நேரத்தில் ஆனையிறவு ஏரியை நன்னீராக்குவதற்கு 1996ம் ஆண்டு ஆனையிறவு இரும்பு பாலத்தை அகற்றி மண் போட்டு (தற்போதைய) தாராக்கி முற்றாக கடல் நீர் ஏரிக்கு வராமல் தடுத்தும் விட்டனர். இதனால் சுண்டிக்குள அணையிலிருந்து கோவில் உள்ள இடம் முழுதாக மழை காலத்தில் வெள்ளத்தில் இன்றும் மூழ்கின்றது. மூழ்கியது.

**ஆனையிறவு என்ற பெயர்**

வெள்ளையர்கள் யானை ஒன்றை வீதி வழியாக கொண்டு வந்தபொழுது, கொண்டுவந்த யானை ஆனையிறவு கடற் சேற்றுக்குள் மாட்டிக்கொண்டது. வெள்ளையர் கடும் முயற்சி செய்தும் வெளிக்கொண்டு வரமுடியாமற் போனது. வெள்ளையர் ஒன்றும் செய்ய முடியாது தட்டுவன்கொட்டி கம்புளியன் ஆலயத்திற்கு வந்தனர். அங்கு கலையாடிய சுவாமி விடிவதற்கு முன்பு வெளியேற்றப்படும் என்று கூறி, '18 வரிசை' தரவேண்டும் என்றும் வாக்குப் பெற்றுக்கொண்டனர். அதன்படியே யானையும் வெளிக் கொண்டு வரப்பட்டு 18 வரிசையும் தட்டுவன்கொட்டி மக்கள்

பெற்றுக்கொண்டனர். அதிலிருந்து அவ்விடம் ஆனையிறவு (Elephant pass) எனப் பெயரிடப்பட்டது. (யானை- ஆனை) (இறவு- தாழ்வுற்ற சமயம்) இப்பதினெட்டு வரிசை இன்றும் வற்றாப்பளை பொங்கலில் இடம்பெறுகின்றது.

### தட்டுவன்கொட்டி என்ற பெயர்

பிள்ளை மடப் பழைய கண்டிப் பாதையால் சென்று வந்த மக்கள் குதிரை வண்டி, மாட்டு வண்டி, நடைபாதை மூலம் முல்லைத்தீவு சென்றனர். நீண்ட காட்டு வழிப்பாதையான படியால் இளைத்துக் களைத்த மக்கள் அங்கு படுத்து சமைத்து சாப்பிட்டனர். சாப்பிடுவதற்கு பனை ஓலையில் தட்டுவம் கோலி சாப்பிட்டு விட்டு சாப்பிட்ட தட்டுக்களை வைத்த மரங்களில் கட்டித் தூக்கி விட்டுச் சென்றனர். இதனைப்பார்த்த வெள்ளையர் அவ்விடத்தை தட்டுவம் கட்டி என்று அழைத்தனர். காலக்கிரமத்தில் 'தட்டுவம் கட்டி' 'தட்டுவன்கொட்டியாக' மாறியுள்ளது.

### தட்டுவன் கொட்டியும் பள்ளியும்

1938ம் ஆண்டு பள்ளிக் கூடம் அமைக்க எண்ணம் கொண்ட மக்கள் கந்தர் முருகரை அணுகி காணி பெற்றுக் கொண்டனர். அக்காணியில் சைவமும் தமிழையும் கட்டிக்காக்க இந்து போட் இராசரத்தினம் பெரியாரை நாடி சைவப்·பாடசாலையை கொட்டிலில் அமைத்து கண்ணகி அம்மன் தமிழ் வித்தியாலயம் எனப் பெயரிட்டனர். இப்பாடசாலைக்கு வட்டுக்கோட்டை வணிகர் சமூகத்தை சார்ந்த கந்தசாமி, தெய்வேந்திரம்பிள்ளை, சுப்பிரமணியம் ஆகியோர் கிழமை நாட்களில் தங்கி நின்று கற்பித்து வார முடிவில் ஊருக்குச் செல்வர். ஊரவர்கள் தங்கள் உறவினர்கள் ஆனபடியால் உணவு, உறையுள் கொடுத்து ஆதரித்தனர். இப்பாடசாலையை அரசு 1953ல் பொறுப்பேற்றது முதல் அரசினர் பாடசாலையானது. திரு.ஐயம்பிள்ளை அவர்கள் அரசுக்கு தனது அப்பாவின் காணியை கையளித்து உறுதி எழுதிக் கொடுத்தார். 1986ம் ஆண்டு வரை ஐந்தாம் ஆண்டு வரை இயங்கிய அப்பாடசாலை வட்டாரக்கல்வி அதிகாரி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை ஆறாம் வகுப்பு தொடக்க அனுமதித்ததால் அது க.பொ.த சாதாரணதரப் பாடசாலையாக இயங்குகின்றது.

### யுத்தத்திற்கு முன்பு

மக்கள் பல்முயற்சி, பல தொழில் செய்து வாழ்வாதாரத்தை காப்பாற்றினர். ஆனையிறவு உப்பளத்தில் வேலை பார்த்தனர் (மேற்பார்வை, கூலி வேலை) தட்டுவன் கொட்டி காட்டுக்குளம் விளா ஓடை, நாவற்கொடியான், இரதாலை, வவுனி, ஊரியான், கோடைப்பிட்டி, கோரக்கன்கட்டு, வன்னியம்பிட்டி பகுதிகளில் உறுதிக் காணிக்கு உரிமை கொண்டு நெற்செய்கை, தோட்டம் செய்தனர்.

இவற்றின் விவசாய பொருட்களை சாவகச்சேரி, கொடிகாமம், சந்தைப்பகுதி களுக்கு வண்டில் மூலம் கொண்டு சென்றனர். பின்னைய காலத்தில் ஆனையிறவும் புகையிரத நிலையத் திற்கு வரும் புகை வண்டி மூலமும்,

பஸ் மூலமும் கொண்டு சென்றனர். தட்டுவன்கொட்டி பாலைக்காட்டில் பிடுங்கும்பாலைப்பழங்களைகடகத்தில் எடுத்து சென்றனர். இறால் பிடிப்பதின் மூலமும் பணம் சம்பாதித்தனர். இது நிரந்தரத் தொழில் அல்ல இறால் பிடிப்பு மாணவர்களது கல்வியை பாதித்தமை யால் அதை இல்லாதொழித்தனர்.

**தண்ணீர் வசதி**

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை குழாய் நீரில் தண்ணீரை எடுத்து தலையில் சுமந்து தட்டுவன்கொட்டிக்கு குடிக்கும் நீரை எடுத்து வந்தனர். அப்பொழுது இரணைமடு கழிவு நீர் குளிப்பதற்கு மக்குவாய் குளத்திற்கு வந்தமையால் மக்கள் குளித்துக் கொண்டனர். நாயாறு மூலம் வரும் தண்ணீர் ஆடு, மாட்டிற்கு குடிக்க பயன்பட்டது. குடிதண்ணீரை ஆனையிறவு கிராம அலுவலகம் பரந்தன் இயக்கச்சியிலிருந்து ஏற்றிக் கொடுத்தனர்.

இங்கு இறால் கொள்வனவு செய்து கொண்ட 'சீநோர்' ஸ்தாபனம் தண்ணீர் வசதியை முழு மனதுடன் செய்து கொடுத்தது. இயக்கச்சியில் 10ஏக்கர் காணியை தட்டுவன்கொட்டி மக்களது பேரில் வாங்கி உரிமையாகக் கொடுத்தனர். அங்கு 12 அடி விட்டமுள்ள வற்றாத கிணற்றை வெட்டி கட்டி விட்டனர். அதிலிருந்து உயர்த்திக்கட்டிய தண்ணீர் தொட்டிக்கு குழாய் (3 விட்டம்) மூலம் தட்டுவன்கொட்டிக்கு தண்ணீரை கொண்டு வந்தனர். தட்டுவன் கொட்டி மக்கள் தங்கள் மனித உழைப்பின் மூலம் வாய்க்கால் வெட்டி இயக்கச்சியில் இருந்து தட்டுவன் கொட்டிக்கு நீர் கொண்டு வந்து சேர்த்தனர்.

**நெற்செய்கையும் நீர்ப்பாசன வசதியும் விவசாய றோட்டும்**

இங்குள்ள குளங்கள்

1.பறவைக்குளம், 2.வவுனிக்குளம், 3.காட்டுக்குளம், 4.இருதாலைக்குளம், 5.மக்குவாய்க்குளம், 6.ஊரியான்குளம் புதிதாக குளம் அமைக்கக் கூடிய ஆத்துவெட்டுவான் தாழ்வுப்பகுதி குளம் ஆக்கப்பட்டு, ஆழமாக்கப்பட்டு நீர்ப்பாசன வசதியை இரணைமடு கழிவு நீர் மூலம் சிறுபோகத்திற்கு 1500 ஏக்கர் நிலமும் விவசாயச் செய்கைக்கு அரசாலே அமைத்து தரப்படவேண்டும், விவசாயப் பாதை அமைத்துதரப்பட வேண்டும். நீர்ப்பாசன பொறியியலாளர்கள் எங்கள் வறண்ட பகுதியை வளமாக்க அடி மட்டத்திற்கு வந்து நீர்ப்பாசனத்திற்கு நிதியை ஒதுக்கி செயற்படுத்துமாறு தாழ்மையாக இருகை கூப்பி வேண்டுகின்றோம்.

கிளிநொச்சியில் பெய்யும் மழை வெள்ளமாகி அங்கிருந்து பழைய நாயாறு, கோடைப்பிட்டி ஆறு, சவர் ஆறு, பிரமந்தன்குளம், ஆகியவற்றில் தேங்கி கழிவு நீராகி அனைத்தும் ஆனையிறவு ஏரியை வந்தடைகின்றது. இவ்வேரி 13மைல் நீளமும் 2x2 மைல் அகலமும் கொண்டது. இந் நீரேரி நிரம்பி வெள்ளக்காடாகி அண்டிக்குள அணையை வெட்டி விட வேண்டும். வெட்டிவிட மழை நீரும் கடலோடு கடலாக சங்கமமாகின்றது.

இவ் ஏரியை ஆழமாக அகலமாக வெட்டி நீரை இவ் ஏரியில் தேக்குவதே 'ஆறுமுகம் திட்டம்'. அதனை

அமுல்படுத்தினால் சுண்டிக்குளம் அணை திறக்க வேண்டிய தேவை இல்லை. ஆனையிறவு ஏரி இன்னொரு இரணைமடுக்குளமாகும். அத்தகைய பெரும் குளத்தை அமைத்தால் ஆனையிறவு உவர்ப்பு நிலம் நன்னீர் நிலமாகும், உவர்ப்பு நிலம் விவசாய நிலமாக மாறும். நிலத்தடி நீரும் இதனால் இவ்விடத்து நிலம் மட்டுமல் லாமல் யாழ் மாவட்ட நிலத்தடி நீரும் நன்னீராகும்.

**பாதையும் தட்டுவன் கொட்டியும்**

தற்போதுள்ள மண் கிரவல் றோட்டு, பாலம் இருந்த காலத்தில் தட்டுவன் கொட்டிக்கு இடப்பட்ட மண் அணை. அது பாதை அல்ல. இவ்வணையை வைத்தே உப்புப் பாத்தியில் தண்ணீரைக் காய்ச்சினர். அக்காலத்தில் உப்பளத்திற்கு பொறுப்பாக இருந்த மூளாய் கனகநாயகத்தால் இடப்பட்ட மண் அணை. இவ்வணைக்கே அரச அதி காரிகள் பழைய கிழவிக்கு முகத்திற்கு மேக்கப்பண்ணி மினுக்குவது போல காசு ஒதுக்கி சீர்ப்படுத்தி வருகின்றனர். அது ஓர் மக்கள் செல்லக் கூடிய பொதுப்பாதையல்ல படுபயங்கர பாதை.

முன்பு மக்கள் உண்மையாக பாவித்த பழைய பாதை ஆனையிறவும் பாடசாலைக்கு முன்பாக தொடர்ச்சி மேட்டுப்பாதையாக தட்டுவன் கொட்டி பழைய பாடசாலை அருகால் 1கிலோ மீற்றர் தூரமாக இருந்தது. மக்கள் பார்வைக்குட்பட்டு அப்பாதையையே பாவிக்கப்பட்ட பாதை. வெள்ளம் இருந்த இடத்தை மக்கள் சிறு தோணி மூலம் கடந்து சென்றனர். வெள்ளம் வற்றியதும் 1/4 மீற்றர் தூரத்தை வெள்ளத்தில் நடந்து சென்றனர்.

அப்பாதையே எமக்கு அமை த்து தரப்பட வேண்டும். பாராளும ன்ற உறுப்பினர்களை கடிதம் மூலம் எமது கிராம முன்னேற்றச் சங்கம் வேண்டியது முதல் அமைச்சரையும் வேண்டி நின்றோம். எமது கிராமம் மேம்பட பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக அமைத்தல் வேண்டும் என்பதே எங்கள் எதிர்பார்ப்பாகவுள்ளது.

1.பழைய 31/2கிலோமீற்றர் தூர உப்பளஅணைக்கு அதிக நிதியை செலவு செய்யாமல் ஏ9 வீதியில் இருந்து 1.3கிலோமீற்றர் தூரமுள்ள நேரடிப்பாதையை அமைக்க வேண்டும்.

2. மின்சார வசதியும் இவ்வீதி யூடாகவே விநியோகிக்க வேண்டும்

3.நீர் வசதியையும் இதே பாதையால் குழாய் அமைத்து பரந்தன் உயர் நீர்த்தாங்கி மூலம் விநியோகிக்க வேண்டும்;.

4.உப்பளவேலைக்கு தொழிலாளியாக ஆட் சேர்க்கும் பொழுது எமக்கு கோட்டி அடிப்படையில் வேலைக்கமர்த்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

5.நெற்செய்கைக்கு குளம் தொட்டு வளமாக்கி சிறுபோகச் செய்கைக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.

நன்றி

# 2014 வளை ஓசை இதழுக்கான வாழ்த்துக்கள்

## 15.06.2014 அன்று கண்டாவளை வெல்லநிலைய கட்டடத் திறப்புவிழாவின்போது
















கண்டாவளை பிரதேச செயலகமும் கண்டாவளை பிரதேச
கலாச்சாரப் பேரவையும் இணைந்து நடாத்தும்
கலாச்சாரவிழாவும் வளைஓசை இதழ் வெளியீடு
சிறப்புற அமைய எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.



# மக்களுக்காக நாம்...?

## கோணமலை சேகர்

உழவனூர், புன்னைநீராவி.

ஐயா நீங்கள் இதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் நாங்கள் மேலிடத்திற்கு அறிவித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றபடி வந்தார் அவர். அவருடைய ஆதங்கம் நியாய மானதுதான். ''குளத்து நீரை நம்பியே நாங்கள் சீவிக்கின்றோம். அந்த நீர் எங்களுக்குரியது. அவங்கள் ஆண்ட காலத்தில் எங்களால் ஒண்டும் செய்ய முடியாமல் போய்விட்டது. இப்போது நாங்கள் விடமாட்டோம். நீங்கள் பார்வையிட்டு வயல்களை அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தோட்டம் செய்து கொண்டு வந்தார்கள். நாம் விட்டு கொடுத்தோம். இப்போது வயல்கள் ஏக்கர் கணக்கில் செய்வதால் எமக்கு தண்ணீர் தட்டுப்பாடு வரும். ஆகவே நீங்கள் நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும்.'' என்று விடாப்பிடியாக நின்றார்.

விடயம் இதுதான் காலபோக வயல் அறுவடை முடிந்தவுடன் அந்தக் குளத்தில் அணைக்கட்டுக்கு கீழ் உள்ள வயல்களில் நெல்லை விதைத்து விடுவார்கள். இவர்களுக்கு நீர் பங்கு இல்லை. இவர்கள் அணைக்கட்டுக்கு மேல் பைப்புகளை போட்டு 'எயார்' மூலம் தங்கள் வயல்களுக்கு தண்ணீரை எடுத்து கொள்வார்கள். அவர்கள் செய்வது சட்டப்படி பிழை. ஆயினும் நான் சென்று வயல்களை பார்வையிட்ட போது இவற்றை எப்படி அழிப்பது ஒரு மாத வயது பயிராக அருமையாக காணப்பட்டது. தொடர்ந்து தண்ணீர் எடுப்பதை எப்படி தடுப்பது என எனக்குள் போராட்டம்.

விதைத்தவர்களை கூப்பிட்டு விசாரித்தேன் அவர்கள் பிழையை ஒத்துக் கொண்டனர் அடுத்த வாரம் பிரதேச செயலாளரிடம் விடயத்தை தெரிவித்தேன். அவர் கூறியதை எனக்குள் வைத்து கொண்டு பிரச்சினை கிளப்பியவரை சமாளித்து பார்த்தேன். அவரும் விடாப்பிடியாக இருந்தார். நானும் அடுத்த வாரம் நடவடிக்கை எடுப்பேன் என கூறியே காலத்தை இழுத்தடித்தேன். (இரண்டுக்கு மேற்பட்ட பிரிவுகளில் கடமையாற்றியதும் வசதியாய் போய்விட்டது) சித்திரை சிறு வெள்ளமும் கைகூடியதாலும் பயிர்களும் வளர்ந்து உரிய பலனையும் கொடுத்தது. அந்த நபரும் பின்னர் வரவில்லை. வந்தபோதும் இதைப்பற்றி கதைக்கவில்லை. குளத்தில் தண்ணீர் பற்றாக்குறையும் ஏற்படவில்லை. சட்டத்தை மீறி விதைத்த வயலை அழித்திருந்தால் பாவம் அந்த ஏழை விவசாயிகள். அந்த வருடம் காலபோகம். பொய்த்தது காலபோக வயல்கள் அழிந்தன. ஆயினும் அந்த ஜீவன்களும் அவர் அயலவரும் அரிசி பஞ்சமின்றி வாழ்கின்றனர்.

சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக ஏற்கனவே திருமணமான ஓர் ஆணை வாழ்க்கை துணையாக கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்ட அந்த பெண் மணிக்கு பெண் தலைமைத்துவ குடும்பம் என பதியப்பட்டிருந்தது. அந்தப்பெண் உணவு, உணவுஅல்லாத பொருட்களை பொதி செய்து தனது சிறிய ரக மோட்டார் சைக்கிள் மூலம் அண்மையில் உள்ள நகரங்களிலும் கிராமங்களிலும் விநியோகம் செய்து வரும் சுயதொழிலை செய்து வருகின்றாள். வீட்டில் மரக்கறி தோட்டமும் உள்ளது.

இவரின் சிறப்பு குணம் என்னவென்றால் தனக்கு கணவன் இல்லை என்றோ இதனால் எனக்கு நிவாரணம் அல்லது உதவியோ தேவை என கேட்டு வருவதில்லை. ஒருமுறை அவரின் இரண்டு சகோதரிகளையும் கூட்டிக்கொண்டு அலுவலகம் வந்தார். மூவரும் வங்கி கடன் பெறுவதற்கான சிபார்சு கடிதம் கேட்டு வந்தனர். ஏன் மூன்று பேருக்கும் ஒரே நேரத்தில் கடன் என்ன தொழில் செய்யபோகின்றீர்கள் என வினாவிய போது இப்பெண் கூறினாள் நான் செய்யும் உற்பத்தியை சந்தைப்படுத்துவதற்கு சிறிய ரக வாகனம் (பட்டா) ஒன்றை கொள்வனவு செய்யப் போகின்றேன். மூன்று பேரின் கடனையும் சேர்த்து முதலீடு செய்யப்போவதாக கூறினார்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. வாகனம் எடுத்த எத்தனையோ ஆண்களே தொழில் செய்ய முடியாமல் தவிக்கின்ற காலத்தில் ஓர் பெண் தன்னம்பிக்கையுடன் செயற்படுவது ஆச்சரியமே.

எதற்கெடுத்தாலும் உதவி கேட்டு வரும் மக்களோடு ஒப்பிடும் போதும் இப்படியான தன்னம்பிக்கையுள்ள பெண்ணின் முயற்சியை மனதார வாழ்த்தி கடிதம் கொடுத்தேன்.

அவர் மாற்றுவலு உள்ள ஓர் நபர் என்பதை அலுவலகத்திற்குள் நுழையும் போதே அறிந்து கொண்டேன். அவர் வந்த விடயத்தை நிறைவேற்றி கொடுத்து விட்டு அவரிடம் கேட்டேன் காலுக்கு என்ன நடந்தது என. 1995 யுத்தத்தில் போய்விட்டது என்றார். மேலும் யுத்தம் முடிவடைந்த பின்னர் புனர் வாழ்வு பெற்று வந்துள்ளதாகவும் தெரிவித்தார். என்ன தொழில் செய்கின்றீர்கள்? எனக் கேட்டதற்கு பல இடங்களிலும் தொழில் தேடிப் பார்த்தேன். என் போன்றோருக்கு தொழில் கிடைப்பது கஸ்றம் என்பதை அறிந்து கொண்டேன். இறுதியில் சுயமாக லூவாஸ் கட்டை (கதவு நிலை, ஜன்னல் நிலையில் பொருத்தும் பொருள்) செய்து கடைகளுக்கு வழங்குவதாகவும் வீட்டில் தோட்டம் செய்வதாகவும் இந்த வருமானம் மூலம் குடும்பத்தை நிர்வகிப்பதாகவும் கூறினார். முன்பு அவர் பொறுப்பான நிலையில் இருந்தவர் போன்ற தோற்றம் உடைய அந்நபரின் கண்களில் விடா முயற்சியும் வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற அவாவும் மேலோங்கி நிற்பதை கவனித்தேன்.

''கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்,
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்.''

என்ற வாக்கியம் நினைவில் வந்துபோனது.

மாலை மூன்று மணிக்கு வழமையாக கேட்கும் அந்த பாண் வண்டிகளின் இசை இன்றும் கேட்டது. வழமை போலவே அந்த முச்சக்கர வண்டி இன்றும் அந்த 'அபான்ஸ்' வாகனத்தை கட்டி இழுத்தபடி சென்றது. ஒரு வாரமாக அவதானித்துக்கொண்டு தான் இருந்தேன். ஏன் இப்படி? வாகனம் பழுது என்றால் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் கட்டி இழுப்பார்கள். தினமும் ஏன் இப்படி செய்கின்றார்கள் எனக்குள் வினா?

அந்த அபான்சில் பாண் விற்கும் தம்பியை கண்டு கேட்டேன் ஏன் வாகனம் பழுதா என்று? அதற்கு அவர் ,ஆம்! பழுதுதான் திருத்துவதற்கு பணம் போதாமல் உள்ளது. பணம் சேர்த்து கொண்டு திருத்தலாம் என்று இருக்கின்றேன். என்று கூறி எனது வாகனத்தை விசுவமடு வரை கட்டி இழுத்து விட்டு அந்த ஆட்டோகார அண்ணன் றெட்பானா போய்விடுவார். நான் விசுவமடுவில் வியாபாரம் முடித்து விட்டு நிற்பேன். அவர் திரும்பி வரும் போது இழுத்து கொண்டு வந்து விடுவார் என கூறி என் வினாவிற்கு முற்று புள்ளி வைத்தார். மற்றவனுக்கு உதவும் மனப்பான்மை செத்துப்போகவில்லை என்பதை கண்டுகொண்டேன். மனிதம் உள்ள மனிதர்கள் இன்னும் வாழ்கின்றனர் நாளையும் வாழ வேண்டும்.

இந்த கிராமத்தில் எல்லா வீட்டிலேயும் கசிப்புதான் ஐயா. குடித்து விட்டு மனிசி எது? மகள் எது? என்று தெரியாமல் நடந்து கொள்கிறார்கள். பெரிய அநியாயமாகவுள்ளது. களவும் அதிகரித்து விட்டது. புதிசா வந்திருக்கும் நீங்கதான் ஐயா நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் உங்களுக்கு தகவல் தாரேன். என்ற படி அந்த நபர் என்னிடம் வந்தார்.தன்னை குறித்து ஓர் நல்ல அபிப்பிராயம் ஒன்றை என்னிடம் பெற்று கொள்வதே அவரது நோக்கமாயிருந்தது. நான் சாதாரணமாக கதைத்து அவரை அனுப்பி விட்டேன். பொதுவாக புதிதாக ஒரு பிரிவிற்கு சென்றால் பலரும் G.S இடம் பழகுவதற்கும் நட்பு கொள்வதற்கும் வருவது வழமை. இவரும் அப்படித்தான் என்பதை அறிந்து கொண்டேன்.

ஒருநாள் தற்செயலாக செல்வது போல் அவரின் வீட்டிற்கு சென்றேன் .கதைத்து கொண்டே நோட்டம் விட்டேன். சில தடயங்களை கண்டு கொண்டேன். பேசாமல் வந்து விட்டேன். நாலாம் நாள் கையும் மெய்யுமாக பொலிசார் பிடித்து சென்றனர். தண்டப்பணம் செலுத்தி வந்த அவர் என்னை கண்டாலே தூர விலகி செல்கின்றார்.

ஐயா நீங்கள் செய்த உதவியை என்றும் மறக்க மாட்டோம் என்று கூறிய அப்பெண்ணை பார்த்த போது எனக்கு உடனடியாக அவரை ஞாபகப்படுத்தி கொள்ள முடியவில்லை. பின்னர் அவர் விடயத்தை கூறியபோதுதான் ஞாபகம் வந்தது. அது 2010ஆம் ஆண்டு எனது அலுவலகத்திற்கு இவரும் இவருடைய

தம்பியும் எனக்கு அறிமுகமான ஓர் நபருடன் வந்தனர். அவர்கள் பிரச்சினை என்னவென்றால் இப்பெண்ணுக்கு 2009 இல் மருத்துவ மாது தொழில் கிடைத்துவிட்டது. அதே நேரத்தில் 'பிடி' பிரச்சினை. அதில் இருந்து தப்புவதற்கு ஓர் வாழ்க்கை துணை. பின்னர் இடப்பெயர்வு. செட்டிகுளம் முகாம் வாழ்க்கை. மருத்துவமாது பயிற்சியிலும் இணைந்தாயிற்று. இதற்கிடையில் திருமண எழுத்தும் எழுதியாயிற்று. பயிற்சியின்போது தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கும் படி கூறியபோது அடையாள அட்டை தொலைந்தமையை கூறி சமாளித்த போதும் மீள்குடியேறிய பின்னர் அடையாள அட்டை கேட்டு அவர் அலுவலகத்தில் நெருக்கடி அவரின் பிரிவுக்கான 'யிஎஸ்சிடம்' அடையாள அட்டை விண்ணப்பிப்பதற்கு சொன்றபோது பிறப்புச்சான்றிதழுடன் திருமண சான்றிதழும் சமர்ப்பிக்க வேண்டுமென கூறி விட்டார். மருத்துவமாது பயிற்சியில் திருமணமானவர்களை சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். இவர் திருமணமாகாத நபர் என்று கூறியே சேர்ந்துள்ளார். கணவரின் பெயரையும் சேர்த்து அடையாள அட்டை எடுத்தாள். வேலை போய்விடும் தண்டப்பணமும் செலுத்த வேண்டிய நிலை. தங்கள் 'யிஎஸ்'சிடம் விடயத்தை தெளிவு படுத்தி கூறவும் பயம். அவர் ஏற்றுக்கொள்ள மாட்டாத மனோபாவம். கொண்டவர். வெளிமாவட்ட 'யிஎஸ்'சிடம் கேட்ட பொழுது கணிசமான பணம் கேட்டுள்ளார். இந் நிலையில் என்னிடம் வந்து உண்மையை சொல்லி உதவும் படி கேட்டார். அவர் தம்பியும் அக்காவின் வேலை போகாமல் பார்த்து உதவி செய்யும் படி கேட்டார். எனக்கு இவர்கள் புதியவர்களாக இருந்த படியால் ஆள் மாற்றம் எதுவும் இருக்குமோ என்ற பயம். உதவி செய்ய போய் ஆபத்தில் போய் முடியுமோ எனவும் சிந்தனை. அடுத்த வாரம் வரும்படி கூறிவிட்டு விசாரித்து பார்த்ததில் அதில் பொய் ஒன்றும் இல்லை என்று தெளிவாகியது.

குறித்த யிஎஸ்சிடம் நானே சொல்லி உதவும் படி கூறவும் மனவரவில் அவர் சீனியர் யிஎஸ். அதே நேரம் திருமணமான பெண் கட்டாயம் கணவன் பெயரை தனது அடையாள அட்டையில் இணைக்க வேண்டும் என்று இலங்கையில் அப்படியொரு சட்டமும் இல்லை; என முன்னைநாள் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றி மறைந்த சீ.சிவசொருபநாதபிள்ளை அவர்கள் கூறியதும் ஞாபகத்திற்கு வந்தது. தகப்பனின் பெயரில் அடையாள அட்டை விண்ணப்பித்து கொடுத்தார். நீண்டகாலமானபடியாலும் வேலைப்பளு காரணமாகவும் இவற்றை மறந்தும் விட்டேன்.


நாம் மறந்தாலும் எங்களை மறக்காத மக்களே எங்கும் உள்ளனர்.


திக்கெட்டும் பரவெட்டும் இன்னிசை "வளை ஓசை"

சிறப்புற வாழ்த்துவோர்

# "யாழ் அரசி உணவகம்"

உரிமையாளர் : தவம்





வெளிக்கண்டல்,
கண்டாவளை.

"வளை ஓசை" நாதம்- 4 மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்!

# R.V பந்தல் சேவை

எமது சேவைகள்:
மணப்பந்தல் சேவை,மணப்பெண் அலங்காரம்

## R.V புடவை வாணிபம்

Tel:077 2881184

முல்லை வீதி,
தருமபுரம்.

NSB

**National Savings Bank**

பல்வகையான சேமிப்புக் கணக்குகள்

நிரந்தர வைப்புக் கணக்குகள்

24 மணிநேர ATM சேவை வசதிகள்

வீட்டுக் கடன் வசதிகள்

Shopping card வசதிகள்

சிரேஸ்ட பிரஜைகளுக்கான உயர்வட்டி வைப்புக்கள்

**சிறுவியாபார முயற்சிகளுக்கான இலகு கடன் வசதிகள்**

**"தேசிய சேமிப்பு வங்கி"**

**கிளிநொச்சி.**

"வளை ஓசை"

மலர் அழகுற
வெளிவருவதற்கும்
"கலாசார விழா" சிறப்புறவும்
அனுசரணை வழங்கிய
அனைவருக்கும் எமது
மனமார்ந்த நன்றிகள் !



**பிரதேச கலாசாரப் பேரவை,**

பிரதேச செயலகம்,
கண்டாவளை .




பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், கண்டாவளை, கிளிநொச்சி.


NISA Arts 077 38 49 808
www.nisaart.com